Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

டிச. 21 - 27 - 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 692



## அடிமை விலங்கொடிக்கும் புதிய மலையகம்


## நிபுணர் குழுக்களின் முன்யோசனைகளுக்கு ஆப்பு வைக்கும் பின் யோசனைகள்!







## கிழக்கில் கருக்கட்டும் போர் மேகம்



மௌனம் போவோம்! ரசிப்போம்!!

கமலின் அவஸ்தை! சூர்யாவின் அலட்சியம்!

கோடம்பாக்கத்துக்குக் குட்பை நயன்தாரா முடிவு!

சுனாமியின் நினைவுகளில்...

# ஆன்மீகம்


## இளம்பிறை சூடிய இனியவன்

"இளம்பிறை சூடிய இனியவன்தன்னை
வலம்வரும் நாளே நன்நாளாம்."

இதன் பொருளை நோக்குமிடத்து இளம்பிறையினை தன் தலையில் சூடிக்கொண்டவரான சிவனின் அடியினை வணங்கி வலம் வரும் நாளே நம் வாழ்க்கையில், வீணாகக் கழிந்துபோன நாட்களை விட, நன்நாளாகும் என்று கூறிவைத்தார் போலும்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வழிபாடுகள் எல்லாவற்றிலும் மன அமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே மனிதன் வாழ்கிறான். ஆயினும் சிவ வழிபாட்டின் மகத்துவத்தை மேல் நாட்டவர்கூட வியந்ததுண்டு. அப்படியிருந்தும், எத்தனையோ அர்த்தமற்ற செயல்களில் வீணே காலத்தைக் கழிக்கிறவர்கள் "எத்தால் நினைக்கின் மனத்துன்னை" என்ற நிலையில் இல்லாவிடிலும் "ஒருநாள் ஒரு தரமாயினும் ஒரு திருப்புகழ் பாடுவாய் மனமே" என்ற நிலையிலாவது இளம்பிறை சூடியவனை (சிவனை) நினைத்தால் துன்பநிலை மாற வழி தரும் என்ற ஆன்றோரின் வாக்கை நினைப்பதில் நிச்சயம் மன அமைதி அடைவார் என்பதில் ஐயமென்ன?

- என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.



## கர்த்தரின் கிருபை வேண்டும்!

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்" (சங்கீதம் - 23:1).

ஆம்! பிரியமான சகோதர, சகோதரிகளே, தன் மந்தைகளில் ஏதேனும் ஒன்று வழி தவறிப்போய் விடக்கூடாது என்று மேய்ப்பன் எவ்வளவு கண்ணும் கருத்துமாகக் கவனித்துப் பராமரிக்கிறானோ, அதுபோல தன் மக்களாகிய எம்மில் எவரேனும் வழி தவறி சன்மார்க்கத்தை விட்டு, துன்மார்க்க வழியில் போய்விடக் கூடாது என்றே கர்த்தராகிய நம் ஆண்டவர், நம்மைப் பராமரிக்கச் சித்தம் கொண்டுள்ளார். அவர் எம்மைப் பராமரிக்கும் மேய்ப்பராக இருக்கும் போது தாழ்ச்சி என்பதே கிடையாது.

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." (சங்கீதம் - 23:6)

தேவனின் கிருபை இருக்குமானால் துன்பம் எம்மைத் தீண்டாது; தொல்லைகள் நம்மைத் தொடராது.

-எஸ். ரிஷாந்தி, வத்தளை

## ஐக்கியத்தின் சின்னம் ஹஜ்!

ஹஜ்ஜின் மூலம் ஒரு நாடு, தனது அயல் முஸ்லிம் நாடுகளின் போக்கினை அறிந்துகொள்ள முடியும். நாடுகளிடையேயான பிரச்சினைகளையும் கூட சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம்.

ஹஜ் மனித சமுதாயத்தின் ஐக்கியத்தின் மாபெரும் சின்னமாகும். அங்கு நாம் நிறம், செல்வம், அந்தஸ்து, மொழி போன்ற எமது பேதங்களைத் துறந்து படைத்தோனின் குரலுக்குச் செவிமடுக்கின்றோம்.

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர், மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக்கொள்வதற்கில்லை. எனினும்) உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கிறானோ, அவன்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்.

(அல்குர் ஆன் 49:13)

-முஹம்மது ஹஸனி, கல்முனை -07

## கவிதைப் போட்டி இல.689



### பரிசுக்குரிய கவிதை

### குப்பைதான் குக்கர்!


சொந்த
இடத்திினிலே
எங்களுக்குக்
குந்தக்
குடிலில்லை!

வெந்த
உணவுண்ண
வெட்டையிலே
அடுப்பில்லை!

கழிவுக்
குப்பைதான்
எங்களின்
குக்கர்!


- பாண்டியூர். பொன்.
நவநீதன், கல்முனை.

# கவிதைப் போட்டி இல.692



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.12.2006.

கவிதைப் போட்டி இல.692
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



### வறுமை!

துள்ளித் திரிந்து
பள்ளி சென்று
பிறருக்கு உணவு கொடுத்து
நாம் மகிழ்ந்த காலம் போய்
வறுமையில் முடங்கி
சிக்குன் குன்னியாவோடு
குப்பையில் உணவு தேடும்
காலம் வந்ததேனோ....?

– ந. சஜந்தநிதி,
பாண்டியன்குளம்.

### நிலை!

நாடு அபிவிருத்தி
அடைந்தாலும்
சமாதானம் கிடைத்தாலும்
எங்கள் நிலை
இப்படியேதானிருக்கும்.....!

– மர்ஸியா நாபிர்,
பேருவளை.

### யுத்தவிளைவு!

எங்கள் வாசலில்
பயந்து பயந்துதான்
விளையாடுகிறோம்
யுத்த விளைவு
பயங்கரம் (ஐயா...)

- காமீம். செய்னுலாப்தீன்,
கிண்ணியா – 5.

### நாமெல்லோ!

பட்டினியில் பதைக்கின்ற
பாவிகளும் நாமெல்லோ!
பாதகரின் போரினிலே
பாதிக்கப்பட்டவரும் நாமெல்லோ!
வீதிக்கு வந்துவிட்டோம்
வீட்டிற்கு வழியில்லை!
தீராத பசி தீர்க்க
தெருத் தெருவாய் திரிகின்றோம்!

- வி. சாருபன்,
மட்டக்களப்பு.

### அகதிகள்

அறுபது ஆயிரம் சம்பளமாம் நன்மன்றத்
தலைவர்களுக்கு.
ஆறுதரம் உண்ணலாம் தினமும் அவர்கள்.
அகதிகள் நாம், ஆறு நாளைக்கு ஒரு
முறைதான்
உண்ணலாம்.

– சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### தஞ்சம் புகுந்தேன்!

தஞ்சம் புகுந்தேன் குப்பை மேட்டில்
தாய் இழந்தேன், தந்தை இழந்தேன்
உறவிழந்தேன், சுற்றம் இழந்தேன்
இறுதியில் தஞ்சம் புகுந்தேன்
குப்பை மேட்டில்.

– பொ. பாலராணி,
தோட்டவெளி.

# உங்கள் பக்கம்

## கொழும்பு தெற்கு சுகாதாரப் பிரிவு அதிகாரிகளின் கவனத்திற்கு

**தற்போது** நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிக்குன் குன்யா என்ற வைரஸ் காய்ச்சல் பரவிவருவது அனைவரும் அறிந்த விடயம். குறிப்பாக தலைநகரத்திலே இந்தக் காய்ச்சலால் பெருமளவிலானோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நோயானது நுளம்புகள் மூலமே பரப்பப்படுகிறது. இக்காய்ச்சலை உடனடியாகக் கட்டுப்படுத்த எவ்வித மருந்துகளும் இல்லாத காரணத்தினால், இந்நோயை மேலும் பரவாது தடுப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய உடனடி நடவடிக்கை நுளம்புகளை ஒழிப்பதுதான் என்று சுகாதார அதிகாரிகள் கூறுகிறார்கள். எனவே இப்போதைக்கு நாட்டின் சகல பகுதிகளிலும் நுளம்புகளை ஒழிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதிகாரிகள் செயற்படுவதாகத் தெரியவில்லை. எமது பகுதியில் சிக்குன் குன்னியா காய்ச்சலால் இதுவரையில் பல நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனினும் இதுவரை எமது பகுதியில் நுளம்புகளை ஒழிப்பதற்கான எவ்வித மருந்துகளையும் சுகாதாரப் பிரிவினர் விசிறவில்லை. எனவே பாரபட்சமின்றி சகல இடங்களிலும் நுளம்புகளை ஒழிப்பதற்கு சுகாதார அதிகாரிகள் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்டவர்களில் நானுமொருவன் என்ற வகையில் சுகாதார உத்தியோகத்தர்கள் இவ்விடயத்தைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

–எ.ஜே.புஷ்பாகரன்,
வெள்ளவத்தை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

### நடுநாயகம்!

**க**டைகளில் விற்பனைக்காக வைக்கப்படும் பத்திரிகைகளில் நடுநாயகமாகக் காட்சி தருவது தினமுரசுதான். ஆக்கங்கள் அனைத்தும் அருமை.

வரலாற்று நாயகர்களான பலரது வாழ்க்கை வரலாறுகளை வாரி வழங்குவதில் முதன்மை வகிப்பது தினமுரசே! 'கேஷிகன்' வாரந்தோறும் தரும் புரட்சித்தலைவர் பிடல் காஸ்ட்ரோ பற்றிய தொடர் கட்டுரையும், நெல்சன் மண்டேலா விடுதலை பற்றிய ஆக்கமும் அருமையிலும் அருமை!

–ஆமினா ஹஸனி,
கல்முனை – 07.

### இன்றும் இனிதாய்

'புதிய கவிஞர்கள்' சகிதம், 'தேன் கிண்ணம்' இன்றும் இனிதாய் இனிக்கின்றது. வித்தியாச வடிவில் வசீகரிக்கின்றது! வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் வழக்கம் போல். நாம் விரும்பி வாசிக்கும் மற்றொரு அம்சமான சிறுகதையில், கலைஞர்களின் ஊர் - பேரை முன்னம் போலத் பெரிதாக அழகாகப் பிரசுரித்தால் இன்னும் அருமையாக, கவர்ச்சியாக இருக்குமல்லவா?!...

–முத்துமணி,
பதுளை.

### தேனிலும் இனிய தமிழ் வணக்கங்கள்!

தமிழால்
தமிழுக்கு
சேவை புரிந்து!
தமிழால்
தமிழருக்கு
உழைத்து!
தமிழருக்காக
தமிழால்
தலை நிமிர்ந்து
நடை போடும்
தினமுரசே!
வாழ்க, வளர்க....!
உன்...
தமிழ்ப் பணி
தடையின்றி
தொடர்ந்திட
வாழ்த்துவதில்
வளமடைகின்றான் - இந்த
தமிழின் மகன்....

கா.சுபாஷ்,
டிக்கோயா.

### நிகர் இல்லா முரசே

முரசே உன்னை வர்ணிக்க வார்த்தையே இல்லை. இருந்தும் உனக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏழு கடல் தாண்டி வாழும் எங்களுக்கு சுனாமியைப் பற்றி விபரமாக அறியத் தந்தாய் மிக்க நன்றி. முரசே 596 இதழில் தேன் கிண்ணப் பகுதியில் சுனாமி என்ற தலைப்பில் வெளியான கவிதையை எழுதிய திருமலை தாமரை மகன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

–ரி.என்.ராசாத்தி,
லெபனான்.

# யாழ்ப்பாணத்தில் விரைவில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு

## -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ். குடா நாட்டில் கடந்த 10 தினங்களுக்கு மேலாகத் தங்கியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குடாநாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் குடாநாட்டு மக்களுக்குப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதையும், கொழும்பு விலையிலேயே யாழ்ப்பாணத்திலும் பொருட்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் நடவடிக்கையை எடுத்துள்ளார். இந்த நடவடிக்கையின் பயனாக அரசு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் 6 கப்பல்களில் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கவுள்ளது. ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர், கொள்கலன்களைத் தாங்கிய கப்பல்களையும் யாழ்ப்பாணத்துக்குப் பொருட்களை எடுத்துச் செல்லப் பயன்படுத்தவுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். கடற்றொழிலாளர்கள் சந்தித்து, தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கடிகள் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளனர். இதன்பலனாக அமைச்சர் அதாவுல்லாவின் உதவியோடு வடபகுதி மீனவர்களில் கஷ்டப்பட்ட 100 பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதுவரை மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த தடையும் தளர்த்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாகப் பொருட்களைக் கொண்டுவரும் கப்பலில் மரக்கறி விதைகளையும் கிருமிநாசினிகளையும் தருவித்துத் தரவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன.

யாழ். குடா நாட்டுக்கு கப்பல்களில் கொண்டு வரப்படும் பொருட்களுக்கு மேலதிகமாக யாழ் - தீவகம் குறிகாட்டுவானுக்கும் தலைமன்னாருக்குமிடையில் படகுச் சேவையை நடத்தவும் அமைச்சர் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்தப் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டால் யாழ்.குடா நாட்டு மக்கள் முகம் கொடுத்து வருகின்ற போக்குவரத்துப் பிரச்சினைகள், உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வைக் காண முடியுமென அமைச்சர் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேற்படி படகுச் சேவை ஆரம்பிக்கப்படுவதன் பயனாக நாளொன்றுக்கு 50 தொடக்கம் 100 பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடமுடியும் என்றும் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை, வெங்காயம், திராட்சை, வாழைப்பழம், மாம்பழம், பனம் பொருட்கள் என்பனவற்றை வெளி இடங்களுக்குக் கொண்டு செல்ல உதவும். அத்தோடு குடாநாட்டுக்கு அத்தியாவசியமான பொருட்களை அதாவது தேங்காய், தேங்காய் எண்ணெய், மிளகாய், பலசரக்குப் பொருட்கள் என்பவற்றைக் கொண்டு வரவும் இந்த படகுப் போக்குவரத்து பெரிதும் உதவும் என்பதால் விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்.குடா நாட்டில் கணவரை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட நாற்பது வயதுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து வருகின்ற குடும்பப் பெண்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "துயர் துடைக்கும் வேலைத்திட்டம்" ஒன்றை ஆரம்பித்துள்ளார். இதன் மூலம் அப்பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளுக்கு உதவும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வை கடந்த 18.12.06 அன்று அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து வைத்து நிதி உதவிகளின் முதல் கட்டக் கொடுப்பனவை வழங்கி கருத்துத் தெரிவித்த அமைச்சர், "இந்நிதி உதவிகள் இப் பெண்களின் எதிர்கால வாழ்க்கை நிலையை உயர்த்தும் நோக்கத்தோடும், சமூகத்தில் தலை நிமிர்ந்துவாழ வேண்டும் என்ற அவாக் கொண்டும் வழங்கப்படுகிறது என்றும் இரண்டாம் கட்டமாகவும் நிதி வழங்கும் நடவடிக்கைகளைத் தான் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிதி உதவிகளைக் கொண்டு பயனுள்ள சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அதன் எதிர்காலத்திட்டங்கள், முன்னேற்றங்கள் மற்றும் விரிவாக்கங்கள் தொடர்பாக தமக்கு அறியத்தருமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார் என்று அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாள் சம்பளம் 260 ரூபா கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

பத்தொன்பது நாட்களாக தொடரும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிய வேலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், 19.12.06 அன்று காலை 11.15 மணியளவில் கூட்டு ஒப்பந்தம் ஒன்று ஜனாதிபதி முன்னிலையில் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி நாளொன்றுக்கு 260 ரூபா என்ற அடிப்படையில் இரண்டு வருடத்துக்கான ஒப்பந்தத்தில் முதலாளிமார் சம்மேளனமும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பும் ஜனாதிபதி மற்றும் தொழில் அமைச்சர் அதாவுட செனவிரட்ண முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளன.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந்த ஒப்பந்த நிகழ்வில் இ.தொ.கா.சார்பில் அதன் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில், பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம், புத்திரசிகாமணி, அரிச்சந்திர, தேவராஜா ஆகியோரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் வேலாயுதம், தலைவர் ராஜா செனவிரட்ன ஆகியோரும் பெ.தோ.தொ.சங்கக் கூட்டமைப்பு சார்பில் எஸ்.ராமநாதன், சந்திரசேன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் குறித்து கருத்துத் தெரிவித்த திரு.வேலாயுதம், தொடரும் போராட்டத்தால் தொழிலாளர் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாலும் 250 ரூபாவுக்கு மேல் சம்பள உயர்வு கிடைக்குமாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்வது என்ற அனைத்துத் தொழிற்சங்கங்களின் முடிவையும் கவனத்திலெடுத்தே இந்த ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

# மீண்டும் பேருந்துச் சேவை

(மஸ்கெலியா நிருபர்)

வெகு காலமாகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த மரே மஸ்கெலியா பேருந்துச் சேவை கடந்த 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதனால் மரே, நல்ல தண்ணீர், லக்ச பான, ரக்காடு கிராமம், மவுசாகலை, காவ கேவத்தை ஆகிய பகுதிகளிலுள்ள பயணிகளும், மாணவர்களும் நன்மையடையவுள்ளனர்.

இதே மாதிரியான சேவை ஒன்றை காட்மோர் மஸ்கெலியாவுக்கு இடையேயும் ஏற்படுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் பேருந்துச் சேவை சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் மேலும் ஒரு பேருந்துச் சேவையை நடத்தவுள்ளதாகவும் அச்சேவை நல்ல தண்ணீர் நகரில் ஆரம்பிக்கப்பட்டு கதிர்காமம் வரை சேவையில் ஈடுபடும் எனவும் கதிர்காமத்திலிருந்து ஒரு பேருந்து காலை 5.30 மணிக்கு நல்ல தண்ணீர் நகரை நோக்கிப் புறப்படும் எனவும் அட்டன் பேருந்து நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

புதிய பேருந்துகள் கிடைக்குமிடத்து குறுந்தூரச் சேவைகளை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் கடந்த வாரம் போக்குவரத்து அமைச்சில் வழங்கப்பட்ட 9 பேருந்துகளும் இப்பகுதியில் உள்ள தொலை தூர இடங்களில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் ஜனாதிபதி அடிக்கல் நாட்டினார்

கொழும்பு துறைமுக விஸ்தரிப்புத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு 17/12/06 அன்று ஜனாதிபதி செயலகத்தில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புக்கான அடிக்கல்லை நாட்டினார்.

அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் இவ்வுட்கட்டமைப்புத் திட்டம், அலைகள் மோதும் இரண்டு சுவர்கள் அமைத்தல் மற்றும் வாய்க்காலில் உள்ள 13.6 மில்லியன் கியூபெக் மீற்றர் மணலை அப்புறப்படுத்துதல், வீதிகள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகளைச் சீரமைத்தல் ஆகிய பணிகளை உள்ளடக்கியிருக்கும். இதே வேளை புதிய துறைமுக உட்கட்டமைப்பும், கொள்கலன்களை இலகுவாகக் கையாளும் மூன்று முனையங்களும் சுமார் 1200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை துறைமுக அதிகார சபை நடைமுறைப்படுத்தவுள்ள கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புத் திட்டத்திற்கு சர்வதேச ரீதியிலான கேள்வி மனு இம்மாதம் 26ஆம் திகதியிலிருந்து கோரப்படவுள்ளதாகவும், 39 மாதங்களை நிர்மாணிப்புக் காலமாகவும் கொண்டுள்ள இத் திட்டம் 2010 இல் முடிவுக்கு வர வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலையில்லாப் பிரச்சினைக்கு அரசு துரித நடவடிக்கை

நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. கடந்த வருடம் இலங்கையில் மேற்கொளளப்பட்ட ஆய்வொன்றின்படி 22 சதவீதமானவர்கள் வேலையற்றவர்களாக இருப்பது தெரிய வந்தது. இந்நிலையை மாற்றும் நோக்கத்தில் திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் 2010ஆம் ஆண்டில் வேலையற்றோர் வீதத்தை 9ஆகக் குறைக்க முடியும் என அரசு நம்புகின்றது.

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள 10 ஆண்டுத் திட்டத்துக்குத் தேவையான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும். இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை ஒரே வலைப்பின்னலில் நடைமுறைப்படுத்தி, அதனை ஒரு தேசியத் திட்டமாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும் என வாழ்க்கை மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் செயலாளர் ரீ.எச்.ஜீ. பிரேமசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 10 ஆண்டுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கூடுதலான இளைஞர் - யுவதிகளை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தவும், பாடசாலைக் கல்வியை அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் தரம் உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

# புலிகளுக்குத் தடை

தற்கொலைத் தாக்குதல்கள், போதைப் பொருள் கடத்தல், சிறுவர்களைக் கட்டாயமாகப் படையில் சேர்த்தல், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுதல் போன்ற பயங்கரவாத, சட்டவிரோத செயற்பாடுகளை அவுஸ்திரேலிய அரசு கவனத்தில் எடுத்துள்ளதால் இன்னும் சில தினங்களுக்குள் புலிகளைத் தடை செய்யும் முடிவினை அவுஸ்திரேலியா அறிவிக்கும் என அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுன் தெரிவித்துள்ளார்.

# இரண்டாவது சர்வதேச தேயிலை தினம்

(மஸ்கெலியா நிருபர்)

சர்வதேச தேயிலை தினத்தின் 2ஆவது ஆண்டு விழா அட்டன் நகரில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் 12.30 மணிக்கு அட்டன், டிக்கோயா நகர சபை முன்றலில் இருந்து ஆரம்பமாகிய தொழிலாளர்கள் கலந்து கொண்ட மாபெரும் பேரணி அட்டன் சந்தை வீதி, பிரதான வீதி சந்தி ஊடாக டன்பார் வீதிக்குச் சென்றது. ஹைலஸ் வீதியூடாக அட்டன் டீ.கே. டபிள்யூ. கலாசார மண்டபத்தைச் சென்றடைந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர் கள் இதில் கலந்து கொண்டனர்.

மேற்படி விழா புதிய செங்கொடிச் சங்கத்தின் பொதுச்செயலாளரும், அழைப்புக் குழுவின் இணைப்பாளருமான ஓ.ஏ.இராமையா தலைமையில் நடைபெற்றது. விழாவில் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, வியட்நாம், கொரியா, இந்தோனேஷியா, மேற்கு வங்காளம், ஆகிய நாடுகளிலிருந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருமே தங்களின் லட்சோப லட்ச தொழிலாளர்களின் ஒத்துழைப்பு சகோதரத்துவத்துடன் இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு எப்போதும் உண்டு என்பதை வலியுறுத்திப் பேசினார்கள். அத்தோடு சம்பள உயர்வு கோரி போராடி வரும் தேயிலைத் தோட்ட, இறப்பர் தோட்ட தொழிலாளர்களின் இப்போராட்டம் மிகவும் நியாயமானது என்பதையும் வலியுறுத்தினர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 22 பேர் இதில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவின் இறுதியில் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதாவது

1. 2005 ஆம் ஆண்டு இந்தியாவில் கொண்டாடப்பட்ட முதலாவது சர்வதேச தேயிலை தினமான டிசம்பர் 15ஆம் திகதியை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுதல்.
2. நாட்டிலே நுகர்வோர் பொருட்களின், விற்பனையை அனுசரித்து அதற்கேற்றவாறு சம்பளத்தை அதிகரித்தல்.
3. தேயிலைக்கு நல்ல அதி கூடுதலான விலையைப் பெற்றுத்தர ஒத்துழைத்தல்.
4. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களினதும், சிறு தேயிலைத் தோட்ட தொழிலாளர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்.
5. தேயிலைச் சந்தைப்படுத்தல், தேயிலை விற்பனையை தொழிலாளர்கள் நேரடியாக அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
6. தோட்டத்தொழிலாளர்கள், தனியார் தோட்டத்தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்.
7. முதலாளிமார் சம்மேளனமும், தோட்டக் கம்பனிகளும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நேரடியாக அவர்களின் சம்பள உயர்வு பற்றி அறிவிக்க வேண்டும்.
8. தேயிலை விற்பனையில் ஏற்படும் இலாபத்தைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.
9. சர்வதேச ரீதியில் தொழிலாளர்கள் என்ற ரீதியில் சகல போராட்டங்களுக்கும் சகல நாட்டுத் தொழிலாளர்களும் முழுமையான ஆதரவை வழங்குதல் என்பனவே தீர்மானங்களாக அமைந்தன.

இந்த விழாவில் பல உள்ளூர் அமைப்புகளும் பங்கு கொண்டிருந்தன.

# அரச கட்டுப்பாட்டுக்குள் மக்களின் வரவு அதிகரிப்பு

வாகரை, கதிரவெளிப் பகுதிகளிலிருந்து மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்த வண்ணமிருக்கின்றனர். கடந்த நவம்பர் முதலாம் திகதியிலிருந்து இன்றுவரை 16139 பேர் இவ்வாறு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் மேலும் மோதல்கள் தொடரலாம் என்ற அச்சம் காரணமாகத் தொடர்ந்தும் அங்கு அகப்பட்டிருக்கும் மக்கள், கடல் வழியாகவும், காட்டு வழிகளூடாகவும் வாழைச்சேனை, மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வருகின்றனர். இவ்வாறு வரும் மக்கள் வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர் போன்ற இடங்களில் பாடசாலைகளில் தங்க வைக்கப்படுவதோடு அவர்களுக்கு சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்திருப்பவர்களின் முழுமையான விபரங்களைத் திரட்டும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி மொத்தமாக 22373 பேர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளதாக இன்னொரு செய்தி தெரிவிக்கின்றது.

# விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் (15.12.06) அன்று வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளார். கடந்த இரண்டரை மாத காலமாக மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பு தெஹிவளையில் உள்ள தமது உறவினர் வீட்டில் வசித்து வந்தார். மட்டக்களப்பில் இருந்தபோது இனந்தெரியாத கும்பலினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து தனது உபவேந்தர் பதவி இராஜினாமாக் கடிதத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்திருந்தார். எனினும் அவரது இராஜினாமாவை மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளாமல் பாதுகாப்புக் கருதி கொழும்பில் இருந்தவாறே உபவேந்தர் பதவியைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் உபவேந்தர் கொழும்பில் தங்கியிருந்து பணியாற்றி வந்ததாக அவரின் மருமகனும் வைத்தியருமான நவீன்குமார் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், உபவேந்தர் வெள்ளிக்கிழமை வீடு திரும்பாத நிலையில், வீட்டார் இரவு 10.30 மணிக்கு தெஹிவளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதன் பேரில் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரை உடனடியாகத் தேடிக் கண்டுபிடிக்குமாறு பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேராவுக்கு ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

உபவேந்தரின் கார்ச் சாரதி உட்பட 20 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், குற்றப் புலனாய்வுத்துறையும், கறுவாத்தோட்டப் பொலிஸாரும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இச் செய்தி எழுதப்படும் வரை உபவேந்தர் காணாமற் போனது அல்லது கடத்தப்பட்டது தொடர்பான விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை காணாமல் போயுள்ள கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் எஸ்.ரவீந்திரநாத்தைப் புலிகளே கடத்திச் சென்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். துணை வேந்தருக்குப் புலிகள் மரண அச்சுறுத்தல் விடுத்திருந்ததாக அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளதாக கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விலீ அபேநாயக்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள துணை வேந்தரின் தற்காலிக சாரதி எல்.ரி.ரி.ஈ.யினருடன் தொடர்புடையவர் எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துணை வேந்தர் காணாமற் போனது தொடர்பாக பூரண அறிக்கையொன்றை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு உயர் அதிகாரிகளை ஜனாதிபதி பணித்துள்ளார். அத்துடன் பொலிஸ் மா அதிபர் உட்பட சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முக்கிய ஆலோசனைகளையும் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## தொழிலாளர்களின் போராட்டம் முடிவுக்கு வருமா...?

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில், சுனாமியால் பலியாகிப் போன அனைவருக்காகவும் கவலையோடும் அழுத விழிகளோடும் இருக்கும் உறவுகளுடன் நாமும் கவலைகளைப் பகிர்ந்து கொள்கின்றோம். டிசம்பர் இருபத்தியாறை இலங்கை வாழ் மக்களும் உலக மக்களும் வாழ்நாள் வரை மறந்து விடமுடியாது.

இதேபோல் கிழக்கில் தொடரும் மோதல்களால் இடம் பெயர்ந்துள்ள மக்களினதும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இரண்டாவது தடவையாக இடம்பெயர்ந்துள்ளவர்களினதும் அநாதரவான நிலை பெரும் துயர் நிறைந்ததாக இருக்கின்றது. புலிகளின் பிடியிலிருந்து உயிர் தப்புவதற்காக ஆபத்துமிக்க கடல் வழியாகவும் காட்டு வழியாகவும் வரும் மக்களில் அநேகமானோர் பெண்களும் சிறுவர்களுமாக இருக்கின்றனர். அவர்கள் உயிர் தப்பி வந்த கதைகளைக் கூறும் விதம் நெஞ்சை உருக்குகின்றது. இவ்வாறு உயிர் தப்பி வரும் மக்களுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் ஏனைய அத்தியாவசிய உதவிகளை அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மேற்கொள்ளுகின்ற போதிலும் அது திருப்தியளிக்கும் விதமாக இல்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழத்தான் செய்கின்றன. அதே வேளை, இவ்வாறு வந்த மக்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கும் உள்ளாக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பில் படையினரிடம் தெளிவான பார்வை அவசியமாகும். இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற மக்களுடன் புலிகளும் சென்று அங்கு கைதாகியுள்ளனர் என்பதால் இந்த மக்களுடனும் புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்ற சந்தேகங்கள் நியாயமானதாக இருந்தாலும், மக்களை அணுகுகின்ற விதம் மிகவும் நிதானமானதாக இருக்க வேண்டும்.

இதே வேளை, கடந்த வாரம் குறிப்பிட்டதைப் போல் இந்த வாரத்துக்குள் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தேன். அதே போல் சில விட்டுக் கொடுப்புகள் செய்யப்பட்டு இ.தொ.கா.வின் தலைமையில் கூட்டு ஒப்பந்தம் 260 ரூபா நாள் சம்பளம் எனும் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.

300 ரூபாய் தரும் வரை வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் எனத் தெரிவித்த தொழிலாளர்கள் விடாப்பிடியாகப் போராட்டத்தை நடத்தி வந்தனர். ஆனால் 300 ரூபாய் கொடுத்தால் சில கம்பனிகளின் நிலை பெரும் நஷ்டத்துக்குள் விழுந்து விடும் என்பதால், சுமார் 13 கம்பனிகள் தமது கம்பனிகளை அரசு பொறுப்பெடுக்கும் நிலை ஏற்படலாம் எனத் தெரிவித்திருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி தலைமையில் செய்து கொள்ளப்பட்ட 260 ரூபா என்ற கூட்டு ஒப்பந்தமானது, தொழிலாளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருத முடியாது. எனினும் முடிவில்லாமல் இப் போராட்டம் நீடிப்பதானது தேயிலைத் தோட்டங்களுக்கும், கம்பனிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பாதகமான நிலைமையையே ஏற்படுத்தும். அத்தகையதொரு பாதகமான நிலை ஏற்படுவதற்கு இடமளித்து விடக்கூடாது என்பதால் இருதரப்பும் சில விட்டுக் கொடுப்புக்களுக்கு வந்து, பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது நல்லது என்ற பரவலான அபிப்பிராயமும் இருந்தது. அந்த வகையில், இந்த முடிவை தொழிலாளர்கள் எவ்வாறு ஜீரணித்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த முடிவு திணிக்கப்பட்டதாக இருந்தால், 2008 ஆம் ஆண்டு இதை விடவும் பாரிய பரிணாம வளர்ச்சி கண்ட தொழிலாளர்களின் போராட்டத்தை தொழிற்சங்கங்களும், கம்பனிகளும் எதிர்கொள்வது நிச்சயம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நிபுணர் குழுக்களின் முன் யோசனைகளுக்கு ஆப்பு வைக்கும் பின் யோசனைகள்


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

### இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த நிபுணர்கள் குழுவின் பரிந்துரையில் இருந்து முக்கிய பகுதிகள்

01. அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மூலம் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் அதேவேளை, ஒரு நாட்டிற்குள் பல்வேறு மத, இனத் தனித்துவங்களுக்கு இடமளிப்பதன் மூலம் ஒரு நல்லாட்சி வடிவத்தை வகை செய்து, மோதலிலிருந்து நகர்வதற்கு வழி செய்வதே நோக்கமாகும்.

இந்தக் குழுவின் அணுகுமுறையானது பல்வேறு இன, மதக் குழுக்களுக்கிடையே மெய்யான அதிகாரப் பகிர்வு வடிவத்தை சாத்தியமான அளவுக்கு அதிகபட்சமாக உருவாக்குவதும், எந்தவொரு முன்மாதிரியையும் பின்பற்றாமல் சொந்தத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் தீர்வை உருவாக்குவதுமாகும்.

எனவே அரசாங்கத்தின் நிர்வாகங்களாக மாகாண நிறுவனங்களையும், உள்ளூராட்சி மன்றங்களையும் நிறுவுதல், இவற்றின் மூலமாக சகல சமூகங்களும் சம்பந்தப்பட்ட தமது அதிகாரப் பிரதேசத்தில் அதிகாரத்தைக் கொண்டு நடத்தவும் அபிவிருத்தி செய்யவும் முடியும். சகல சமூகங்கள் மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு அதன் மூலம் தேசிய அரசியலில் இணைந்த தேசிய ஒருங்கிணைப்பை வலுப்படுத்த முடியும்.

02. இந்தக் குழு இலங்கை அரசின் பெயர் 'இலங்கைக் குடியரசு' என இருக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கின்றது.

03. தனித்துவமான கருத்து வெளிப்பாடுகளை ஒற்றையாட்சி, கூட்டாட்சி, பிராந்தியங்கள் மற்றும் மாகாணங்களின் ஒன்றியம் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். மாறாக அரசைப் பற்றிக் குறிப்பிடும்போது அது 'அரசியல் யாப்பில் வகை செய்யப்பட்டவாறு அதிகாரத்தைக் கொண்டு நடத்தும் மத்திய மற்றும் மாகாண நிறுவனங்கள்' என்றே குறிப்பிடப்படும்.

04. ஜனாதிபதிக்கு மாறுபட்ட வகையில் இரு வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த இரண்டு பேர் மூன்று வருடப் பதவிக் காலத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரிவு செய்யப்படவேண்டும்.

05. பாராளுமன்றத்துக்கு அடுத்த இரண்டு சபையான கீழ்ச்சபையில் காணப்படும் சம நிலையின்மையை நிவர்த்தி செய்யும் ஒரு பொறியமைவாக இரண்டாவது சபை செயல்படும். இரண்டாவது சபையின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களால் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

06. மாகாண மட்டத்தில் விகிதாசார அடிப்படையில் நிறைவேற்று அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது, குறிப்பாக மோதலுக்குப் பின் நிலைமைகளில் பயன் தந்துள்ளது. அதே சமயம் உத்தியோகபூர்வமான எதிரணி இல்லாதபட்சத்தில் மாகாண நிர்வாகம் ஊழலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்பதையும் நாம் மனதில் கொள்ளாமல் இல்லை.

07. முஸ்லிம், சிங்கள மக்களின் அக்கறைகளை நிவர்த்திக்கும் வகையில் இரண்டு உள்ளக சுயாட்சி அலகுகளைக் கொண்ட தனியொரு மாகாண சபையை அமைத்தல்.

08. இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நுவரெலியா மாவட்டத்திற்குள் ஒரு சுயாட்சி கோட்டச் சபையை அமைப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட வேண்டும் என்று கோருகின்றன.

**இலங்கை** இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது விருப்பத்தை வெளிக்காட்டும் போது, அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் 2002.02.22ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிராகரிக்காமல் அதனூடாகப் புலிகளை சமாதானப் பேச்சுகளுக்கு அழைத்துவர முடியும் என்ற நோர்வே உட்பட்ட சர்வதேச நாடுகளின் ஆலோசனையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். அதன் பேரில் தொடர்ந்து புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

19.11.2005ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்று நான்கு மாதத்துக்குள் அதாவது பெப்ரவரி 2006இல் ஜெனிவாவில் அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினரும், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு குறித்து பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் துணைக்குழுக்கள் விவகாரத்தையும், அவர்களின் விபரங்கள் எனும் ஒரு பட்டியலையும் சமர்ப்பித்து, இந்தப் பிரச்சினைக்கு முதலில் இலங்கை அரசு உடனடித் தீர்வைக் காணுகின்ற போதே சமரசப் பேச்சுக்களை நடத்தலாம் எனக் கூறினர்.

எனினும் அரசாங்கம் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அவ்வாறான ஆயுதக் குழுக்கள் இல்லை என்று கூறியதோடு அவ்வாறானவர்கள் இருந்தால் தாம் நடவடிக்கை எடுக்கத் தவறுவதில்லை என்றும் கூறியது. இந்தப் பதிலானது புலிகளுக்கு ஏற்புடையதாக இல்லை என்றும் எனவே இந்த அரசோடும் பேச்சு நடத்திப் பலனில்லை என்றும் கூறி, தமது வன்முறைகளைத் தொடர்ந்தனர். இந்த நிலையில் இந்தியா, அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகமானது இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கை அரசு ஒரு அரசியல் தீர்வை முதலில் முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இதன் பின்னணியிலும், இலங்கையின் பிணக்கைத் தீர்க்க ஒரே வழி முதலில் தென் இலங்கையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தையும் உணர்ந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றைக் கூட்டினார். இதில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படவில்லையா அல்லது அழைப்பு விடுக்கப்பட்டு அவர்கள் நிராகரித்தார்களா என்பது இப்போதும் விவாதத்துக்கு எடுக்கப்படாத விடயமாக இருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியின் எதிர்ப்பை எதிர்கொள்வதற்காகவும் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் புரிந்து ணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டனர். இதே கால கட்டத்தில் அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவை நியமித்து அவர்களிடம் இனப் பிரச்சினையைத் தீர்த்து அரசியல் தீர்வைக் காணும் முகமாக ஒரு பரிந்துரையைத் தயாரிக்கும் படியும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அந்த நிபுணர்கள் குழுவில் 17 பேர் அங்கம் வகித்தனர். அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒவ்வொரு வாரமும் நடைபெற்றுவருகிறது. இப்போது 20ஆவது வாரமாக கடைசிக் கூட்டம நடைபெற்றுள்ளது. இதேயளவு கால அவகாசம் கொண்ட நிபுணர்கள் குழு தனது பரிந்துரைகளை முன் வைத்துள்ளது. அதாவது 17 பேர் கொண்ட குழுவில் 11 பேர் ஒரு பெரும்பான்மைக் குழுவாகவும் 4 பேர் ஒரு குழுவாகவும் மிகுதி இரண்டு பேர் தனித் தனியாகவும் தமது பரிந்துரைகளைச் செய்துள்ளனர். இதில் 4 பேர் சமர்ப்பித்த பரிந்துரையையும், தனித்தனியான இருவரின் பரிந்துரையையும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கவனத்தில் எடுக்காதபோதும் பெரும்பான்மையானவர்கள் சமர்ப்பித்த பரிந்துரையை விவாதத்துக்கு எடுத்துள்ளனர்.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டதோடு, அதன் உள்ளடக்கங்கள் தொடர்பான விபரங்களும் ஊடகங்கள் மூலமாக வெளியாகியிருந்தன. ஜனாதிபதியின் கவனத்துக்கும், அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளின் ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டு இறுதித் தீர்வுக்கான வரைவில் இந்தப் பரிந்துரையில் சாதகமான அம்சங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் ஊடகங்களில் பரிந்துரையானது வெளியாகியதால் அதுபற்றிய விமர்சனங்களும், கருத்துக்களும் பல தரப்பினராலும் பல விதமாகவும் முன்வைக்கப்பட வசதியாயிற்று. இது ஒரு வகையில் நிபுணர் குழுவின் நியமனத்தின் போது அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறும் செயற்பாடாகவும் கருதப்பட்டது. அதாவது, இந்த நிபுணர் குழுவினர் தயாரிக்கும் பரிந்துரையானது அனைத்துக் கட்சிகளின் ஆய்வுக்குட்பட்டு இறுதி வரைவு செய்யப்படும் வரை வெளியிடப்படக்கூடாது என்பதுவே அதுவாகும்.

ஆனால் இங்கே நிபுணர் குழுவே நான்காகப் பிளவுபட்டுப்போனதால் அந்தத் தீர்மானங்களின்படி நடக்கத் தவறியுள்ளனர். இதன் விளைவு இப்போது அனைத்துக் கட்சிச் செயற்பாட்டில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் இந்தப் பரிந்துரையின் வெளியானவைகளையும், அதன் உள்ளடக்கத்தையும் விமர்சித்து அனைத்துக்கட்சிக் கூட்டத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தன. எனினும் அரச தரப்பினர், நிலைமையை விளக்கி ஒவ்வொரு கட்சிகளையும் மீண்டும் அனைத்துக்கட்சிகளின் கூட்டுச் செயற்பாடுகளுக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 19 வாரமாக நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பலனாக 18.12.06 அன்று நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கு கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வதாலேயே அதை எதிர்க்கும் நோக்கத்துடன் நிபுணர் குழுவின் பரிந்துரையைக் காரணம் காட்டி ஜே.வி.பி.யும், ஜே.எச்.யூ.வும் அனைத்துக் கட்சி அமர்வுகளிலிருந்து வெளியேறியுள்ளன என்றும் சில கருத்துக்கள் உண்டு.

ஜே.வி.பி.மற்றும் ஜே.எச்.யூ. ஆகிய இருகட்சிகளின் அரசியல் தளமும் ஒரு தளத்தில் தங்கியிருப்பதால், ஒரு கட்சி எடுக்கும் நிலைப்பாட்டை மறுகட்சி விமர்சிக்கும் அல்லது அதையொத்த ஒரு முடிவை மறுகட்சி எடுக்கும். இது இரு கட்சிகளும் ஒருவரை ஒருவர் மிஞ்சி விடக்கூடாது என்பதோடு தமது அரசியல் தளத்தில் சரிவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் கூடுதல் அக்கறை காட்டி வருவதை சமகாலத்தில் அவதானிக்க முடிகிறது.

பெரும்பான்மை நிபுணர்கள் குழுவின் பரிந்துரையை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறும்போது, இது இறுதித் தீர்வு அல்ல என்றும் அது அரசினது நிலைப்பாடு அல்ல என்றும் கூறியிருந்தார். அதே வேளையில் ஜே.வி.பி., ஜே.எச்.யூ.வினர் பரிந்துரைகளை ஒரு தீர்வு யோசனைகள் என்றளவில் விமர்சித்துக் கொண்டு அவசரப்பட்டு முடிவு எடுப்பது அரசுக்குக் கவலையளிப்பதாகத் தெரிவித்தார். அரசுக்கு என்று அவர் குறிப்பிடுவது ஜனாதிபதியின் நிலைப்பாட்டைத்தான் என்று அரச வட்டாரங்கள் கருதுகின்றன.

ஐக்கிய இலங்கைக்குள் மத்திய மாகாண நிர்வாக அலகுகள் என்பனவையே இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் அதிகாரத்தைப் பகிரவும் உதவும் என்பதை வலியுறுத்துவதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இந்தப் பரிந்துரையை இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் ஈ.பி.டி.பி.போன்ற தமிழ் ஜனநாயகக் கட்சிகளும், அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் போது, அதுபற்றி சாதகமான முடிவையே ஜனாதிபதி எடுக்க வேண்டும். இரண்டு கட்சிகள் பிளவுபட்டுப் போய் இலங்கையின் எதிர்ப்பு வரலாற்றுக்கு உயிர் கொடுக்க முற்பட்டால் அவர்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர ஜனாதிபதி முயற்சிக்க வேண்டும். இல்லாமல் வழமையான இந்த எதிர்ப்புகளுக்கு எடுபட்டு இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் வரலாற்றில் முன்னைய தலைவர்கள் செய்த தவறையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் செய்ததாகிவிடும். இந்தப் பிரச்சினை எதிர்கால சந்ததிக்கு

*(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)*

## ஊரிலிருந்து....



*தன்ர வீட்டுப் பிள்ளை கிணத்தில விழுந்திருக்க, பக்கத்து வீட்டுப் பிள்ளைக்குச் சளுக்கெடுக்கப் போறாங்களாம் எண்டுகொண்டு கடுப்போட வந்தார் மாஸ்டர்.*

*என்ன மாஸ்டர் யாரைச் சொல்றீங்கள் எண்டன்.*

*வேற யார்? எங்கட இருவத்திரெண்டையும் தான் சொல்லுறன். வாகரையில இருந்து உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு ஆயிரக்கணக்கில சனம் அலைஞ்சு திரியுது. ஓகஸ்ட் 11 க்குப் பிறகு, யாழ்ப்பாணச் சனம் படுகிற பாடு எல்லாருக்கும் தெரியும். இந்தச் சனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திறம் எண்டு சொல்லுறவையள், அந்தப் பக்கம் ஒருக்காத்தன்னும் எட்டிப்பார்க்கவில்லை. இப்ப என்னடாவெண்டால், மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்கப் போறாங்களாம்.*

*ஐயோ சாமி! இஞ்சால வந்து குட்டையை இன்னும் குழப்பாதேயுங்கோ எண்டு அந்தச் சனமும் கெஞ்சுதாம். எண்டிறாருங்கோ.*

# கிழக்கில் கருக்கட்டும் போர் மேகம்!!

**கிழக்கு** மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களாலும், அதற்கு எதிரான புலிகளின் தாக்குதல்களுமாக முழுக் கிழக்கு மாகாண வாழ் மக்களும் யுத்த அச்சத்தில் உறைந்து போயிருக்கிறார்கள். கடந்த 10 நாட்களுக்கும் மேலாக வாகரை, கதிரவெளிப் பகுதிகளையும், வெருகல், முகத்துவாரம் பகுதிகளையும் நோக்கி படையினர் நடத்தும் மல்ரிபெரல் தாக்குதல்களும், புலிகள் நடத்தும் எறிகணைத் தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன.


சென்றவாரம் இதே பகுதியில் எழுதியதைப் போல் படையினரின் முதல் இலக்கு வெருகல் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகவே இருக்கிறது. படையினரின் தாக்குதல்களில்



புலிகள் சில இடங்களில் பின்வாங்கிச் சென்றிருக்கின்றனர். இதேபோல வாகரையை நோக்கிய தாக்குதல்களும் படையினரால் முடுக்கி விடப்பட்டுள்ளது. எந்தெந்த முகாம்களிலிருந்து தாக்குதல்கள், எந்தப் பகுதிகளை நோக்கி நடத்தப்படுகிறது என்பதையும், நடத்தப்படலாம் என்பதையும் கடந்த் வாரம் விரிவாகப் பார்த்துவிட்டோம்.

கடந்த வெள்ளிக்கிழமை (15.12.06) அன்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்துக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி - இன்னும் ஒரு சில தினங்களில் கிழக்கு மாகாணம் விடுவிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். குறித்த ஒரு கால வரையறையைக் கூற முடியாமல் போனதானது புலிகளின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருப்பதும், இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுமாகும். இவற்றுக்கு மேலாக அந்தப் பகுதிகளில் இருக்கும் மக்களின் பாதுகாப்புத் தொடர்பான கவலைகளும் பிரதான கவனத்தை ஈர்த்துள்ளது. அங்கிருந்து மக்கள் முழுமையாக வெளியேறி, புலிகளைத் தனிமைப்படுத்தி விட்டால் படையினருக்கு தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அது வாய்ப்பாக அமையும். அத்தகையதொரு சூழ்நிலையானது நகர்வுகளை வேகப்படுத்தும் என்பதும் இராணுவத் தளபதியின் திட்டமாக இருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மக்கள் பெருந்தொகையாக வெளியேறி இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதைப் புலிகளால் முன்னரைப் போல் தடுக்க முடியாத சூழல் தோன்றியுள்ளது.

புலிகள் மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரவிடாமல் தடுக்கிறார்கள் என்று அரசாங்கம் கூறி வந்ததும், தொண்டு நிறுவனங்கள் புலிகளிடம் மக்களை பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதும் புலிகளின் மீது ஒரு குற்றச் சாட்டாகவே இருந்தது. இப்போது ஐக்கிய நாடுகள் சபையும் இதே வேண்டுகோளை விடுத்துள்ளது.



இந்த நிலையில் மக்கள் புலிகளின் பிடியையும் புறம் தள்ளிவிட்டு ஆபத்து நிறைந்த கடல் வழியாகவும், காட்டுவழியாகவும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகின்றனர். இவ்வாறு வந்தவர்களின் படகுகள் இரண்டு 09.12.06 அன்று கடலில் கவிழ்ந்ததில் சுமார் 12 பேர் பலியாகினர். இருதரப்பினதும் எவ்வித பாதுகாப்பு உறுதிமொழிகள் கிடைக்காத போதும், மக்கள் உயிரைத் துச்சமாகக் கருதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட்டு வெளியேறிவருகின்றனர். கடந்த 40 நாட்களுக்குள் மட்டும் சுமார் 15ஆயிரம் பேர் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் வந்து சேர்ந்துள்ளனர். ஆனால் இன்னும் 20 ஆயிரம் பேர் வாகரை கதிரவெளிப் பகுதியில் அகப்பட்டு இருக்கின்றனர். அவர்களும் சிறு சிறு குழுக்களாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகின்றனர். இவ்வாறு வரும் மக்கள் வாகரை, கதிரவெளி, வம்மிவட்டுவான், வெருகல், முகத்துவாரம், லங்கா கடல், மாவடிச்சேனை, ஈச்சிலம்பத்தை, சம்பூர், கட்டைப்பறிச்சான், கிளிவெட்டி, மேன்காமம், சீனன்வெளி, பால்ச்சேனை, சந்தோஷபுரம், பூநகர், அம்பதனவெளி, புண்ணையடி, பள்ளிக் குடியிருப்பு, கூனித்தீவு, மணல்சேனை, வீரநகர், சேனையூர், இலக்கந்தை, பாரதிபுரம், தட்டுமுனை, கண்டலடி, சூடைக் குடா, கருக்காமுனை, முட்டுச்சேனை, கங்குவெளி, பூமரத்தடிச்சேனை, பாட்டாளிபுரம், மூதூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்தவர்கள். இப்போது மீண்டும் மட்டக்களப்பை நோக்கி இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது துரதிஷ்டவசமானதுதான். இவ்வாறு இடம்பெயர்ந்து வரும் மக்கள் வாழைச்சேனை, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, வீரயகபுரம், கிரான், செங்கலடி, சவுக்கடி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5 நாட்களுக்குள் மாத்திரம், 5200 பேர் வாகரையிலிருந்து மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதாகவும், தொடர்ந்தும் மக்கள் வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி, இவ்வாறு வந்தவர்களின் முழுமையான விபரத்தைக் கணக்கெடுக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்தப் பணிகளில் தொண்டு நிறுவனங்களின் ஐ.சி.ஆர்.சி., ஐ.ஓ.எம்., வேல்ட் விசன் ஆகிய அமைப்புகளும், உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுவருகின்றன. இவ்வாறு வரும் மக்களுக்கு தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு கொடுப்பதென்றும் பின்னர் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

படையினரின் முதல் நான்கு இலக்குகளாக இருப்பது வாகரை, கதிரவெளி, வெருகல், இலக்கந்தை ஆகிய பகுதிகளாகும். இந்த இடங்களை நோக்கி, மல்ரி பெரல் மற்றும், எறிகணை வீச்சுக்களை நடத்துவதோடு படையினர் தரைமார்க்கமாகவும் முன் நகரும் வாய்ப்புகள் அதிகரித்து வருகிறது.

இவர்களுக்கு உதவியாக விமானப் படையின் தாக்குதல்களும் திட்டமிட்டபடி நடைபெறும். இதேவேளையில், கிழக்கில் உள்ள புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக் குறித்தும், மேலதிக [illegible] அவசியம் பற்றியும் திருமலையில் நடக்கும் மோதல்களை தலைமையேற்று நடத்திவரும் சொர்ணம், வன்னி தலைமைக்குத் தெரிவித்துவருவதை தொடர்பாடல் மூலம் அறியக்கூடியதாக இருக்கும். அதேவேளை படையினரிடம் சரணடைந்துள்ள மற்றும் கைது செய்யப்பட்டுள்ள புலிகளின் தகவல்களும் உறுதி செய்கின்றன. கடல்மார்க்கமாக வடக்கிலிருந்து கிழக்கிற்கு புலிகளின் விநியோக மார்க்கம் முற்றாகப் படையினரால் தடுக்கப்பட்டுள்ளதால், தற்போதைய நிலையில் கிழக்கில் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகளுக்கு உதவ முடியாத நிலையில் புலிகள் இருக்கின்றனர். வன்னியிலிருந்து உதவி இல்லாததும், சண்டையில் ஏற்பட்டுவரும் இழப்பும், பின்னடைவும் கிழக்கில் உள்ள புலிகள் மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக புலிகளின் தகவல் பரிமாற்றத்தின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் வாகரையிலிருந்து புலிகள் தமது கனரக ஆயுதங்களையும், காயப்பட்ட முக்கிய உறுப்பினர்களையும் படகுகள் மூலமாக வன்னிக்குக் கொண்டு செல்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. தற்போதைக்கு இராணுவம், மாங்கேணியிலிருந்து பனிச்சங்கேணிக்கு முன்னேறியிருப்பதும், கட்டுமுறிவில் ஐந்து கிலோ மீற்றர் முன்னேறி இருப்பதும், படையினருக்குக் கூடுதல் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இதன் போக்கில் ஈச்சிலம்பத்தை ஊடாக பூநகர் மாவடிச்சேனைக்கான நகர்வை ஏ-15 பாதையூடாகவே நகர்த்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனிடையே புலிகள் தமது எஞ்சிய படைகளை பின் நகர்த்தி வருகின்றனர். இவ்வாறு பின் வாங்கும். புலிகள், தரவை, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளை நோக்கிச் செல்கின்றனர். வாகரை, கதிரவெளி, வெருகல், பால்ச்சேனை ஆகிய பகுதிகளை இராணுவம் கைப்பற்றுமாக இருந்தால், கடல் மார்க்கமாக புலிகளுக்கு இருக்கும் விநியோகமார்க்கம் அனைத்தும் தடை செய்யப்படும். அதன் பின்னர், கரடியனாரிலிருந்து பதுளை ஊடாகவே புலிகள் வெளியேற வேண்டியிருக்கும். அதற்கிடையே மேற்குறிப்பிட்ட பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர், கொக்கட்டிச்சோலை, தரவை, கரடியனாறு ஆகிய இடங்களை நோக்கிய தாக்குதலை நடத்தும்



திட்டமும் படையினரால் திட்டமிடக்கூடும்.

அத்தகையதொரு தாக்குதல் தொடுக்கப்படுமாக இருந்தால், புலிகளுக்கு சகல விநியோகமார்க்கமும் தடுக்கப்பட்ட நிலையில் பதுளை ஊடாகவும் தடைகள் ஏற்படுமிடத்து அகப்படும் புலிகளின் நிலை நெருக்கடிமிகுந்ததாகவே இருக்கும். இப்போதே உறுப்பினர்களுக்கு உணவு கூட சரியாக விநியோகிக்கப்படுவதில்லை என்ற தகவல்களும் கசியத் தொடங்கியுள்ளன.

வாகரையில் இதுவரை இருந்த தமது காவல் அரண்களையும், முக்கிய இடங்களையும் புலிகள் அகற்றியிருப்பதாகவும், அதனாலேயே அங்கிருந்து மக்கள் வெளியேறக் கூடியதான சூழல் தோன்றியிருப்பதாகவும் அங்கிருந்து வரும் மக்கள் கூறுகின்றனர். இவ்வாறான நிலையை படையினர் சரியாகப் பயன்படுத்தினால் புதுவருடத்துக்கு முன்னர் அந்த இடங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கைகள் படைத்தரப்பு மட்டத்தில் காணப்படுகிறது.

அலசுவது
- மதியூகி -

# அதிரடி அய்யாத்துரை



**கிறிஸ்மஸ்** கொண்டாட்டங்களில இருப்பியள். கிறிஸ்மஸ் தாத்தா எண்டால் சிகப்புச் சட்டை போட்டுக் கொண்டு வெள்ளை தாடி வச்சுக் கொண்டு பனிமான் வண்டியில வருவார் எண்டுதான் நினைச்சுக் கொண்டிருக்கையில், முதலில வெள்ளை உடுப்பில தான் கிறிஸ்மஸ் தாத்தா வந்தவ ரெண்டும் பிறகு குளிர்பானக் கம்பனி ஒன்று சிகப்பு நிறகவுணோடை கிறிஸ்மஸ் தாத்தாவைக் காட்டிப் பிரபலமானவுடன் அதுவே இண்டைக்கும் பழக்கமாயிட்டுது. வாள்போய் கத்தி வந்த கதையாக யாழ். குடாநாட்டில இந்தமுறை கிறிஸ்மஸ் உடுப்பாக எல்லோரும் வெள்ளையை அணியுங்கோ என்று கோரிக்கையை முன்வச்சிருக்கினமாம். அது இறந்த மக்களுக்காகவும், இருக்கிற பிரச்சினைக்கு சமாதானம் வேண்டியும் அர்த்தப் படுமாம் எண்டும் ஒரு கதையை விட்டிருக்கினம். எனக்கென்னவோ உந்த யோசனை சரியெண்டு பட்டாலும், உந்த திட்டத்துக்குப் பின்னால வேறை யாரோ உறுமிக் கொண்டிருக்கினம் எண்ட மாதிரித்தான் தெரியுது. கிறிஸ்தவ மக்களின் ஒரே பெருநாளில வெள்ளை உடுத்துங்கோ எண்டிறது சரியில்லையுங்கோ. ரவியான சந்திரனாருக்கு அழுத்தங்கள் ஏதும் இருந்து அதுக்கு மதத்தை பிரயோகிங்கோ எண்டு தேவையிருந்தால் அவர் வேறொரு தினத்தில உதைக் கோரிக்கையாக விடுத்திருக்கலாம். யாழ்ப்பாணத்தில நடக்கிற சில விஷயங்களைப் பார்க்கேக்க எது எதுக்குள்ள எல்லாம் நுழைய முடியுமோ அதுகளுக்குள்ளே யெல்லாம் மக்களின்ர நிம்மதியைக் கெடுக்கிற சைத்தான் புகுந்து உருவத்தை மாத்தி மாத்தி விளையாடுதுங்கோ. என்னுடைய பிரார்த்தனையெல்லாம் கிறிஸ்மஸ்ஸோடையாவது ஒரு மாற்றம் வரவேணும் எண்டதுதானுங்கோ.

**முன்னாள்** அதிகார அம்மணியை யுனெஸ்கோவின்ர ஆலோசகராக நியமிச்சதை இடைநிறுத்தி வச்சிருக்கினமாம். உந்தப் பதவியை அம்மணி பொறுப்பெடுக்கேக்கையே தான் இலங்கை பிரச்சினையில தலையிட மாட்டன் எண்டு சொல்லி இருந்தவ எண்டாலும், இங்க நடக்கிற மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் தொடர்பாகவும் சர்வதேச மட்டத்தில எழுந்துள்ள அதிருப்தியே இந்த முடிவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. பாவியார் போகுமிடமெல்லாம் பள்ளமும் திட்டியும் எண்ட கதையாக, அம்மையார் போற இடமும் இருக்குது. எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வுகாணாமல் இடைநடுவில விட்டுப்போட்டு புதுப் பிரச்சினை ஒண்டை தொடப்போனால் உதுதான் நடக்கும் எண்டதைத்தான் அம்மையாருக்கு நடந்த சம்பவங்கள் உணர்த்துது. முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் உயிரோடு இருந்திருந்தால் அம்மையாருக்கு உந்த நிலை ஏற்பட்டிருக்காது எண்டு அனுதாபப்படுகிறவையும் இருக்கத்தான் செய்யினம் என்ன செய்யிறது, தற்போதைய அதிகாரமான வரை எலக்ஷன் டைமில மண்கௌவ்வச் செய்து போட்டு ஏதாவது தில்லுமுல்லு செய்து அதிகாரத்தில இருக்கலாம் எண்டு அடிப்படையிலேயே தப்பான கணக்குப் போட்டதால வந்த வினைதான் இது எண்டும், அதைத்தான் அம்மணி நல்ல அனுபவிக்கிறார் எண்டும் இன்னொரு கூட்டம் சொல்லினம். உதில எது உண்மை எது பொய் எண்டதெல்லாம் அம்மையாருக்கே வெளிச்சமுங்கோவ்...

**ஏ-ஒன்பது** பாதைக்குள்ளால உணவுப்பொருட்களை மட்டும் கொண்டு போக அனுமதிப்பினமோ எண்டு அரச தரப்பு ரெண்டெழுத்தாரை நோக்கி கேக்கினம். "அதுக்கு ரெண்டெழுத்தார் அது முடியாது. திறக்கிறதெண்டால் முழுமையாக திறக்கவேணும்" எண்டு ஒரே பிடியா இருக்கினம். உதுக்கிடையில ரவியானராயரின்ர பூதவுடலை வீதியால குடாநாட்டுக்குக் கொண்டுபோகவேணும் எண்டொரு திட்டத்தைப்போட்டிச்சினம் அது நடக்கயில்லை. பிறகு பாலசிங்கத்தின்ர பூதவுடலை லண்டனில இருந்து கொண்டு வந்து ஏ-ஒன்பது வீதியூடாக வன்னிக்குக் கொண்டு வரவேணும் எண்டு நோர்வேக்காரர் ஊடகாவும் ஒரு டீலைப் போட்டிச்சினம். அதையும் அரச தரப்பு ஏற்றுக் கொள்ள இல்லை. திறக்கிறதெண்டால் சவப்பெட்டியை மட்டும் கொண்டு போறதுக்காக இல்லை. யாழ்.சனத்துக்கு சாப்பாட்டுப் பொருளையும் கொண்டுபோறதா இருக்க வேணும் எண்டு அரச தரப்பு சொன்னாப் பிறகு பூதவுடல் வராட்டிலும் பரவாயில்லை சாப்பாட்டுச்சாமான் போக விட ஏலாது எண்டிட்டினம் ரெண்டெழுத்தார்.

உந்தச் செய்தியை எந்தத் தமிழ் பத்திரிகையும் போடயில்லை. எல்லா நேரத்திலையும் இணையத்தில இருந்து செய்திபோடுறவை உதை மட்டும் சிங்களப் பேப்பர்காரன் போட்டாப்பிறகு இவை எடுத்து அவை அப்பிடிப் போட்டிருக்கினம் எண்டு போட்டிருக்கினம். சரி எதைப்போட வேணும் எதைப்போடக்கூடாது எண்டது அவை அவையின்ர விருப்பம். அதுகளுக்குள்ள தலையைப் போட்டு நாங்கள் குழம்பிக் கொண்டிருக்கக்கூடாதுங்கோ.

**பாலசிங்கத்தார்** இறந்த செய்தியைக் கேட்டவுடன அவரை 'மாமனிதர்' எண்டு குறிப்பிட்டு சில செய்தி ஆசிரியர்கள் செய்தி எழுதினவையாம். அது பார்த்தால் உந்தக் கூத்தமைப்புக்காரருக்குக் குடுக்கிற மாமனிதர் பட்டத்தையே பாலாவுக்கும் குடுத்தால் பாலா அளவுக்கு தங்களையும் உவை நினைச்சுக் கொள்ளுவினம் எண்டதாலையும், உவை பாலா அளவுக்கு ஒண்டும் செய்யயில்லை. பதவிக்காகவும், உயிர்பிழைப்புக்காகவும் தான் ஜால்ரா தட்டினம் எண்டதாலையும், உவைக்கு உந்த மாமனிதர் எண்ட பட்டம் மட்டும் போதும். உதில இருந்து கொஞ்சம் பெரிசாத்தான் பதவி கொடுக்க வேணும் எண்டிட்டுதான் 'தேசத்தின் குரல்' எண்ட பட்டத்தை அறிவிச்சினமாம். உந்தப் பட்டத்துக்கு முன்னம், ஈழத்தின் குரல், தேச நேசிப்பர், தமிழ் மைந்தன் எண்டெல்லாம் பல பட்டப் பெயர்களை பரிசீலித்துத் தான் கடைசியா 'தேசத்தின் குரல்' எண்டு சூட்டிச்சினமாம். உதில இருந்து ஒரு மெஸேஜ் என்ன தெரியுமோ பரிசீலனையில நிராகரிக்கப்பட்ட பல பட்டப்பெயர்கள் கிடப்பில கிடக்கு அதுக்கு உந்தக் கூட்டமைப்புக்காரர் ட்ரை பண்ணலாம். அப்புடியில்லை எண்டால் ஏற்கனவே பிக்சட் பண்ணியிருக்கிற மாமனிதர் எண்ட பட்டம் தயாராகவே இருக்குது. தேசப்பற்றாளர் எண்டதுக்கு கொஞ்சம் மேலதான் மாமனிதர் எண் டதை இனியாச்சும் பதவிகளுக்காகவும், பட்டங்களுக் காகவும் வாழிறவை புரிஞ்சு கொண்டால் சரிதான் எண்டு வாத்தியார் வாய்க்கு வந்தபடி வச்சிவாங்கிறா ருங்கோ. கடைசியா வாத்தியார் கேட்டகேள்விக்குத் தான் எனக்கும் பதில் தெரியாமக் கிடக்கு. அது என்ன தெரியுமோ, பேராசிரியர்மாருக்கு என்ன பட்டம் குடுப்பினம் எண்டதுதானுங்கோ. அந்தக் கேள்வி உங்களுக்குத் தெரிஞ்சால் பிளீஸ் எழுதி எனக்கு அனுப்பாமல் நேரா பேராசிரியருக்கே போஸ்ட் பண்ணுங்கோ உங்களுக்குப் புண்ணியமாப் போகுமுங்கோ...

**நாட்டில்** தூக்குதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு வருகுது. நீதித்துறையான சம்மேளனக்காரர் அதிகாரமானவருக்கு அனுப்பியிருக்கிற ஒரு கடிதத்தில நாட்டில சட்டம், ஒழுங்கை சனம் சரியாக மதித்து நடப்பதில்லை எண்டும், அதுக்குக் காரணம் சட்டம், ஒழுங்குகள் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எண்டும் சொல்லியிருக்கினம். கூடவே கடுமையான குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேணும் அப்போதுதான் குற்றங்கள் குறையும் எண்டும் குறிப்பிட்டிருக்கினம்.


மரணதண்டனையை எதிர்க்கிற காலகட்டத்தில நம்மட நாட்டைப் பொறுத்தவரை கடுமையான தண்டனையாக மரண தண்டனையே வழங்கப்பட வேணும் எண்ட நிலைமை உருவாகி இருக்குது. என்ன செய்யிறது. சில சமயங்களில முள்ளை முள்ளாலை எடுக்கிற வைத்தியமும் செய்ய வேண்டியிருக்கு எண்டினம். சட்டம் தெரிஞ்சவை குற்றங்கள் அதிகரித்து நம்மட சமூகத்தை குற்றவாளிகளின் கூடாரமாக மாற்றிவிடக்கூடாது எண்டதுக்காகத்தண்ணும் சட்டமும், ஒழுங்கும் செம்மையாக அமுல்படுத்தப்பட அதிகாரமானவர் நடவடிக்கை எடுக்க, உடனடி நடவடிக்கை எடுத்தால் நல்லது எண்டது தானுங்கோ. எல்லோருடைய கோரிக்கையாகவும் இருக்குங்கோ...சட்டம், ஒழுங்கு, தண்டனைகள் என்ன ஒழுங்கில இருந்தால் மற்றதுகளில மாற்றம் வரத்தானேங்கோ வேணும்...ஓமோ... இல்லையோ...

# மௌனம்!

**வார்த்தையும்,** ஊமையும் போல் மௌனமும் ஒரு மொழியாகியுள்ளது. "பேசக்கூடாத இடத்தில் பேசுவதும், பேசவேண்டிய இடத்தில் போசாமல் இருப்பதும் தவறு" என்பர். அதேபோல், 'சிந்திக்காமல் பேசுவதும், பேசியபின் சிந்திப்பதும் தவறு' என்கிறார் வள்ளுவர். இடியப்பச்சிக்கலாக நம்முன்னே விரிந்து கிடக்கும் உலகப் பிரச்சினைகள் பற்றியும், ஒரு சதத்திற்கும் பிரயோசனமில்லாத விடயத்தைப் பற்றி தெரியாததைத் தெரிந்தது போலவும், தெரிந்ததைத் தெரியாததைப் போலவும் உளருவது எப்போதும் நம் மரியாதையைக் குறைக்கும் விடயங்கள். பல பேரோடு பேசும் போது அவர்களின் கருத்துக்கள் உண்மையாக இருப்பதை விடவும் பொய்யானதாகவும், மிகைப்படுத்தப்பட்டதாகவும் இருப்பதே அதிகமான வழக்கமாகும். அந்தப் பொழுதுகளில் அவர்களுக்கு விளக்கப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றும், விவாதிக்க வேண்டும் என்றும் மனது அடித்துக் கொள்ளும். ஆனாலும் சில பொழுதுகளில் இரண்டையும் செய்யாமல் மௌனமாகவே இருந்துவிடுவேன். வாழ்க்கையில் நம்மைச் சந்திக்கும் அநேகமானவர்கள் நேர்மையாகத் தவறை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவோ நியாயத்தை நியாயத்தின் பக்கமாகப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவோ இருப்பதில்லை. அநேகமானவர்கள் தெரிந்து கொண்டே விதண்டா வாதம் பேசுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடன் பேசுகின்றபோது மௌனம்தான் சிறந்த மொழிப்பிரயோகமாக இருக்கிறது. ஆனாலும் பிறவி ஊமையாக இல்லாதபடியால், பேச்சுத்திறன் நிறைந்தவர்களாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மௌனமாக இருந்துவிட முடிவதில்லை.

மௌன விரதம் என்று ஒரு நாள் பூராகவும் பேசாமல் இருப்பவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் படும்பாடு சிரிப்பாக இருக்கும். சைகைகளால் விடயங்களை விளக்குவதில் எத்தனை சிரமங்கள்! ஒரு நாளைக்கு ஊமையாக வாழ்வதென்பது பெரும் சிரமமாக இருக்கும். அப்படியானவர்கள் இரண்டு விதமான கருத்துகளைச் சொல்லுவார்கள். சச்சரவுகளுக்குள் தலையிடாமல் ஊமையாக இருந்துவிடுவதே மேல் என்பார்கள். இல்லாவிட்டால், ஊமைகளின் நிலைமை எவ்வளவு துன்பமானது என்று அனுபவக்கருத்துக்களைச் சொல்வார்கள். உண்மையில் மௌனம் என்பது, நமக்குள் ஆத்ம பலத்தை அதிகரிக்கச் செய்கிறது. கண்டபடி வார்த்தைகளை உதிர்த்துவிடாத நிமிடங்களை மௌனமான பொழுதுகளாக மாற்றியவர்களுக்கு இந்த உண்மை புரியும். கணவன் - மனைவிக்குள் வாய்த்தகராறு என்றால் இருவருமே விவாதிக்காமல் இருந்துகொண்டால் அதுவே முக்கால்வாசிப் பிரச்சினைகளைக் குறைத்துவிடுகிறது. பதிலுக்குப் பதில் விவாதிக்கின்ற போதுதான் உறவு விரிசலடைகிறது. நட்பு, காதல், உறவு முறைகள் எல்லாமே வார்த்தைகளின் பிரயோகத்தில்தான் தங்கியிருக்கிறது. வார்த்தைகள் நம்மை மீறி வந்து சிந்தப்படுகின்றபோது, உறவுகளின் அத்திவாரம் சுக்கு நூறாக உடைந்து உதிர்ந்துவிடுகின்றது. வீசப்பட்ட வார்த்தைகளை மீண்டும் பொறுக்கி அள்ளிக் கொள்ள முடியாது. ஒரு



தருவது : தேசன்


வார்த்தை கூட இந்த நெடும் பகையைத் தேடித் தந்துவிடும். தாறுமாறாக வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டுவிட்டால், குறித்தவர்களை மறுமுறை சந்திக்கின்றபோது, தலைகுனிந்து கொள்ள நேரிடும். கூச்சமும், அவமானமும் எந்த வார்த்தைகளை வீசி அவர்களுக்கு ஏற்படுத்த எண்ணினோமோ அதைவிடப் பலமடங்கு அவமானம் நமக்கு வந்துவிடும். அதற்கு முன்னர் ஒருவிநாடி நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொண்டு மௌனம் சாதித்து விட்டால், நமது மதிப்பு உயரும்.

வார்த்தைகள் கீழ்த்தரமானவையாக இருக்கின்ற போது, அவர் கற்ற கல்வி, பெற்ற பெயர், அவர் மீதான மதிப்பு என எல்லாமே சிறுமைப்பட்டு விடுகிறது. வார்த்தைகள் நம்மை அளவீடு செய்து விடுகின்றன. சில சிறுவர்கள் வயதுக்கு மீறிய பேச்சைப் பேசுவதைக் கேட்டிருக்கின்றேன். அவர்களைப் பார்த்து இந்தச் சமூகம் வெட்கப்படுவதோடு அச்சிறுவர்களின் பெற்றோர், அவர்கள் வளர்ந்த சூழல் எல்லாமே தவறானதாக மதிப்பிடப்படுகிறது. வார்த்தைகள் மிகக் கவனமானவையாக இருக்கவேண்டும். நமது வார்த்தைகளில் உண்மையும், கருணையும், நியாயமும் நிறைந்திருந்தால் நமது மரியாதையைக் கூட்டும்; இல்லையெனின் உடைகளை மறைத்து இந்தச் சமூகத்தின் கண்களுக்கு நம்மை நிர்வாணமாக்கிக் காட்டிவிடும். பேச முடிகிறது என்பதற்காக மௌனிக்க வேண்டிய பொழுதுகளையும் வார்த்தைகளால் உழுது போட்டு விடக்கூடாது.

சரி எப்போதெல்லாம் நாம் மௌனமாக இருந்தால் நல்லது என்று கேட்பது புரிகிறது. என்னைப் பொறுத்த வரை ஒருவர் தன்னை மறந்து வார்த்தைகளைக் கொட்டுகின்றபோது நாம் மௌனமாக இருந்துவிடுவது மேல். அதேபோல் நமது வார்த்தைகள் நியாயமாகக் கவனத்தில் எடுக்கப்படாத சந்தர்ப்பமாக இருக்கும் போதும் நாம் மௌனமாக இருந்துவிடுவது மேல். இந்த இரண்டு சந்தர்ப்பத்திலும், நாம் பேச வேண்டிய இடைவெளியையும் பேசக்கூடாத இடைவெளியையும் ஒரே ஒரு மௌனம் ஈடு செய்துவிடுகிறது. அங்கே மௌனத்தின் பெறுமதி மிக அதிகமாகும். நாம் பேசிப் பெறக்கூடிய நன்மையை விடவும், மௌனம் பெற்றுத்தரும் நன்மை அதிகமாக இருக்கும்.

அதேபோல நாம் பேசாத வார்த்தைகளையும், மௌனம் சூழலுக்கு ஏற்றவிதத்தில் பிரயோகித்துக் கொள்கிறது. பல நேரங்களில் மௌனத்தின் அழகு மிக நளினமானதாக இருக்கும். மௌனம் ஆர்ப்பரிக்கின்ற மனமும் இடமும் மிக ரம்மியமானதாக இருக்கும். ஆனால், தவறிழைத்தவர்களின் மௌனமும், முட்டாள்களின் மௌனமும் ரம்மியத்தை ஏற்படுத்தாது. மாறாக வறட்சியான நிலையையே உருவாக்கும். மௌனத்துக்குப் பலம் அதிகம். அது நம்மை அடக்கி வைக்கின்றது. தேவை இல்லாத நேரத்தில் மௌனம் சாதிப்பது, பிந்திய ஏமாற்றங்களையும், மன உளைச்சல்களையுமே உண்டுபண்ணும். மௌனம் நம்மை உலகத்தைச் சுற்றியே உருட்டிக் கொண்டிருக்க உதவுகிறது. மௌனத்துக்குப் பலவாறும் அர்த்தம் செய்துகொள்ளப் பொருத்தமாக இருந்தாலும், மௌனத்துக்கே பிடித்த அர்த்தம் "சம்மதம்" என்பதுதான். அதை மௌனத்திற்கே புரிய வைத்தவர்கள் மணப் பெண்கள்தான். பெண்களிடம் திணிக்கப்படாத ஒவ்வொரு மௌனமும் சம்மதத்தில் மேனியெங்கும் மகிழ்ச்சியையும் பூரிப்பையும் பூசிக் கொள்கிறது. அசட்டுத்தனமாக மௌனம் காப்பவர்கள் மீது எனக்குக் கோபம்தான் வரும். மந்தம் பிடித்த பலபேரிடம் இந்த அசட்டுத்தனமான மௌனம் சிறைப்பட்டுக் கிடக்கிறது. அவ்வாறானவர்களிடம் அகப்பட்டுப் போயிருக்கும் மௌனங்களுக்காக உதடு பிரிக்காத ஒரு புன்னகையால் நம் கவலைகளைப் பகிர்ந்து கொள்வோம்.



## மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும். வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

### எனது தனித்தன்மை என்ன?

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

### இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**

மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**

பெருமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**

பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**

தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**உலக மலையாள மாந்திரீக சக்ரவர்த்தி**

பேராசிரியர் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP

PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM, No- 162 KOTAHENA STREET COLOMBO 13

Tel-011-2470615, 011-2342463, 011-2342464, 011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www.drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.


No-33, Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya. Tel: 052-2222508



வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

## பண்டாரவளை அதிசிறந்த மலையாள மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



உங்களுடைய வெற்றி சுகம், சந்தோஷத்துக்கு சேவை செய்வேன் இன்றே அழையுங்கள். 057-2224591-92

## ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

**சந்திப்பு**

**பண்டாரவளையில்**

திங்கள் முதல் சனிக்கிழமை வரை

**காலை 8.00 மாலை 6.00**

நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில் IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

**ஞாயிறு விடுமுறை கவனிக்கவும்.**

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!

தொ. பே. +94-572232441 +94-773227005

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

## ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83

Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441

Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...




# அன்ரன் பாலசிங்கம்

**இந்த** நாட்டில் பயங்கரவாதத்துடன் மிகவும் நெருங்கிய பிரபலமான பெயர்தான் அன்ரன் பாலசிங்கம் என்பது. அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்புக்குமிடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது புலிகள் இயக்கத்தின் அரசியல் நியாயவாதி என்ற பெயரில் அறிமுகமான அன்ரன் பாலசிங்கம், தற்போது சுமார் 43 வருடங்களுக்கு முன் ஸ்ரீலங்காவிலிருந்து பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்பாளராகச் சேர்ந்து பணி புரிந்தவர். அப்பொழுது இவருடைய பெயர் எஸ்.பி.ஸ்ரனிஸ்லொஸ் என்பதாகும். பிற்காலத்தில் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்று இவர் இங்கிலாந்தில் குடியேறிய பின்னரே எஸ்.பி.ஸ்ரனிஸ்லொஸ் என்ற தனது சொந்தப் பெயரை அன்ரன் பாலசிங்கம் என மாற்றியமைத்துக் கொண்டு புலிகள் இயக்கத்தின் நியாயவாதியாக எவ்வாறு மாறினார் என்பது பற்றி எவரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

பிரித்தானிய தூதரகம் கொள்ளுப்பிட்டிக்கு 1963 ஆம் ஆண்டில் மாற்றப்பட்ட பின்னரே எஸ்.பி. ஸ்ரனிஸ்லொஸ் என்னும் பெயரில் ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்பாளராக இந்த அன்ரன் பாலசிங்கம் நியமிக்கப்பட்டார். இவர் வீரகேசரி செய்திப் பத்திரிகையின் செயலகத்திலிருந்துதான் இவ்வாறு பிரிட்டிஷ் தூதரக சேவையில் சேர்ந்துள்ளார். பின்னர் 1972ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வசிப்பதற்காக சென்றார். பாலசிங்கம் எந்தவித விசாப் பிரச்சினையுமின்றி பிரித்தானியாவுக்கு வந்து சேர்ந்தார். அதன்பின்பு அவர் லண்டனிலுள்ள south bank சர்வகலா சாலையில் படித்தார். அவர் அங்கு தனது கலாநிதிப் பட்டத்திற்கான கட்டுரையாகத் Theory of man என்ற கட்டுரையைச் சமர்ப்பித்தார். இந்தக்கட்டுரைக்காக அவருக்கு கலாநிதிப்பட்டம் கிடைத்தது பற்றி எதுவித தகவலும் இல்லை. லண்டனில் வாழ்ந்த தமிழ் இளைஞர்களுடனான தொடர்பில் பாலசிங்கம் Tamilnations self determination என்ற ஆங்கிலப் புத்தகத்தை வெளியிட்டார். அந்த ஆங்கிலப் புத்தகத்தை அடியொற்றியே அன்று வெளிவந்த சோஷலிசத் தமிழீழத்தை நோக்கி என்ற புத்தகம் வெளிவந்தது. அந்தப் புத்தகத்தை இலங்கைக்கு கொண்டுவர உதவியவர் கிருஷ்ணனாகும் . கிருஷ்ணனுக்கு அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைச் செயலாளராக இருந்த உமாமகேஸ்வரனோடு தொடர்புகள் இருந்தது. உமாமகேஸ்வரனே அன்று புலி இயக்கத்தின் சர்வதேசத் தொடர்புகளுக்குப் பொறுப்பாக இருந்தவராகும். சோஷலிஸத் தமிழீழத்தை நோக்கி புத்தகம் வெளிவந்த பிறகு உமாமகேஸ்வரன் பாலசிங்கத்தை ஒரு தடவை இந்தியாவுக்கு வரும்படி கேட்டிருந்ததோடு அவரது பயணத்துக்கான விமானப் பயணச்சீட்டையும் அனுப்பியிருந்தார்.

80களில் புலிகளிலிருந்து உமாமகேஸ்வரன் வெளியேறி புளொட் இயக்கத்தை ஆரம்பித்திருந்தார் - உமாமகேஸ்வரன் பிரபாகரன் பிளவு பற்றித்தெரியாத பாலசிங்கம் உமாமகேஸ்வரனைச் சந்திக்கச் சென்றிருந்தார். சென்னைக்கு வந்திருந்த பாலசிங்கம் ஏற்கனவே உமா மகேஸ்வரன் கொடுத்த விலாசத்திற்குச் சென்ற பொழுது அங்கே உமாமகேஸ்வரன் இருக்கவில்லை. பிரபாகரன்தான் இருந்தார். பிரபாகரனுடனான சந்திப்பின் பின் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகராக மாறிய பாலசிங்கம் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தையும் நியாயப்படுத்தி வந்தார்.

**— சத்திரியன் —**

நியாயப்படுத்தமுடியாத புலிகளின் கொடூரம் நிறைந்த கிறுக்குத்தனத்தை நியாயப்படுத்துவதற்கு பாலசிங்கம் தனது வாழ்நாள் முழுவதும் போராடி வந்திருக்கிறார். ஆனால் நிலைமைகளின் பரிணாம வளர்ச்சியில் புலிகளுக்கு எந்தவொரு விடயமும் சாதகமாக அமையவில்லை. சர்வதேச அபிப்பிராயம் புலிகளை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் பொழுது பதில் சொல்லவேண்டிய பாலசிங்கம் மரணத்தினூடாக தப்பிச்சென்றுள்ளார். புலி போன்ற ஒரு பாசிஸ அமைப்பின் அரசியல் ஆலோசகராக தனது வாழ் நாளின் பின்பகுதியில் இருந்ததை தவிர தமிழ்மக் களுக்காக பாலசிங்கம் எந்தக் காலகட்டத்திலும் கவலை கொண்டவரல்ல.மாவீரர் தின உரைகளின் போது பாலசிங்கம் பேசிய பேச்சுக்கள் அருவருக்கத்தக்கவை. கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டவை. விசில் அடிக்கின்ற கும்பல்களை அவர் ரசித்தார். இந்தக் கும்பல்கள் எந்தவிதத்திலும் சிந்திக்கும் நோக்கில் அவர் உரை நிகழ்த்தியதில்லை. இந்தக் கும்பல்கள்தான் புலிகளை கண்மூடித்தனமாக ஆதரிக்கின்ற சக்திகளாக புலம்பெயர்நாடுகளில் இருந்து வருகின்றன. எல்லாவிதமான பலவீனங்களையும் புலிகள் அமைப்பிற்கு சாதகமாக பயன்படுத்துவதில் அரசியல் நாணயத்தில் மிகவும் பலவீனப்பட்டுப்போன பாலசிங்கம் இறுதியாக புலிகள் அமைப்பை சர்வதேச அளவில் பயங்கரவாத அமைப்பாக பல நாடுகள் தடைகளை விதித்தபோது எதுவும் செய்ய முடியாத நிலையில் லண்டனில் இறுதிக் காலத்தில் வாழ்ந்தார். புலிகள் அமைப்பு ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது தனது கொள்கைகளில் இருந்து குத்துக்கரணம் அடித்துக்கொண்டதற்கும் பாலசிங்கத்தின் ஆலோசனைகளே முக்கிய காரணமாக அமைந்தன. பொய்களையும் வீராப்புகளையும் புலிகளின் அரசியலுக்கு மூலதனமாக இட்ட பாலசிங்கம் இறுதியில் சர்வதேச அபிப்பிராயங்களில் இருந்து புலிகளைக் காப்பாற்ற முடியாமல் திணறிப் போனார். புலிகளோடு வாழ்ந்த ஒவ்வொரு கால கட்டங்களிலும் புதிய புதிய தவறுகளை பாலசிங்கம் செய்து கொண்டிருந்தார்.


அன்ரன் பாலசிங்கம்

*நன்றி :- THENEE*

# அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு

"However, when compared to the vast ocean of the collective tragedy faced by my people, my illness is merely a pebble," -Anton Balasingham- - **எவ்வாறாயினும், எனது மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பெரும் அவலங்களோடு ஒப்பிடுகையில் எனது நோயானது ஒரு வெறும் துரும்பென்றே சொல்ல வேண்டும். - - அன்ரன் பாலசிங்கம்-** ஒரு மாதத்திற்கு முன்னர் பாலசிங்கம் கடும் சுகயீனமுற்றிருப்பதாக அறிந்து அவரைப் பார்க்கச் சென்ற தமிழ் நெற் ரிப்போட்டர் ஒருவரிடம் பாலசிங்கம் கூறியதாக அந்த இணையத்தளம் நவம்பர் 22ஆம் திகதி ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அதுமட்டுமன்றி பாலசிங்கத்திற்கு ஏற்பட்டிருந்த புற்று நோயைப் பற்றியும் அவ் இணையத்தளம் பினவருமாறு எழுதியிருந்தது. *Mr. Anton Balasingham, theoretician and political advisor of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) has been diagnosed with bile duct cancer (cholangiocarcinoma), a rare and aggressive malignancy of the biliary system. The cancer is in an advanced stage and has spread to his liver, lungs, abdomen and bones,* இந்த மோசமான புற்றுநோய் மிக அரிதாகவே வரக்கூடியதென்றும், இந்தப் புற்று நோயால் அவரது உடலின் மிக முக்கிய பாகங்களான ஈரல், நுரையீரல். வயிற்றுப் பகுதி மற்றும் எலும்பு மச்சைகள் என்பன பாதிக்கப்பட்டிருந்ததாகவுமே இச்செய்தியின் சாராம்சம் குறிப்பிட்டிருந்தது. பாலசிங்கத்தின் இழப்பு வேறெல்லாரையும் விட வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கே பேரிழப்பாக தெரியும் என்பதில் ஐயமில்லை. ஆனால் புலிகளின் அரசியலை எதிர்ப்பவர்களும் அவரின் இழப்பால் சற்று கவலைப்பட்டுதான் ஆகவேண்டும். காரணம் புலிகளின் பிரதம பேச்சாளரும் மதியுரைஞருமாக செயற்பட்ட அன்ரன் பாலசிங்கம் அடிக்கடி வெளியே உதிர்த்துவிடும் கருத்துக்களால் புலிகளுக்கு ஏற்பட்ட அவமானங்களும் இடைஞ்சல்களும் பலரும் அறிந்ததே. புலிகளுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் அவ்வாறான கருத்துக்களை அவர் ஏன் எதிர்க்கின்றார் என்று பலரும் தலையைச் சொறிந்து கொண்டனர். ஆனால், பாலசிங்கம் அவற்றை அறியாமல் செய்யவில்லை, அறிந்து வேண்டுமென்றேதான் செய்கின்றார் என்பதுதான் பாலசிங்கத்தை நன்கு அறிந்த பல முன்னாள் புலி ஆதரவாளர்களின் கருத்தாகும். தனது புற்றுநோய் பற்றியும் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அவலம் பற்றியும் அவர் நோய்ப்படுக்கையில் இருந்து இறுதியாக வெளியிட்ட கருத்துப்பற்றி பிரான்ஸிலும் கனடாவிலும் வசிக்கும் இரு முன்னாள் தீவிர புலி ஆதரவாளர்கள் என்னிடம் பேசும்போது இப்படிக் கருத்துக்கூறினர். -பாலா **அண்ணை அந்தக் கதைக்குள்ளையும் ஒரு முக்கிய விசயத்தை நாசூக்காகச் சொல்ல வருகிறார். அதாவது தமிழ் மக்களைப் பிடித்து ஆட்டுவிக்கும் புலி அரசியல் என்னும் புற்றுநோயும் அதனால் தமிழர்கள் பட்டுவரும் அளவில்லா துன்பங்களுடனும் பார்க்கும்போது தனக்குப் பிடித்திருக்கும் நோய் சர்வ சாதாரணமானது** - என்பதைத்தான் பாலா அண்ணா கூற முற்படுகின்றார் என்றனர். அவ்விருவரினதும் கருத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தமை எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. பாலசிங்கத்துடன் மிக நெருக்கமாக பழகியவர்களுக்கு அவரின் மனவோட்டம் நன்றாகப் புரிந்திருந்தது. அதேபோலத்தான் பாலசிங்கத்துக்குத்தான் பிரபாகரனின் மனவோட்டமும் மிக நன்றாகப் புரிந்திருந்தது. பிரபாகரனின் சிந்தனைப் போக்கைப்பற்றி பாலசிங்கம் அடிக்கடி பல்வேறு விதமாக பல்வேறு தொனிகளில் கருத்துக்களை வெளியிட்டிருப்பது அவருடன் நெருக்கமானவர்களுக்கே தெரியும். பாலசிங்கத்தோடு நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டிருந்த முன்னாள் புலி ஆதரவாளர் ஒருவருடன் பேசும்போது, **இந்த முடியரசனிட்ட இருந்தும் வெடியரசனிட்ட இருந்தும் தமிழ் சனத்துக்கு இனி விமோசனமில்லை நானாவது கெதியா உவங்களிட்டையிருந்து கழறவேணும்** என்றாராம் பாலசிங்கம். **யார் பாலா அண்ணை முடியரசன்? யார்** வெடியரசன்? என்று மற்றவர் வினவ... **என்னடாப்பா முடியரசனைத் தெரியாதே. அதுதான் எங்கட கட்டைக் குத்தியன். வெடியரசன்தான் உந்த நாசமாய்ப்போவான் பொட்டன். அட.. தம்பி இவன் முடியரசனை திருத்தினாலும் திருத்தலாம்போல கிடக்கு. ஆனால் அந்த வெடியரசனோடயெல்லா ஒண்டும் செய்ய ஏலாமக் கிடக்கு. அவன் சுட்டுத்தள்ள நான் எல்லா உலகத்துக்கும் பதில் சொல்வேணும். இந்த முடியரசனுக்கும் கட்டைக் குத்தியனுக்கும் இது விளங்குதில்லை. அவனுக்கு ஏதாவது சொல்லப்போனா...** ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ பாலா அண்ணை...எல்லாம் சரிவரும்.. எண்டுபோட்டு ஹீ..ஹீ..எண்டு இளிக்கிறான் அந்த மூதேசி... நாய்... என்று பாலா அண்ணை அரை மணித்தியாலமாக தொலைபேசியிலை பொரிந்து தள்ளினராம். அன்று பாலா அண்ணை தொலைபேசியில கதைச்சதை அப்பிடியே ரெக்கோட் பண்ணி வன்னிக்கு அனுப்பினால் அதோட பாலா அண்ணையிட கதை சரியாப் போயிருக்கும் என்றார் அந்த முன்னாள் புலி ஆதரவாளர் என்னிடம். பாலா அண்ணையொடு மிக நெருக்கமாகப் பழகியவர்கள் பலரிடமும் கடந்த காலங்களில் அவர் கூறியவற்றை அவர்கள் இரகசியமாக வைத்திருந்த நல்ல காரியத்தால்தான், பாலா அண்ணை இவ்வளவு காலமும் உயிரோடு இருந்தார் என்று சொன்னாலும் தப்பில்லைதான். **மற்றொரு சம்பவம்** 1990இல் இருந்து 1994வரை யாழ். குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் செல்வதற்கு பிரேமதாசா அரசு அனுமதி வழங்குவதை நிறுத்தியிருந்தது. ஆனாலும் பல பத்திரிகையாளர்கள் அரசாங்கத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அங்கு சென்றுவந்தனர். அவ்வாறு சென்ற ஒரு இந்தியத் தமிழ் பத்திரிகையாளருக்கும் பாலசிங்கத்திற்கும் நடந்த உரையாடல் மிக சுவாரசியமானது. பாலசிங்கம் இந்தியாவில் இருந்த காலத்திலேயே அப்பத்திரிகையாளரை பாலசிங்கத்திற்கு நன்கு அறிமுகமாதலால் அப்பத்திரிகையாளருக்கு பாலசிங்கத்தின் வீட்டில் இராப்போசன விருந்து வழங்கப்பட்டது. அங்கும் வழமைபோல் பாலசிங்கம் தனது பிளாக் அன்ட் வைற் விஸ்கியை உடைத்துப் பரிமாறினார். பாலா அண்ணருக்கு ஓரிரு சுற்று விஸ்கி தாராளமாக உள்ளே இறங்கியதும் பத்திரிகையாளர் பாலசிங்கத்திடம் இப்படிக் கேட்டார். **ஆமா இப்பிடியே தொடர்ந்து யுத்தத்தை புடிச்சிக்கிட்டிருந்து ஓங்க தலைவர் என்னதான் பண்ணப்போறாரு..மக்கள்தானே அதிகமா அழிஞ்சு போறாங்க...எனக்குன்னா ஓங்க தலைவரு என்னா சிந்திக்கிறாரன்னே புரியமாட்டேங்குது..** என்றார். உடனே பாலா அண்ணர் இடை மறித்து **அடேயப்பா...அவர் மற்றவைக்குத்தான் தலைவர் எனக்கொண்டும் தலைவரில்லை நானில்லாட்டி இம்மட்டுக்கு அவர் எப்பவோ சரி. அதைவிடு... என்ன சொன்னீர் உமக்கு அவர் என்ன யோசிக்கிறார் என்றே விளங்க இல்லையோ..? அடே தம்பி... அவனோட 15 வருசத்துக்கு மேல ஒண்டா இருக்கிற எனக்கே அவன் எந்த நேரம் என்ன செய்வான் எண்டு விளங்குதில்லை. உனக்கென்னெண்டு விளங்கிறது?** என்றாராம். **அதில்லீங்க மிஸ்டர் பாலா... இந்தியாவையும் எதிர்த்துக்கிட்டு... உலக நாடுகளிட்டையும் கெட்ட பேர் எடுத்திக்கிட்டு எப்பிடி ஒரு போராட்டம் வெற்றி பெறப்போவுது. யாராவது ஒருத்தரோட நட்பா இருக்க வேணாமா?** என்றார் பத்திரிகையாளர். அட நீர் **ஒண்டப்பா... காட்டு மிருகங்களைப் பற்றி படிச்சிருக்கிறீரா? எல்லா மிருகமும் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்துதான் வாழும். இந்தப் புலி இருக்குதே அது மட்டும் எப்பவும் தனியாத்தான் வாழ்க்கை நடத்தும். அதவேறந்த மிருகத்தையும் நம்பாது. அதை நம்பி வேறெந்த மிருகமும் கிட்டவும் வராது. அதுமாதிரித்தான் இவங்களும்...**என்றார் பாலசிங்கம். **அப்பிடீன்னா இவங்கள நம்பி யார்தான் உதவி பண்ணப் போறாங்க. இந்தப் போராட்டம் என்னாகிறது?** என்று கேட்டார் பத்திரிகையாளர். **இவங்களை நானே நம்பிறதில்லை...வேற யார் நம்புவான் சொல்லு பாப்பம். அட தம்பி நாங்கள் பிரேமதாசாவோட கதைச்சுக் கொண்டிருக்கிறம். அவரோட போய் கதைக்கச் சொன்னவனும் இவன்தான்.ஆனால் நாங்கள் முக்கியமான 6,7 பேர் அங்க கொழும்பில நிக்கையிக்க இவன் சண்டையை துவக்கி விட்டிட்டான். அண்டைக்கு அமைச்சர் ஹமீட் இல்லாட்டி நாங்கள் துலைஞ்சிருப்பம். இவனை நம்பேலாது தம்பி...** என்று பாலசிங்கம் சொல்வதை பரிதாபமாகக் கேட்டவிட்டு அந்த பத்திரிகையாளர் திரும்பி வந்தார். இதெல்லாம் எதைக் காட்டுகின்றது? பாலசிங்கம் ஒன்றும் விளங்காமல் புலிகளோடும் பிரபாகரனோடும் இருந்தவரல்ல. நன்றாக எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு புலிகளின் சகல நாசகார அரசியலுக்கும் துணைபோனதுடன் அந்த நாசகார அரசியலை நியாயப்படுத்தி வந்தவர் என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும். ஆகவே தமிழ் சமூகத்தைப் பீடித்திருக்கும் புலி அரசியல் என்னும் சமூகப் புற்றுநோயினால் தமிழ் மக்கள் படும் அவஸ்தைக்கு அவரும் பிரதான காரணகர்த்தாவாகும். **பாலசிங்கம் பற்றி பழைய கதையொன்று** பாலா அண்ணர் என்கின்ற பாலசிங்கம் மதியுரைஞர் என்ற இந்த நிலைக்கு உயருவதற்குள் சந்தித்த சோதனைகள் பல. அவர் ஒரு சிறுநீரகத்தை இழந்து உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதுதான் யாவரும் அறிந்த சோதனை; அறியாத சோதனைகள் பல. அவற்றில் சில மிகச் சுவாரசியமானவை. 1985ஆம் ஆண்டு சென்னை வடபழனியில் ENLF என்று அழைக்கப்படும் ஈழதேசிய விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் திம்புப் பேச்சு வார்த்தைகளுக்குப் போவதற்கு சில நாட்களுக்கு முன் இது நடந்தது.

**எஸ். மனோரஞ்சன்**


சபாரத்தினம், பிரபாகரன், பத்மநாபா, பாலகுமார்


*(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**அந்நாளில்** திரு. எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்து கொண்டே, படத்திலும் நடிக்கப் போகிறார் என்னும் செய்தியை, அன்றாடம் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்துக் கொண்டு வந்தன.

ஓரிரு மாதங்களுக்குப் பிறகு, படத்தில் நடிப்பதை என்ன காரணத்திற்காகவோ எம். ஜி. ஆர். மறுபரிசீலனை செய்து தவிர்த்துவிட்டார். காரணத்தை நானும்



கேட்கவில்லை; அவரும் சொல்லவில்லை.

இதற்குள், தயாரிப்பாளார் திரு. தர்மராஜ் என்னுடைய நெருங்கிய நண்பராகிவிட்டார். திரு. மாருதிராவ் அவர்கள் எனக்குப் பழம் பெரும் நண்பர்.

இந்த இருவரைப் பற்றியும் இந்தக் கட்டத்தில் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. மாருதிராவ், மிகச் சிறந்த தேர்ந்த ஒளிப்பதிவாளர். நடிகர் திலகம் திரு. சிவாஜி அவர்களுக்கு முதன் முதல் Test எடுத்தது - இவருடைய ராசியான கைதான். Black and White இல் வியத்தகு சாதனைகளை நிகழ்த்திய திரு. மாருதிராவ் 'அன்பே வா' போன்ற வண்ணப் படங்களிலும் நம்மை அசத்தியிருக்கிறார். திருவாளர்கள் கிருஷ்ணன் பஞ்சுவோடு இணைந்து தமிழ், ஹிந்தி எனப் பல்வேறு மொழிப் படங்களில் மாருதிராவ் அவர்களின் ஒளிப்பதிவு கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படி - மைக்கேல் ஏஞ்சலோ ஓவியம் மாதிரி இருப்பதைக் கண்டு நானும் ஓர் ஓவியன் என்கிற முறையில் பிரமித்திருக்கின்றேன். 'மாருதிராவ் Negative என்றாலே அற்புதமாக இருக்குமய்யா' என்று என்னிடம் பிரபல இயக்குநர் திரு. கே. சங்கர் அவர்கள் மனம் திறந்து பாராட்டியதுண்டு. "லட்டு லட்டாகப் படம் எடுத்திருக்கிறார்" என்று வாய் நிறையச் சொல்லும் வண்ணம் மாருதிராவின் கைவண்ணம், கவின்மிகு கலைவண்ணமாக மிளிரும். தமிழ் சினிமாவின் தலைசிறந்த ஒளிப்பதிவாளர்கள் வரிசையிலே திரு. மாருதிராவுக்குத் தனியிடமுண்டு. என்பால் மிகுந்த அன்புடைய பண்பாளர். A to Z ஒரு Perfect Gentlemen - என்று எல்லோரும் பாராட்டும் வண்ணம், தம் படைப்புக்களாலும், பண்புகளாலும் ஒரு சேர நம் உள்ளங்களை ஈர்க்கும் இனிய மனிதர்.

நல்ல நூல்கள் பால், நுவலருங்காதல் கொண்டவர். அவரைப் பற்றி பாரதீய வித்யா பவனில் அவருக்காக வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், நான் வாழ்த்திப் பாடிய சில வரிகள் இன்னமும் என் சிந்தனையில் பசுமையாக இருக்கின்றன.

'மனையாளின் நூலிடையில்
மனம் வைக்க நேரமின்றி
மணித்தமிழ் நூலிடையில்
மணிக்கணக்காய் மனம்
வைப்பார்'

- என்றும்,

'சிங்கிள் டீ கிடைக்காமல்
சிரமத்தில் இருந்தோரும் - இவர்
ராயல்டி கிடைத்ததனால்
ராஜாக்கள் ஆனதுண்டு...'

- என்றும் அன்று நான் பாடிய வரிகளைக் கேட்டு திரு. கி. வா. ஜ. 'பலே பலே' என்று சிரக்கம்பம் செய்தார்.

அத்தகு அருமை நண்பர் திரு. திருநாவுக்கரசின் 'வானதி வெளியீ'டாக என் புதுக்கவிதைத் தொகுப்பு, 'பொய்க்கால் குதிரைகள்' என்னும் தலைப்பில் வெளியிடப் பெற்றது. அன்று அமைச்சராக இருந்த என் அருமை நண்பர் திரு. காளிமுத்து அவர்கள்தான் நூலை வெளியிட்டார்.

வெள்ளுடையும், வெள்ளை மனமும் வாய்த்த என் அருமைச் சகோதரர் திரு. ஏ.வி.எம்.சரவணன் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார். என்பால் அன்பு பூண்ட திரு. அவ்வை நடராஜன், திரு. வலம்புரிஜான், திரு. கே. பாலசந்தர், திரு. முக்தா சீனிவாசன், திரு. மு. மேத்தா, திருமதி அரசு மணி மேகலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

(தொடரும்......)



திரைப்பட மற்றும் இசை உலகின் புதிய கின்னஸ் சாதனை இதோ:

அதி கூடுதலான வருடாந்த வருமானம் பெறும் பாடகி: மெடோனா (50 மில்லியன் அமெரிக்க டொலர்கள்)

மக்கள் மிகக் கூடுதலாகத் தகவல் பெற விரும்பும் பாடகி: பிரிட்னி ஸ்பியர்ஸ்.

இணையத் தளத்தில் பெரும்பாலானவர்கள் விரும்பும் நபர்: பிரெட் பிட்.

ஒரு நிமிடத்தில் அதிக வருமானம் ஈட்டியவர்: நிக்கேல் சிட்மன். (3.71 மில்லியன் அமெரிக்க டொலர்கள் - விளம்பரத்திற்காக)

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அதி கூடிய கொடுப்பனவைப் பெறுபவர்: ஒப்ரா வின்பி.


ஹொலிவூட்டில் உள்ள மிக உயர்ந்த நட்சத்திரங்கள்: (6 அடி 4 அங்குலம்)

**ஆண்கள்**
க்ளின்ட் ஈஸ்ட்வுட்
வின்ஸ் வோன்
கிறிஸ்டோபர் லீ.

**பெண்கள் (6 அடி)**
சிகர்னி வீவர்
பிலிஜிட் நீல்சன்
ஜீனா டேவிஸ்




நிக்கல் சிட்மன்



சாதனை!

பிரிட்னி ஸ்பியயேர்ஸ்

## அழகு



**அவுஸ்திரேலிய நாட்டில் சிட்னி நகரில் இந்த வருடம் நடைபெற்றுள்ள அவுஸ்திரேலிய மற்றும் ஆசிய பசுபிக் அழகு ராணிப் போட்டியில் கலந்து கொண்ட ஒரு யுவதி இவர். ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வருகின்ற இப்போட்டி மிகவும் கோலாகலமாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## புரட்சித் தலைவர் 05
## பிடல் காஸ்ட்ரோ




**இதிலிருந்து** கியூபா என்ற வளம் நிறைந்த நாட்டையும், நாட்டு மக்களையும் விடுவிக்க வேண்டும், அமெரிக்காவின் அடிவருடிகளிடமிருந்து கியூபாவைக் காப்பாற்ற வேண்டும் என்றால், அதற்கு அரசியல் ரீதியாக எந்தவொரு நடவடிக்கையும் பயன் தராது. அரசியல் ரீதியாக மாற்றத்தைக் கொண்டுவர விரும்பினால், அதை இரும்புக்கரம் கொண்டு ஆட்சியாளர்கள் அடக்கி விடுவார்கள். இதற்குப் பிடல் தன் ஆதர்ஷ புருஷராக மதிக்கும் ஜோஸ் மாட்டியின் போராட்டப் பாதையும் அவர் சந்தித்த தடைகளும் பெரும் உதாரணமாக பிடலுக்கு முன்னால் இருந்தன. மக்களும் அடிமைகள் போல் வாழ்ந்து கொண்டிருக்கையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதோ, வீடுவீடாகச் சென்று அவர்களுக்கு எடுத்துச் சொல்வதோ உடனடி மாற்றங்களைக் கியூபாவில் நிகழ்த்தும் என்ற நம்பிக்கை பிடலுக்கு இருக்கவில்லை. இதுபற்றி தன் சகாக்களுடன் பிடல் கருத்துக்களைப் பரிமாறினார். அவர்களில் ஒருசிலருக்கு கியூபாவின் விடுதலை அவசியமாகத் தெரிந்த போதிலும், அதற்காகப் போராட்டம் நடத்துவது அல்லது அரசியலில் அதிரடி மாற்றங்களைக் கொண்டுவருவதென்பது நடக்கக்கூடியதுதானா என்ற சந்தேகங்களும் இருந்தது. அதை அவர்களில் சிலர் ஆதாரத்துடன் பிடலுக்கு எடுத்துச் சொல்ல முற்பட்டார்கள்.

சில நண்பர்கள் பிடலின் சிந்தனைகள், நடவடிக்கைகளில் ஏதோ ஒரு புதிய உதயம் கியூபாவில் உதயமாகப் போகிறது என்பதைப் புரிந்து கொண்டவர்களாக பிடலின் யோசனைகளை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டார்கள். அத்தகையவர்களுக்காக பிடல் மணிக்கணக்காக தனது கருத்துக்களையும், கியூபாவின் விடுதலையையும் எடுத்து விளக்கினார். பிடித்த நண்பர்களுக்கு விளக்கமளிக்கவே இத்தனை சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்குமென்றால், சாதாரண பாமர மக்களிடம் எப்படி இவற்றை விளக்கிச் சொல்ல முடியும் என்ற சுயகேள்வி பிடலுக்கு வராமல் இல்லை. எனினும், விசுவாசமுள்ள நண்பர்களிடம் தனது புரட்சிப்பயணம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையில், பிடல் தொடர்ந்து நண்பர்களுக்கும், நண்பர்கள் ஊடாக பிடலின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் புதிய நண்பர்களுக்கும் தனது திட்டங்களை விளக்கினார். ஒன்று பத்தாக, பத்து நூறாகும் என்ற நம்பிக்கை பிடலுக்கு அசைய முடியாதபடி இருந்தது. சுமார் நூறு பேர்வரை பிடலின் விசுவாசமான தோழர்களாகியதில் பிடலின் புரட்சிப் பயணத்திற்கான திட்டங்கள் வலுப்பெற்றன. இந்தப் போக்குச் சிறுகச்சிறுகப் பிடலை தேசியவாதியாகவும், புரட்சிவாதியாகவும் மாற்றியது. பிடலின் புரட்சிப் பயணத்தை விரிவாகப் பார்ப்பதற்கு முன்னரே பிடலின் குழந்தைப் பருவம் தொடர்பாக இன்னும் தகவல்களும் உண்டு. பிடல் காஸ்ட்ரோ என்று அறியப்பட்ட பிடல் அலஜான்ட்ரோ ரஸ், 1926 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். அவர் பிறப்பதற்கு ஒரு வருடம் முன்னதாக 1925 ஆம் ஆண்டு தான் கியூபாவில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. 1926ஆம் ஆண்டில் பிறந்த பிடல் 1952 இல் கியூபாவை விடுவிக்கும் தன் புரட்சியின் முதல்கட்டமாக அப்போதைய கியூபாவின் சர்வாதிகாரி படிஸ்டாவின் ஆட்சிக்கு முடிவுகட்டும் முகமாக 'மயாரி' என்றும் 'ஓரியன்ட்' என்றும் அழைக்கப்படும் மாகாணத்தில் இருந்த 'மோன்கடா' இராணுவ முகாமைத் தாக்கினார். இந்தத் தாக்குதலைப் பிடல் தனது 26 ஆவது வயதில் நடத்தினார். இப்படிப் பிடலின் வாழ்வில் நடந்த பல சம்பவங்களுக்கும், 26ஆம் திகதிக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன.

பிடலுக்கு நான்கு வயது இருக்கும் போது தான் ஓரியன்ட் மாகாணத்தில் குழந்தைகளுக்காக பாடசாலை கட்டப்பட்டது. பிடலின் தந்தை, தனக்குக் கிடைக்காத கல்வி தனது பிள்ளைகளுக்குக் கிடைக்காமல் இருந்துவிடக் கூடாது என்ற ஏக்கத்தை இந்தப் பாடசாலை திறப்பு மாற்றியது. நான்கு வயதான பிடலை அந்தப் பாடசாலையில் சேர்ந்துவிட்டார். பாடசாலையில் பிடல் கல்வி கற்கும் அழகையும், கேட்டதை ஒப்புவிக்கப் பிடல் படும் பாட்டையும் பிடலின் தந்தை மறைந்திருந்து ரசிப்பார். வீட்டில் செல்லப் பிள்ளையாக வளர்ந்த பிடலுக்குப் பள்ளிக்கூடத்தின் சூழல் முழுவதும் வித்தியாசமானதாக இருந்தது. அவரை டீச்சர் நடத்தும் விதம் கட்டளையிடுவது போல் இருந்தது. வெவ்வேறு இடங்களைக் காட்டி "உட்கார்", "நில்", "படி" என்று டீச்சர்மார் கூறும்போது, பிடல் அதனைச் சிறுவயதிலேயே விரும்பவில்லை. அவர்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்படாதவராக முரண்டுபிடித்தார். பிடல் சிறு வயதிலேயே இவ்வாறு பிடிவாதமான பிள்ளையாக இருப்பதால் டீச்சர் கண்டிக்க முற்பட்டு பிடலுக்கு ஒருநாள் அடித்தும் விட்டார். முரட்டு சுபாவம் நிறைந்த பிடல், தனக்கு அடித்த டீச்சரை திட்டிவிட்டுப் பாடசாலையிலிருந்து இடையிலேயே எழுந்து வீட்டுக்குப் புறப்பட்டார். அடிவாங்கிய அவமானமும், கோபமுமாக வந்த பிடல், பாடசாலை வளவில் வெட்டப்பட்டிருந்த குழிக்குள் விழுந்துவிட்டார். அதற்குள் ஆணிகளுடன் கிடந்த பலகையில் முகம் அடிபட்டுப் பிடலின் முகத்திலும், நாக்கிலுமாக ஆணிகள் குத்திக் காயப்படுத்திவிட்டன.

வகுப்பறையில் நடந்த சம்பவங்களே பெரிதாக இருந்த படியால், காயங்களைப் பொருட்படுத்தாமல், வீட்டுக்குச் சென்றார். வீட்டில் அம்மாவிடம் பாடசாலையில் நடந்தவற்றை ஒளிவு மறைவின்றிச் சொன்னார். பிடலின் நேர்மையைக் கண்டு பெருமைப்பட்ட தாய், பிடலைக் கண்டிக்கவில்லை. பாடசாலையில் நடந்தது அவமானம் இல்லை என்பதை விளக்கிக்கூறினார். கூடவே டீச்சரை திட்டியது தவறு என்பதையும் விளக்கினார். பிடல் அதை ஏற்றுக் கொண்டார். கல்வி கற்றுத் தருபவர்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள் என்றும், அவர்களைத் திட்டக்கூடாது. என்றும் தாயார் சொன்னதை முழுமையாக நம்பியதோடு ஏற்றுக்கொள்ளவும் செய்தார். அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும், டீச்சரைத் திட்டியதற்காகத் தான் நாக்கில் ஆணி குத்தியது என்று பிடல் சொல்லிச் சிரிப்பார்.

வருடங்கள் சில உருண்டோடி பிடலுக்கு அப்போது பதினைந்து வயதிருக்கும். பிடலும் சகோதரியும் பாடசாலைக்குப் போகும் பொன்னான காலம் அது. பிடலைப் போலப் பணம் படைத்தவர்களின் பிள்ளைகள் நல்ல ஆடைகள் உடுத்திப் பாடசாலைக்கு வருவார்கள். பிடலுக்குத் தன் வசதி வாய்ப்பு ஏன் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது. இதற்குக் காரணம், பிடலுடன் படித்த ஏழை மாணவர்கள். சில சமயங்களில் மேல்ச் சட்டைகூட இல்லாமல் பாடசாலைக்கு வந்தார்கள். சிலர் காலில் செருப்புக்கூட இல்லாமல்



வந்தார்கள். அவர்களை வேறொரு கிரக மனிதர்களைப் போல் பணக்காரப் பிள்ளைகள் பார்ப்பதைப் பிடல் வெறுத்தார். அந்த ஏழை மாணவர்களைத் தீண்டத்தகாதவர்களைப் போல் நடத்துவதும், தள்ளி வைப்பதுமாக மாணவர்களுக்குள்ளேயே இரண்டு விதமான அணுகுமுறை நிலவியது.

(அசத்தல் தொடரும்)

**தருவது : எம். கேஷிகன்.**



# அடிமை விலங்கொடிக்கும் புதிய மலையகம்

**மலையகத்** தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து 15 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரையிலும் தீர்க்கமான முடிவுகளோ, நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளோ வழங்கப்படாது இழுபறி நிலையிலேயே காணப்படுகிறது. கடந்த காலங்களைப் போலல்லாது இம்முறை கட்சிகள், தொழிற்சங்கங்களின் பசப்பு வார்த்தைகளுக்கு இடங்கொடுக்காததுடன் அவர்களுக்கூடாக எந்தவொரு தீர்வையும் எதிர்பாராது மக்கள் தமது கோரிக்கைகளுடன் வீதியில் இறங்கி சளைக்காது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

கடந்த காலங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து மக்களைத் திரட்டி தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும், பின்னர் தொழிலாளர்கள் கேட்ட சம்பளத்தை விடவும் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க கம்பெனிகளுடன் கைகுலுக்கி, விருந்துபசாரம் செய்துவிட்டு மக்களிடம் போராட்டத்தை கைவிடுமாறு கோருவதும், சகஜமான விடயமாகவிருந்தது. அத்தகைய போராட்டங்கள் தமது அரசியல் ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்துவதற்காக மக்களின் பெயரால் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டு பின்னர் அவர்களாலேயே முடிவுக்கு கொண்டுவரப்படுவது குறிப்பிடத்தக்கது. அநேகமான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தமக்கு வருமானம், அரசியல் பிரசாரம் என்பன தேவைப்படும் காலக்கட்டத்திலும் கம்பெனிகள் தம்மைக் கண்டுகொள்ளாத சூழ்நிலையிலும் தொழிலாளர்களை வைத்து ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தையோ, ஆர்ப்பாட்டப் பேரணியையோ நடத்த வேண்டிய தேவை தொழிற்சங்கங்களுக்கு அவசியமானது என்ற சூழ்நிலை தொடர்ச்சியாகக் காணப்பட்டு வந்தது. இவ்வாறான செயற்பாடுகளை தோட்டத் தொழிலாளர்கள் காலம் காலமாக பொறுமையோடும் ஒரு விதக் குருட்டு நம்பிக்கையிலும் தமக்காக இத்தொழிற்சங்கங்களும், கட்சிப் பிரதிநிதிகளும் ஏதாவது செய்து தருவார்கள் என்று காத்திருந்தனர். இப்படி இருக்கும் காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பு, பண வீக்கம் போன்ற காரணங்களால் வாழ்க்கைச் செலவினம் வெகுவாக அதிகரித்தது. இத் தாக்கமானது 135 ரூபாவை அடிப்படைச் சம்பளமாகப் பெற்று வந்த மலையக மக்களை வெகுவாகப் பாதித்தது. இதனைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம், இவ்வருடம் ஜூன் 30ஆம் திகதியுடன் காலாவதியானதுடன் மீண்டும் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை துளிர்க்க ஆரம்பித்தது. தற்போது நாட்டில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினத்தை



அடிப்படையாகக் கொண்டு தமக்கு சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாடு தொழிலாளர்கள் மத்தியில் புதிய உத்வேகத்துடன் பிரகாசிக்கத் தொடங்கியது.

இது இப்படியிருக்க, வழமையான பாணியில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சம்பள உயர்வை அடிப்படையாக வைத்துப் பிரசாரப் போராட்டத்தை முன்னெடுக்கத் தலைப்பட்டன. இதன் முதற் கட்டமாக இ.தொ.கா. தலைமையில் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 300ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று கோரி, மெதுவாகப் பணி செய்யும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நான்கு நாள் போராட்டத்தைத் தொடர்ந்து முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்தன. அதனைத் தொடர்ந்து கம்பனிகள், அதிகப்படியாக 250 ரூபா வழங்க முடியும் என்று இ.தொ.கா.விடம் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தன. இதனால் போராட்டத்தை முன்னெடுத்த இ.தொ.கா., தாம் கம்பெனிகளுடன் பேசி, மேலதிக சம்பளத்தைப் பெற்றுத் தருவதாகவும், தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுமாறும், கேட்டுக்கொண்டது. காலங்காலமாக இவ்வாறு போராட்டத்தை முன்னெடுப்பதும், பின்னர் தொழிற்சங்கங்கள் வழங்கும் வாக்குறுதிகளால் தாம் ஏமாற்றப்படுவதுமாக ஆதங்கப்பட்ட தொழிலாளர்களின் பொறுமை, பெரும் எழுச்சிமிக்க போராட்டமாக வெடித்தது. கடந்த காலங்களைப் போன்று, தாம் ஏமாற்றப்படக் கூடாது என்பதுடன், தமது போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே நோக்கோடு கட்சி, தொழிற்சங்க பேதமின்றி ஒரே குடையின் கீழ் அணிதிரண்டு தாம் அனைவரும் 'தமக்காக தாமே போராடும் தோட்டத் தொழிலாளர்கள்' என்ற வரையறைக்குள் ஒன்று திரண்டதுடன், தொழிற்சங்கங்களின் எத்தகைய சமாதானத்திற்கும் இடமளிக்காது தாம் கேட்ட சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்று போராடி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக கறுப்புப்பட்டி போராட்டம், கொடும்பாவி எரிப்பு, சத்தியாக்கிரகப் போராட்டம் என தொழிலாளர்கள் சார்பான போராட்டம் தீவிரமானது. இவ்வளவு நடந்தும் முதலாளிமார் சம்மேளனமும், கம்பனிகளும் தமக்கு எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என்று கணக்கறிக்கை விட்டனவே தவிர, தொழிலாளர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையில் செயற்படவில்லை. நம் நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக, ஜீவநாடியாக விளங்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பில் லாபம் ஈட்டும் கம்பனிகளும், தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் சுகபோகம் அனுபவிக்கும் தொழிற்சங்கங்களும் அம் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கான போராட்டத்தை உதாசீனப்படுத்துவதை எந்தவொரு மனிதநேயவாதியாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தொழிலாளர்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்க, மறுபக்கத்திலே குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்ற சில நடவடிக்கைகள் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகின்றன. குறிப்பாக கம்பனிகள், முதலாளிமார் சம்மேளனம் என்பவற்றிடம் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு மக்களின் போராட்டத்தை திசைதிருப்பிவிடும் முயற்சியிலும், போராட்டத்தை கைவிட்டு வேலைக்குச் செல்லுமாறும், தாம் குறிப்பிட்ட சம்பளத்தை கம்பனிகளுடன் பேசி பின்னர் பெற்றுத் தருவதாகவும் தொழிலாளர்களிடம் கோரப்பட்டுள்ளது. குறிப்பாக காலங்காலமாக தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுக்கும்போது கம்பனிகள், தொழிற்சங்கங்களை கைக்குள் போட்டுக்கொண்டு தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் உத்தி இம்முறை பலிக்காமல் போய் விட்டது. அதைவிட இனி எம்மை எந்த அரசியல் கட்சிகளோ, தொழிற்சங்கங்களோ ஏமாற்ற முடியாது, நாம் விழித்துவிட்டோம் எனும் செய்தியை இப்போராட்டத்தினூடாக மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் உணர்த்தியுள்ளனர்.

மேலும் தோட்டத் தொழிலாளர்களின் இந்த நியாயமான போராட்டத்திற்கு அனைத்து கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தமக்குள் முரண்பட்டுக் கொள்ளாமலும், அரசியல் லாபமோ, பொருளாதார லாபமோ தேட முற்படாமலும் செயற்பட முன்வரவேண்டும். தொழிலாளர்களின் இப்போராட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும், கட்சிகளும் ஒருவரோடு ஒருவர் தோளோடு தோள் நின்று மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். அதைவிடுத்து உன்னால் முடியாவிட்டால் தோல்வியை ஒப்புக்கொள், நான் செய்து காட்டுகிறேன் என்று மார்தட்டிக் கொள்வதாலோ, அல்லது கூட்டம் சேர்த்து வீரவசனம் பேசுவதாலோ மக்களை ஏமாற்ற முடியாது என்பதுடன் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முடியாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்க்கைப் போராட்டத்திற்கு முகம் கொடுப்பதற்காக கம்பனி நிருவாகங்களிடம் "பிச்சை கேட்டுக்

**- எஸ். வர்மன் -**

கையேந்தி நிற்கவில்லை". அவர்கள் தமது உழைப்பிற்கான நியாயமான சம்பள உயர்வையே கோரி நிற்கிறார்கள் என்பதை கம்பனிகளும், முதலாளிமார் சம்மேளனமும் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போராட்டம் இழுபறி நிலையில் ஜனாதிபதி மட்டத்திற்குச் சென்ற போதிலும், இதுவரை இழுபறி நிலையே தொடர்கிறது என்பதுடன் குறிப்பிட்ட திகதியில் மக்கள் சம்பளப் பணத்தையும் பெற முடியாது அரைவயிறு, கால்வயிறுடன் தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். மலரப்போகும் புத்தாண்டிற்கு முன் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண



முன்வர வேண்டும். மேலும் இவ்விடயத்தில் அரசாங்கமும் தீவிர கவனமெடுத்து மலையக மக்களின் பிரச்சினைக்குச் சாதகமான தீர்வொன்றை வழங்கவேண்டுமென நாமும் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம். ●

---




**அச்சமயம்** பலத்த அதிர்வுடன் அனைத்து குண்டுகளும் ஒன்றன் பின் ஒன்றாக வெடிக்கத் தொடங்கின. கலவர மிகுதியால் அமெரிக்க இராணுவத்தினர் எங்கு ஓடுவது என்று தெரியாமல் அலைந்தனர். ஆனாலும் அவர்கள் சுதாகரிக்கும் முன் குண்டுகள் வெடித்ததால் ஒன்றும் செய்ய முடியாமல் அனைவரும் மாண்டனர். அவர்களின் வீழ்ச்சியினை உறுதிப்படுத்திக் கொண்ட வியட்கொங் இராணுவத்தினர், வெளியில் வந்து மீதமிருந்த அனைவரையும் போட்டுத் தள்ளிவிட்டு அவர்களின் ஆயுத தளபாடங்களையும், இராணுவத் தொலைபேசிகளையும் உணவுப் பொருட்களையும் தங்கள் பக்கம் திருப்பிக் கொண்டு சென்றனர். இக் குண்டு வெடிப்பில் வியட்கொங் இராணுவத்தினர், இராணுவ வாகனங்களைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாகனங்கள் மிகவும் பயனுள்ளதாகவே இவர்களுக்கு அமைந்தன. தாங்கள் அமைத்து வைத்திருந்த பாதையினூடாக சேதமடையாமல் இந்த வாகனங்களைக் கொண்டு சென்றார்கள் தங்கள் படை முகாம்களுக்கு. தாங்கள் வந்த வழியை யாரும் கண்டுகொள்ளாமல் இருக்க வாகன டயர் அடையாளங்களை அழித்துக் கொண்டு சென்றார்கள். அதனால் யாரும் பின்தொடர்ந்து வர நிகழ்தகவு இல்லாமலிருந்தது. கொண்டு சென்ற பொருட்களுடன் மிகவும் மகிழ்ச்சியில் இருந்தார்கள் வியட்கொங் இராணுவத்தினர். தங்கள் முயற்சிகள் பலித்து விட்டதை எண்ணி மிகவும் சந்தோஷத்துடன் இருந்தார்கள். அத்துடன் ஒன்பதாவது மின்ட்வே பாதை முற்றாகச் சேதமடைந்தது. எந்த வாகனமும் சென்று வர முடியாத நிலையில் இருந்தது. காலத்தை தாழ்த்தாமல் அடுத்த நடவடிக்கையை நள்ளிரவே தொடங்குமாறு வியட்கொங் இராணுவத்தினருக்கு வலுவாக கட்டளையிட்டார் தளபதி.

தலைமையகத்தில் ரிக் மிகவும் கலவரமடைந்து காணப்பட்டார். சென்ற வாகனங்களுக்கு என்ன நடந்தது என்று அறியாமல் இருந்தார். ஆனால் குண்டு வெடிப்பு நடந்தது என்பதையும் அறிந்திருந்தார். விமானப் படையினரை ஏவிவிட்டு ஆகாயமார்க்கமாக பார்க்குமாறு கட்டளையிட்டார்.ஆகாய மார்க்கமாக வந்த விமானப் படையினர் எந்த தடயத்தையும் காணவில்லை. ஆயினும் குண்டு வெடிப்பு நடந்திருக்கிறது என்பதை மேல் இருந்து பார்க்கும் போது மிகவும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது என்ற தகவலை விமானப்படையினர் தங்கள் தலைமையகத்திற்கு அனுப்பியிருந்தார்கள்.

அடுத்து எப்படியும் தங்கள் முகாம்களைத் தாக்குவார்கள் என்று எண்ணிய ரிக் உடனடியாக இராணுவத் தொலைபேசி மூலம் தங்கள் நிலைகளை பலப்படுத்துமாறு கட்டளையிட்டார். ஆனால் இதற்கிடையில் வியட்கொங் இராணுவத்தினரின் எறிகணைகள் வெடிக்கத் தொடங்கின. தாக்குதல் எங்கிருந்து தொடுக்கப்படுகிறது என்பதை அறியமுடியாமல் இருந்தது. பல முக்கிய பகுதிகளுக்குள் எல்லாம் எறிகணைகள் விழுந்தன.

இதனால் நிலைகுலைந்து சென்ற அமெரிக்கத் தரப்புப் படையினர் தங்கள் மேலதிகாரிகளின் கட்டளைக்காகக் காத்திருந்தார்கள். மேலதிகாரிகளும் எத்திசையில் தாக்குதலைத் தொடர வேண்டும் என்று கட்டளையிட தெரியாமல் முழித்தனர். எறிகணைத் தாக்குதலைத் தொடர்ந்து வியட்கொங் இராணுவத் தாங்கிகள் அவ்விடத்தை அடைந்தன. தங்கள் முகாமிற்கு பின்பக்கத்திலிருந்துதான் தாக்குதல் தொடர்கிறது என்பதை அறிந்த மேலதிகாரிகள் தாக்குதலை தொடருமாறு கட்டளையிட்டார்கள். ஆயினும் அதற்கிடையில் இராணுவத் தாங்கிகள் தங்கள் வேலையை காட்டத் தொடங்கி விட்டன. டாங்கிகள் மூலம் தாக்கினால் எந்த வகையில் தாக்குதல் இருக்கும் என்பதை அறிந்த வீரர்கள் எதிர்த் தாக்குதலை நடத்த முடியாமல் பின்வாங்கினர். பின் வாங்கி எங்கு ஓடுவது என்று தெரியாமல் அவ்விடத்திலேயே நின்றனர். சிலர் வியட் கொங் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர்.


அவர்களின் முடிவு வியட்கொங் இராணுவத் தினருக்கு கவலையை ஏற்படுத் தினாலும் புதிய ஆயுதங் களுடன், புதிய உத்வேகத்துடன் தாக்குதல் நடத்துவதே மேலோங்கி இருந்தது.

அமெரிக்கத் தரப்பு பின் வாங்குவதை உணர்ந்து கொண்ட வியட் கொங் இராணுவத் தளபதி, தங்கள் படையினரை உட்சென்று தாக்குதலைத் தொடருமாறு கட்டளையிட்டார். படையினரும் தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடங்களில் தாக்குதல்களைத் தொடங்கினார்கள். அவர்களின் தாக்குதல் வெற்றியளித்துச் சென்றதை அவர்கள் தங்கள் கண்முன் கண்டார்கள். அவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு வியட்கொங் இராணுவத் தளபதி வெகுவாக மகிழ்ச்சியடைந்தார். கிட்டத்தட்ட 2500 அமெரிக்கப் படைவீரர்களை கொன்று குவித்தனர் வியட்கொங் இராணுவத்தினர். அதில் கிட்டத்தட்ட 100க்கு மேற்பட்டவர்கள் சரண் அடைந்தனர். அவர்களை உடனடியாக சிறையில் அடைக்காமல் அவர்களையும் போர் முனையில் வைத்திருந்தார்கள் வியட்கொங் இராணுவத்தினர்.

மிக விரையிலேயே தாங்கள் வந்த வேலை முடிந்துவிட்டதை உணர்ந்து கொண்ட வியட்கொங் இராணுவத்



தளபதி அமெரிக்க இராணுவத்தினரின் முகாமை தங்கள் முகாமாக்கிக் கொண்டார்கள். ஆனாலும் தங்களுக்கு இம் முகாமில் பாதுகாப்பு இல்லை என்பதைத் தெரிந்து கொண்டார்கள். காரணம் விமானம் மூலம் தாக்குதலைத் தொடர்ந்தால் மிக இலகுவாக தாங்கள் இலக்காகி விடுவோம் என்பது அனைவரும் அறிந்திருந்த விடயம். ஆனாலும் தங்களுக்குப் பாதுகாப்புக் கேடயங்களாக சரணடைந்த அனைத்து அமெரிக்க வீரர்களையும் வைத்திருக்கும்படி வியட்கொங் இராணுவத்தினருக்கு தளபதி கட்டளையிட்டார். அவரின் வித்தியாசமான சிந்தனையை கண்டு அனைத்து இராணுவ வீரர்களும் வியந்தனர். உண்மையில் இராணுவ தந்திரம் நிறைந்த அவர் விடுதலைப் போராட்டத்திற்கு மிகவும் முக்கியமானவர் என்பதை அனைத்து இராணுவச் சிப்பாய்களும் ஏற்றுக்கொண்டார்கள். அது மட்டுமல்ல, ஊர் மக்களும் கூட, தங்கள் தலைவனுக்காக எதையும் செய்யக் கூடிய நிலையில் இருந்தார்கள். (தொடரும்)





## ஆத்திசூடி

### நேர்பட ஒழுகு

நீ வாழ்க்கையில் எத்தகைய இன்னல்கள் வந்தாலும்
நேர்மையைக் கைவிடாது நீதிநெறி பின்பற்றி வாழப் பழகு.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

பேணி வைய மெல்லாம் - நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணு மைந்த ரெல்லாம் - கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ?

- சுப்பிரமணிய பாரதியார்

## அதே ஓவியம்!



**முன்னொரு** காலத்தில் மிதிலா நாட்டு அரசனின் அவைக்கு ஓவியன் ஒருவன் வந்தான்.

அரசே! நான் ஓர் ஓவியன். வாமன நாட்டிலிருந்து வருகிறேன். என்னைப் போல் அழகாக ஓவியம் வரைபவன் யாரும் இந்த உலகத்திலேயே இல்லை என்பது என் கருத்து! என் திறமைய்யக் காட்டவே இங்கு வந்துள்ளேன் என்று தன்னைப் பற்றி பெருமையாகச் சொன்னான்.

நல்லது ஓவியரே! நீர் எங்கள் நாட்டிற்கு வந்தது குறித்து மகிழ்ச்சி. உமக்கு என்ன வேண்டும்? என்றான் அரசன்.

அதற்கு அந்த ஓவியன், அரசே! இந்த நாட்டு ஓவியர்களோடு நான் போட்டியிட ஏற்பாடு செய்யுங்கள். நான் வெற்றிபெற்றால் இந்நாட்டில் ஓவியம் வரைபவர் யாராக இருந்தாலும் எனக்குக் கப்பம் கட்ட வேண்டும். மாறாக நான் தோற்றுவிட்டால் இனி யாருடனும் ஓவியப் போட்டிக்குச் செல்ல மாட்டேன் என்றான்.

அப்பொழுது அவையில் இருந்த ஓவியன் ஒருவன் எழுந்து, அரசே! நான் இந்த ஓவியனுடன் போட்டியிடுகிறேன். எங்கள் இருவருக்கும் ஒரே அறையை ஒதுக்குங்கள். ஒரு பக்கச் சுவரில் அவர் தன் திறமையைக் காட்டட்டும். அவர் ஓவியத்தை நான் பார்க்காமலேயே அவர் என்ன வரைந்திருக்கின்றாரோ அதையே எதிர்ப்பக்கச் சுவரில் வரைந்து காட்டுகிறேன் என்றான்.

அரசே, நான் இதற்கு ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால் இது இவரால் மட்டுமல்ல; யாராலுமே முடியாத ஒன்று. ஒருவர் வரைகின்ற ஓவியத்தை இன்னொருவர் பார்க்காத வண்ணம் இடையில் திரையிட்டு வையுங்கள். பதினைந்து நாட்களுக்குள் இருவரும் வேலையை முடிக்க வேண்டும். என் ஓவியத்தைப் போலவே அவர் ஓவியம் இருக்குமானால் என் தோல்வியை

### பாப்பா முரசு சிறுகதை

ஒப்புக் கொள்கிறேன். அதன் பின்னர் யாருடனும் ஓவியப் போட்டிக்குச் செல்லமாட்டேன் என்றான்.

இதைக் கேட்டு எல்லோரும் திகைத்தனர். பிறகு அரசன் இருவருக்கும் ஒரே அறையை ஒதுக்கினான். இருவரும் தங்கள் வேலையைத் தொடங்கினர். இடையில் திரை இருந்ததால் ஒருவர் செய்வது இன்னொருவருக்குத் தெரியவில்லை.

பதினைந்து நாட்கள் சென்றன. அரசனும், அமைச்சர்களும் இருவர் ஓவியத்தையும் பார்ப்பதற்காக வந்தனர். முதலில் வாமன நாட்டு ஓவியன், தான் வரைந்த ஓவியத்தைக் காட்டினான். சிவபெருமானின் ஓவியத்தை அழகாக வரைந்திருந்தான்.

என்ன அற்புதமான ஓவியம்! என்று வியந்து நின்றனர் அனைவரும்.

இதே ஓவியத்தை அதே அழகுடன் நம் நாட்டு ஓவியனால் வரைந்திருக்க முடியாது. எப்படியும் தோல்வியைத் தழுவி நம் நாட்டிற்கு அவமானத்தைத்தான் தரப்போகிறான் என்று நினைத்தான் அரசன்.

அரசே! திரையை விலக்கிவிட்டு என் ஓவியத்தையும் பாருங்கள். இரண்டுக்கும் ஏதேனும் மாற்றம் இருக்கின்றதா என்று கண்டு பிடியுங்கள் என்றான் அந்த ஓவியன். அவன் ஓவியத்தைப் பார்த்து வாமன நாட்டு ஓவியன் உட்பட எல்லோரும் வியந்து நின்றனர். இந்தச் சுவரிலும் அதே காட்சி வரையப்பட்டிருந்தது. இரண்டு ஓவியமும் சிறு மாற்றம் கூட இல்லாமல் ஒன்று போலவே இருந்தன. இதைக் கண்ட வாமனநாட்டு ஓவியன் தலை கவிழ்ந்தான். அரசே! நான் தோற்றுவிட்டேன். என் தற்பெருமை இன்றோடு அழிந்துவிட்டது. நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

தன் நாட்டின் பெருமையைக் காத்த ஓவியனை அரசன் கட்டித் தழுவிக்கொண் டான்.

அந்த ஓவியத்தைப் பார்க்காமலேயே உன்னால் எப்படி அதே போன்ற ஓவியத்தை வரைய முடிந்தது என்று கேட்டான் அரசன்.


அரசே! அந்த ஓவியனோடு என்னால் போட்டியிட முடியுமா? நம் நாட்டுப் பெருமையைக் காப்பதற்காக ஒரு சூழ்ச்சி செய்தேன்! என்றான் ஓவியன்.

என்ன சூழ்ச்சி என்று கேட்டான் அரசன்.

இந்தச் சுவரில் நான் ஓவியம் ஏதும் வரையவில்லை. பளிங்குக் கற்களைப் பதித்துப் பதினைந்து நாட்களாக மெருகேற்றிக் கொண்டிருந்தேன். திரை விலகியதும் எதிர்ச்சுவரில் இருந்த ஓவியத்தின் உருவம் இதில் தெரிந்தது. உண்மை அறியாமல் அந்த ஓவியனும் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு சென்றுவிட்டான். என் சூழ்ச்சியே வெற்றி பெற்றது என்றான் ஓவியன். மகிழ்ந்த அரசன் அவனுக்குப் பல பரிசுகளைத் தந்து சிறப்பித்தான்.

## யானை

யானை வயிறு யானை
பார்த்திடுதே வானை
ஓங்கிப் பிளிறும் சத்தம்
உனது காதை எட்டும்
தூண்கள் போல கால்கள்
துடிப்பாய் இரண்டு கண்கள்
இறக்கை போல காது
இயல்பாய் ரொம்ப சாது
துணைக் கூட யானை
தும்பிக் கையால் உடைக்கும்
நம்பிக்கைதான் வேண்டும்
நாமும் செய்து காட்ட!



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.12.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 674**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 672

**பரிசுக்குரியவர்:**
சாஜிதா நஸார், தரம் 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி. ஏ.ஜே. பாத்திமா பஸ்னா 61/1A/ 1. மகாபுத்கமுவ. கொடிகாவத்த. | கமிலஸ் கிருத்திகன், இல. 9, அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. |
| ரவீந்திரன் ஜினுஷன், ஆண்டியார் வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை. மட்டக்களப்பு. | ஜெ. மயூரன், 24/11 A.R.H. குணவர்த்தன மாவத்த. பதுளை. |
| ஐ. முஹம்மட் இல்ஹாம், தரம் 8A, மட்/ அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர். | ம. ஜனார்த்தன், இல 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. |
| க.ஹரிணி, 19, பன்சல வீதி, இராகலை, ஆள்கரனோயா. | கா. பிரசாந்தி, தரம் 6, 89, பாபாபதி இல்லம். ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| M.T.M. மகாரிம், தரம் 4G , பிஸ்கால் வீதி. அக்கரைப்பற்று. | M.பஸ்னா, தரம் 7A. அகதிமுகாம், நாச்சியா தீவு. அனுராதபுரம். |

## அதிசய உலகம்

### குப்பை

ஒரு மனிதன் தன் சக்தியில் மூன்றில் ஒரு பங்கை வீட்டில் செலவிடுகிறான். ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் சராசரியாக 1 கிலோ குப்பையைக் கொட்டுகிறான். உலகில் ஒவ்வொரு ஆண்டும் 6 ஆயிரம் கோடி கிலோ குப்பை கடலில் கொட்டப்படுகிறது. வீட்டுக் குப்பைகளில் 84 சதவீதம் மறு சுழற்சி முறையில் பயன்படுத்தப்படுகிறது.

### தண்ணீர் உபயோகம்

உலக அளவில் தண்ணீரை மக்கள் அன்றாட உபயோகத்திற்கு எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி ஒரு கணக்கெடுக்கப்பட்டது. அதன்படி கழிவறைக்கு 15 லிட்டரும், குளிப்பதற்கு 90 லிட்டரும், துவைப்பது அல்லது வாஷிங் மெஷினுக்கு முதல் 100 லிட்டரும், சமையல் பாத்திரங்கள் கழுவுவதற்கு 60 லிட்டரும் மக்கள் பயன்படுத்துகிறார்கள். பாத் டப்பில் குளிப்பவர்கள் 100 லிட்டர் தண்ணீரை உபயோகிக்கிறார்கள்.

### அலுமினியம்

ஒவ்வொரு ஆண்டும் 500 கோடி அலுமினியக் கேன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் 70 சதவீதம் குளிர்பானங்களை அடைப்பதற்குப் பயன்படுகிறது. மீதமுள்ள 30 சதவீதம் உணவுப் பொருட்களை அடைக்க உபயோகிக்கப்படுகிறது.

## சில விடுகதைகள்

1. தண்ணீரில் மூழ்கினாலும் மூச்சுத்திணறாதவன் தரைக்கு வந்தாலோ மூச்சே இல்லை அவன் யார்?
2. இரைக்கு முகம் காட்டுவான் எதிரிக்கு முள் காட்டுவான் அவன் யார்?
3. கொதிக்கும் எண்ணெயில் கொண்டாட்டம் போட்டு குண்டாவான் அவன் யார்?
4. உள்ளூரில் அடிபட்டவன் வெளியூரில் சேதி சொல்லுவான் அவன் யார்?
5. விடிவிடிய தூங்காமல் ஓலமிட்டு அலைந்து திரிவான் அவன் யார்?
6. சின்னப்பையனுக்குச் சிவப்புத் தொப்பி. தொப்பி உரசினால் பற்றிக் கொள்ளும் அவன் யார்?
7. காய்த்துத் தொங்குவது கைப்பிரம்பு அடிக்க அல்ல! குழம்பில் ருசிக்க! அவன் யார்?
8. தண்ணீர் இணைத்ததை வெந்நீர் பிரித்தது அவன் யார்?
9. காதுக்குள் பாடுபவன் கடித்து வைத்தால் பெரும்பாடு அவன் யார்?
10. கறுப்பன் வெள்ளையானான் கவலை எட்டிப் பார்க்குது அவன் யார்?

**விடைகள்**

1. மீன்
2. முள்ளெலி
3. அப்பளம்
4. தபால்
5. கடல் அலை
6. தீக்குச்சி
7. முருங்கைக்காய்
8. அவித்த முட்டை
9. கொசு
10. நரைமுடி




# இராட்சத முயல்!

உலகில் இராட்சத முயல் இனத்தை 'பிளெமிஷ் இராட்சத முயல்' என்று அழைக்கிறார்கள். இது 7.58 கிலோவரை எடை கொண்டது. அதாவது 16 இறாத்தல் 8 அவுன்ஸிலிருந்து 17 இறாத்தல் 10 அவுன்ஸ் வரை நிறை கொண்டது. இது கால்களை அகட்டி வைத்தால், 36 அங்குல இடைவெளி இருக்கும். ஆனால் 24 இறாத்தல் எடையுள்ள முயல்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் எடைகளை வைத்து, உலக சாதனைகள் மதிப்பிடப்படுவதில்லை. காரணம், வலுக்கட்டாயமாக உணவூட்டி எடை கூட்டப்படலாம் என்பதே அது.



# சூரியக்கரடி!

உலகிலேயே மிகச் சிறிய கரடி இனம் தெற்காசியாவின் உலர்வலயப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றை 'மலேசிய சூரியக் கரடி' என்று அழைக்கிறார்கள். இவற்றின் மார்புப் பகுதியில் தங்க நிறப்பிறை வடிவம் காணப்படுகின்றது. வழமையாகக் கரடிகள் கறுப்பு நிறமானவை. இந்தச் சூரியக் கரடிகள் 1.4 மீற்றர் அல்லது அல்லது 4 அடி 6 அங்குலம் நீளமானவை. தோள்பட்டையின் உயரம் 72 சென்ரி மீற்றர் அல்லது 28 அங்குலம்.




# இரத்த தாகம்!




கலபாகோஸ் தீவுகளிலுள்ள ஆல்ப் தீவில் இரத்த வெறி கொண்ட பறவைகள் காணப்படுகின்றன. கூரிய அலகு கொண்ட இச்சிறு பறவைகளை 'இரத்தப் பிசாசுக் குருவி' என்றும் அழைக்கிறார்கள். வழமையாக விதைகளை உண்ணும் இப் பறவைகள், பூபிஸ் என்று அழைக்கப்படும் கடல் பறவைகளைக் கொத்தி இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன.

# எதிர்த் தாக்குதல்!

மனிதர்களின் வயிற்றுப் பகுதியில் எகிறிப் பாய்ந்து தாக்கிக் கிழிக்கக் கூடிய பயங்கரப் பறவை அவுஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்திலும், நியூகினியாவிலும் வாழ்கின்றன. கஸோவரி என்று அழைக்கப்படும் இப்பறவை, ஆறரை அடி உயரம் வரை வளரக்கூடியது. இவற்றின் கால்களில் மூன்று விரல்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஐந்து அங்குல நீளமான கூரிய நகங்கள் இதற்குண்டு. தனக்கு ஆபத்து ஏற்படும்போது மிகப் பயங்கரமாகத் தாக்கக் கூடியதாம்.



# ஜெலி மீன்!



'ஜெலி பிஷ்' என்று அழைக்கப்படும் ஜெலி மீன்களில் பலவகைகள் இருக்கின்றன. பெரும்பாலான ஜெலி மீன்களின் உடல் பருமன் அதாவது அதன் வட்ட வடிவத் தோற்றம் 2 சென்ரி மீற்றர்களில் இருந்து 40 சென்ரி மீற்றர்கள் (0.8 இலிருந்து 15.8 வரையிலான அங்குலம்)சுற்றுவட்டம் உடையது. 1870 ஆம் ஆண்டு அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் வளைகுடாவில் கரையொதிங்கிய ஆர்ட்டிக் இராட்சத ஜெலி மீனின் உடல் சுற்றுவட்டம் 2.28 மீற்றர்கள் அதாவது 7 அடி 6 அங்குலம். அதன் கூந்தல் வடிவ உணர் கொம்புகள் மட்டும் 120 அடிகள் நீளமானவை.



சரத்குமார் - அன்ரே
பச்சைக்கிளி முத்துச்சரம்

# கோடம்பாக்கத்துக்கு குட்பை நயன்தாரா முடிவு

கோடம்பாக்கத்துக்கு தற்காலிகமாக குட்பை சொல்லிருக்கிறார் நயன்தாரா. பரபரப்பாக பேசப்படும் இந்தச் செய்தி எவ்வளவு தூரம் உண்மை? நிலைவரம் அறிய நாலு பேரைச் சந்தித்தோம்.


சிம்புவுடன் உறவு முறிந்த பிறகு, கோடம்பாக்கம் நயன்தாராவுக்கு கசந்து விட்டது உண்மை என்கிறார்கள் அவரை நன்கு அறிந்தவர்கள். பிரச்சினையின் சூடு தணியும் முன் இங்கு ஏதேனும் படத்தில் நடித்தால் நிருபர்கள் கேள்வி கேட்டே ஆளை கீழ்ப்பாக்கம் ஆக்கி விடுவார்கள். அதனால் ஹைதராபாத்திலே சிறிது நாள் தங்கியிருக்க முடிவு செய்துள்ளார்.

தவிர, தெலுங்கில் நயன்தாராவுக்கு வாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளது விட்டமின் 'ப' வும் அங்கு அதிகம். தமிழில் சேர்ந்து நடிக்கலாம் என்று நயன் 'டிக்' செய்து வைத்திருக்கும் யாரும் ப்ரீயாக இல்லை. விஜய் 'அழகிய தமிழ் மகனில்' ஸ்ரேயாவை ஜோடியாக்கி விட்டார். அஜித் 'கிரீடத்தில்' த்ரிஷாவை ஜோடியாக்கியிருக்கிறார். விக்ரம் அடுத்து எப்போது படம் பண்ணுவார் என்று தெரியவில்லை. வாரணம் ஆயிரம் முடித்து சூர்யா வெளிவர மூன்று நான்கு மாதங்கள் ஆகும். மீதம் இருப்பவர் மாதவன். அவர் நடிக்கும் படங்களிலிருந்தும் அழைப்பு வருவதாகத் தெரியவில்லை.

இதனால் சிறிது நாளுக்குத் தெலுங்கு தேசமே பெட்டர் என அங்கேயே முடங்கிவிட்டார். நயன்தாராவை கொஞ்சம் மொபைலில் தொடர்பு கொள்ளலாம் என்றால் அது அவுட் ஆ.்ப் ரேஞ்ச்.

அவர் மேனேஜரைத் தொடர்பு கொண்டோம். மேடம் ரொம்ப பிஸி. மூணு மாசத்துக்கு தமிழ்நாடு பக்கமே வரமாட்டார்.

ஆக, நயன்தாரா எபிசோட் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.




வடிவேல் - ஷீலா - பிரசன்னா
சீனா தானா 007

# ஹரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் 'வேல்'


கோவில், அருள், சாமி என ஆன்மீக டைட்டில்களில் வாழ்ந்து வந்த ஹரி, ஆறு படத்துக்குப் பிறகு நிஜ ஆறான தாமிரபரணியை இயக்கி வருகிறார். விஷால் ரோ. முதுகுப்புறம் மறைத்த வீச்சருவாளுடன் விஷாலை பார்க்கையில் தாமிரபரணி மற்றொரு சாமியோ என நினைக்கத் தோன்றுகிறது.

குறிப்பிட்ட வேடங்களில் மட்டும் நடித்து வந்த சூர்யாவுக்கு வேறொரு நிறத்தை கொடுத்தவர் ஹரி. இவரது ஆறு, சூர்யா என்ற நடிகனை சேரிக்குள் அழைத்துச் சென்றது. அடித்தட்டு மக்களில் கணிசமானவரை அவரது ரசிகராக்கியது.

மீண்டும் ஹரி - சூர்யா ஒன்று சேர்கிறார்கள். மீண்டும் ஆன்மீக வரிசையில் இப்படத்துக்கு வேல் என பெயர் வைத்திருக்கிறார் ஹரி.

'வாரணம் ஆயிரம்' படத்திற்குப் பிறகு சூர்யா ஹரியின் 'வேல்' படத்தில் நடிக்கிறார். நாயகி யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. (அதிகமும் திருமதி சூர்யாதான் நாயகியைத் தேர்ந்தெடுப்பார் என்கிறார்கள்.)

'சிவப்பதிகாரம்' படத்தில் சறுக்கிய விஷால், ஹரியின் தாமிரபரணியைதான் அதிகம் நம்பியிருக்கிறார். இந்தப் படம் முடிந்ததும் தாமதிக்காமல் வெற்றிவேல் வீரவேல் என்று வேல் படத்துக்கு தாவுகிறார் ஹரி.



பரத் - பாவனா
கூடல் நகர்



# பானை விற்கும் மீராஜாஸ்மின் : 'திருமகன்' சுவாரஸியங்கள்

தேனி சுற்றுவட்டாரங்களை ஒன்றுவிடாமல் சலித்தெடுத்து திருமகனை உருவாக்கி வருகிறார் இயக்குநர் இரத்னகுமார்.

எஸ்.ஜே.சூர்யாவையும் மீராஜாஸ்மினையும் மொத்தமாக மாற்றி படமாக்கும் அழகை பார்த்துக் கொண்டே இருக்கலாம். கிழக்கு சீமையிலே, கருத்தம்மாவுக்கு கதை எழுதியது இவர்தான்.

லஞ்சை முடித்துவிட்டு குட்டித்தூக்கம் போட்ட இயக்குனரைத் தட்டினோம்.

என்னாப்பு...கதை கேட்க வந்துட்டீங்களோ...கிராமத்து மணம் கமகமக்க ஆரம்பித்தார்.

நர்ம் மறந்துபோன உறவுகளின் பிரிவும், இருக்கின்ற உறவுகளின் அறியப்படாத அழகும் பின்னப்பட்ட கதைதான் திருமகன். வாழ்ந்து கெட்ட ஒரு பணக்காரனுக்கும், புதுசா பணம் பார்த்த ஒருவனுக்கும் ஏற்படுகிற நட்புதான் கதைக்கரு.

இதுல வாழ்ந்து கெட்ட ஒருவரோட மகனாக எஸ்.ஜே.சூர்யா வர்றாரு. சூர்யாவை நான் வேறொரு கோணத்தில் காட்டியிருக்கேன். மீரா ஜாஸ்மினுக்கும் வித்தியாசமான கேரக்டர்.

பானை செஞ்சு விக்கிற பொண்ணா வர்றாங்க. ஆக்ஷன்னு குரல் கேட்டா போதும் அசத்திடுவாங்க மீரா. கதைக்குச் சமமா மீராவோட நடிப்பும் படத்துக்கு பலமா இருக்கும். சொல்லிவிட்டு அடுத்தக் காட்சிக்காக கோணம் பார்க்க ஆரம்பிக்கிறார்.

# ஷங்கருக்கு நன்றிக்கடன் : பரத் ஓபன் டோக்

சென்னைக் காதல், வெயிலைத் தொடர்ந்து கூடல் நகர், கில்லாடி, நேபாளி, ஹரி இயக்கும் ஒரு படம் என பரத்தின் கேரியர் ஜெட் வேகமெடுத்துள்ளது.

தனது இரண்டு படங்கள் ஒரே நேரத்தில் வெளியாகியிருக்கும் சந்தோஷத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

எனது இரண்டு படங்கள் ஒரே நேரத்தில் ரிலீஸ் ஆன இந்த காலகட்டத்தை என் வாழ்க்கையில் மறக்கமாட்டேன். வெயிலில் என்னைவிட பசுபதி கேரக்டர் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது முன்பே எனக்குத் தெரியும். ஒரு நல்ல படத்தில் நானும் இருக்கிறேன் என்று மனநிறைவு அடைகிறேன்.

எனக்கு திருப்புமுனையைக் கொடுத்த காதல் படத்தில் நடிக்கும் வாய்ப்பை ஷங்கர் சார் கொடுத்தார். அதற்கு நன்றிக்கடனாகத்தான் வெயிலை ஒத்துக்கொண்டேன். வேறு யாராவது தயாரித்திருந்தால் இந்தப் படத்தில் நடிக்க யோசித்திருப்பேன்.

கூடல் நகர் படத்தில் என்ன கேரக்டர்?

முதன் முதலாக இதில் சூரியன், சந்திரன் என இரண்டு கதாபாத்திரங்களில் நடிக்கிறேன். இது முடிந்ததும் கில்லாடி, நேபாளி, ஹரி சார் இயக்கும் ஒரு படம் என அடுத்தடுத்த கமிட்மெண்ட் இருக்கிறது. தொடர்ந்து தமிழ் படங்களில் மட்டும் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

ஜெனிலியாவுடன் காதல் என்று செய்தி வருகிறதே?

அது செய்தி இல்லை வதந்தி. நானும் ஜெனிலியாவும் நல்ல நண்பர்கள். அதை காதல் என்று சொல்ல முடியாது.

# கருணாநிதி பேரன் படம் தயாரிக்கிறார்

முதலமைச்சர் கருணாநிதியின் பேரனும் மு.க.ஸ்டாலினின் மகனுமான உதயநிதி திரையுலகில் நுழைகிறார். ஏற்கனவே ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் இவர் ஸ்னோவ் பவுலிங் விளையாட்டும் நடத்துகிறார்.

தற்போது ரெட்ஜியன்ட் மூவிஸ் என்ற பெயரில் படக் கம்பெனி துவங்கியுள்ளார். இந்த கம்பெனி மூலம் இரண்டு மெகா படங்களைத் தயாரிக்கிறார்.

ஒரு படத்தில் நடிகர் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். தரணி இயக்குகிறார். கில்லி படத்துக்கு பின் இருவரும் இணைகிறார்கள்.

இன்னொரு படத்தில் விஷால் நடிக்கிறார். இப்படத்தை செல்வராகவன் இயக்குகிறார். படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடக்கிறது.



கிருதிக் ரோஷன்- ஐஸ்வர்யா ராய்
தூம்

# அசின் வெற்றி ரகசியம்

நான் நடித்த 'உள்ளம் கேட்குமே', 'எம்.குமரன் சன் - ஆப் மகாலட்சுமி', 'கஜினி', 'சிவகாசி', 'மஜா', 'வரலாறு' என எல்லா படங்களும் வெற்றி பெற்றுள்ளது.

நல்ல திரைக்கதைதான் இந்த வெற்றிக்குக் காரணம். ஒவ்வொரு படத்திலும் கவனமா நடிக்கிறேன். முழு கவனத்துடன் உழைக்கிறேன்.

நூற்றுக்கு நூறு சதவீதம் நல்லா நடிக்க முயற்சி செய்கிறேன். எனக்குப் பிடித்த கதைகளை மட்டும் தேர்வுசெய்து நடிக்கிறேன். நல்ல கதைக்காக ஏழு மாதங்கள் கூட காத்திருந்திருக்கிறேன். இதுதான் வெற்றியின் ரகசியம் என்கிறார் அசின்.



அபிஷேக் பச்சான்- ஐஸ்வர்



## ரசிகர்களிடம் - சூர்யா காட்டும் அலட்சியம்!

சூர்யா ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றம். பேச்சிலராக இருந்தபோது சூர்யாவிடம் இருந்த கலகலப்பு பிளஸ் ரசிகர்களை மதிக்கும் மனோபாவம் குடும்பஸ்தரான பிறகு மிஸ்ஸிங். காரணம் திருமதி சூர்யா?

சென்னை கடையொன்றில் இந்த ஜோடி பர்சேஸ் செய்தது. ரசிகர்கள் வெளியே கூடி நின்றனர். அதிகமும் சாப்ட்வேர் என்ஜினியர்கள்.

வெளியே வந்த சூர்யா - ஜோதிகா ஜோடி காத்து நின்ற ரசிகர்களைக் கண்டு கொள்ளாததுடன், கஜினி முகத்துடன் தொலைச்சுடுவேன் என்பது போல் சுண்டு விரலை நீண்டி மிரட்டினார் சூர்யா. இந்த அவமரியாதையால் சுருண்டுவிட்டது ரசிகர்களின் முகங்கள்.

இதேபோன்று ஒருமுறை திருப்பதி சென்றது இந்த நட்சத்திர ஜோடி. தேவஸ்தானத்துக்குச் சொந்தமான விடுதியில் சிறிது ஓய்வு எடுத்தவர்கள் ஒன்பது மணிக்கு கோயிலுக்குச் சென்றனர். வி.ஐ.பி.களுக்கான ஸ்பெஷல் தரிசனம் முடித்து …ளியே வந்தவர்களை பக்தர்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது.

சென்னையில் நடந்தது போலவே அவர்களை உதாசீனப்படுத்திய சூர்யா - ஜோதிகா சின்ன புன்னகையைக் கூட அவர்களை நோக்கி உதிர்க்கவில்லை. விளம்பரங்களில் பணத்துக்காக போலி உற்சாகத்துடன் சிரிக்கும் சூர்யா, ரசிகர்களிடம் காட்டிவரும் கறார் முகம் அவருக்கு எதிராக எப்போது வேண்டுமானாலும் திரும்பும்.

மக்களை மதிக்காமல் மன்னனால் கூட தாக்குப்பிடிக்க முடியாது என்பது சரித்திரம்!



வினய் - தனிஷா
உன்னாலே உன்னாலே

## ரஜினிக்கு நான்தான் பொருத்தமான ஜோடி - நயன்தாரா

சிவாஜி படத்திலும் ரஜினியுடன் நடிக்க வாய்ப்பு கிடைத்ததால் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கிறார் நயன்தாரா. இது பற்றி அவரிடம் கேட்டதற்கு, ரஜினி படத்தில் வாய்ப்பு கிடைப்பதே பெரிய விஷயம். அதிலும் 2ஆவது படத்திலும் வாய்ப்பு கிடைத்தால் அது எவ்வளவு பெரிய மகிழ்ச்சியான விஷயம். உண்மையிலேயே நான் ஒரு அதிர்ஷ்டசாலிப் பெண்.

இதனால் தான் இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. 2 படங்களில் அவரோடு நடித்தால் சினிமாவில் உச்சகட்ட இடத்தை அடைந்து விட்டதாக கருதுகிறேன். ரஜினிக்கு நான் தான் பொருத்தமான நல்ல ஜோடி என்றும் நினைக்கிறேன்.



ஆர்த்தி சோப்ரா

# வி சி சி ட் னி

## கமல் அவஸ்தை

கமல் தசாவதாரம் படத்துக்கு ரொம்ப கஷ்டப்பட்டு மேக்கப் போடுகிறார். பத்து வேடங்களில் நடிப்பதால் ஒவ்வொரு வேடத்துக்கும் வித்தியாசம் காட்டுகிறார். அதிகாலை 4 மணிக்கு எழுந்து 4 மணிநேரம் மேக்கப் போடுகிறார். படப்பிடிப்பு முடிந்ததும் மேக்கப்பை கலைக்க ரெண்டு மணி நேரம் ஆகிறது. மேக்கப் கலையாமல் இருக்க திரவ உணவுதான் சாப்பிடுகிறார். வாய் அசைத்து சாப்பிடும் உணவுகளைக் காலை 4 மணிக்கு முன் முடித்து விடுகிறார்.

## ரஜினி பாடல்கள் ரீமிக்ஸ்

ரஜினி நடித்த பில்லா படம் அஜீத் நடிக்க ரீமேக் செய்யப்படுகிறது. விஷ்ணுவர்தன் இயக்குகிறார். ரஜினி பாடி ஹிட் ஆன 'மை நேம் ஸ் பில்லா', 'வெத்தலைய போட்டேன்டி' ஆகிய பாடல்களை ரீமிக்ஸ் செய்து இந்த படத்தில் இடம்பெறச் செய்ய உள்ளனர்.



ரவி - பாவனா
தீபாவளி

## கங்கைக் கரையில் பிரமாண்ட செட் : 'நான் கடவுள்' ஸ்பாட் நியூஸ்

நான் கடவுள் விஷயத்தில் நிதானம் காட்டி வந்த பாலா ஆமை வேகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பரபரப்பாகிவிட்டார் படப்பிடிப்பில்.

காசியில் உள்ள கங்கை நதிக்கரைதான் நான் கடவுள் லொகேஷன். இதுவரை இந்த இடத்தில் எந்த இந்தியத் திரைப்படங்களுக்கும் செட் போட அனுமதி வழங்கப்பட்டதில்லை. இந்த வழக்கத்தை உடைத்து முதன் முதலில் சாதித்திருக்கிறார் பாலா. யெஸ். கங்கைக் கரையில் நான் கடவுள் பிரமாண்ட செட் போடப்பட்டுள்ளது.

படத்தில் இரண்டாயிரம் நிஜ சாமியார்கள் நடிக்கிறார்கள். இவர்கள் தங்கும் சூழல்கள் போன்றும், நதி மண்டபம் போலவும் பல லட்சம் ரூபா செலவில் செட் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த செட்களை 100 உதவியாளர்களுடன் ஒரு வாரத்தில் அமைத்து கொடுத்திருக்கிறார் கலை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி.

இப்போது இந்த செட்களில் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்கிறதாம்.

## சரித்திர சாதனை படைக்கும் சந்திரமுகி

…னிமா உலகில் சாதனை படைத்தவர்களில் ரஜினிக்குத் தனி இடம் உண்டு. தமிழ்ப் பட உலகில் …ண நடிகராக அறிமுகமாகி, சூப்பர் ஸ்டார் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள ரஜினிகாந்த் ரசிகர்கள் மனதில் தனி இடம் பிடித்துள்ளார்.


ரஜினி நடித்த பல படங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளன. 16 வயதினிலே, மூன்று முகம், தங்க மகன், படிக்காதவன், ராஜா சின்ன ரோஜா, பணக்காரன், தர்மதுரை, தளபதி, மன்னன் அண்ணாமலை, எஜமான், முத்து, அருணாசலம் ஆகிய படங்கள் 175 நாட்களைத் தாண்டி ஓடியது. பாட்ஷா படம் 368 நாட்கள் ஓடி சாதனை படைத்தது.

இதை எல்லாம் மிஞ்சும் வகையில் ரஜினியின் சந்திரமுகி படம் 608 நாட்களைத் தொட்டு, தொடர்ந்து மெகா சாதனை படைத்து வருகிறது. உலக சந்தையில் 50 கோடி வசூலைத் தாண்டிய படங்களின் வரிசையில் இடம் பிடித்த இந்தப் படம் ரஜினியின் திரை உலக வாழ்வில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

தியாகராஜ பாகவதர் நடித்த ஹரிதாஸ் படம் சென்னை பிராட்வே தியேட்டரில் 768 நாட்கள் ஓடி, தமிழ்த் திரைப்பட வரலாற்றின் சாதனையாக இருந்து வருகிறது. இந்த வரிசையில் இடம்பிடிக்கும் வகையில் சந்திரமுகி சென்னை சாந்தி தியேட்டரில் 608 நாளை கடந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

சந்திரமுகி, ஹரிதாஸ் படம் ஓடிய நாட்களையும் கடந்து சரித்திர சாதனை படைக்கும் என்று ரஜினி ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

ரசிகர்கள் கூட்டத்தைப் பார்த்தால் அந்த சாதனை நிகழும் என்றே தோன்றுகிறது.



…ர்யா ராய் கிருதிக் ரோஷன்-பிபாஷா
தூம்



அபிஷேக் பச்சான் - பிபாஷா
தூம்




## சுதந்திரம்

மனதில் எழும்
வார்த்தைகளை
வெளிக்கொணர
விழைகிறேன்
தொண்டையில்
சிக்கிக் கொள்கிறது
வார்த்தை!

பேச்சுச் சுதந்திரம்
என்ற...
பேச்சுக்கே
இடமில்லை
இங்கே!

எழுத்தில்
இயம்பினாலும்
புனைப்பெயரொன்றை
புகுத்தியாக வேண்டும்
அன்றேல்
பொசுக்கென்று
போய்விடும்
உயிர்!

என் – பேனாவின்
தலையை...
எப்போது சுதந்திரமாய்
அகற்றுகின்றேனோ?
அன்றுதான்
நாட்டுக்கு
ஜனநாயகமும்
எனக்கு
சுதந்திரமும்...

-செ.பிரதீபன்,
மாணிக்கமடு.

## கற்புள்ளவனாக...

உன் விழி
யன்னலை மூடு...
உன் பார்வைக்
காற்று...
என் மேனியில்
படுவதால்
இதயம்
குளிரெடுக்கிறது!



அடிக்கடி உதடு
நக்குவதைக்
குறைத்துக்கொள்
எனக்கு நாக்கு
வலிக்கிறது!

விழி சிமிட்டி
நீ...
என்னில்
பரப்பும் பார்வைக் கோலம்
என்னை
சுவர்க்கத்திற்கு
அழைத்துச்
செல்கிறது!

முழங்கால்
மறைத்து
ஆடையணி...
தொப்புள் துவாரம்
தெரியாமல்
ஜாக்கெட் போடு...
மார்பகம் மறைத்து
சேலை கட்டு...

என்னை என்றும்
கற்புள்ளவனாக
இருக்க விடு!!

-அநுராதபுரம் . ரஹ்மத்துல்லாஹ்

## எதுவும் நடக்கலாம்?

சந்திர சூரியர்
மாறி உதிக்கலாம்
சாக்கடை மாறி
பூக்கடையாகலாம்
மந்திர பலத்தால்
மாங்காயை விழுத்தலாம்
மலடியைக் கூட
பிள்ளை பெற வைக்கலாம்

அந்தரத்தில் தொங்கு
பாலம் அமைக்கலாம்
ஆண்டியும் ஒரு நாள்
அரசனாய் வரலாம்

செந்தணல் மீது
மிதித்து நடக்கலாம்
செய்வினை சூனியம்
செயித்தானைக் கட்டலாம்

மந்தியைப் போல்
கட்சி மாறலாம் - ஆசையில்
மந்திரிப் பதவிக்காய்
பச்சோந்தியாகலாம்

இந்திர லோகத்தையும்
தரிசித்து வரலாம் - இன்று
இலங்கையைச் சுற்றி
பார்த்து வரலாமா?

எதுவும் நடக்கலாம்
இன்றுள்ள சூழலில்!
இனப் பிரச்சினைக்கு
இணக்கமான இனிய
தீர்வொன்று கிடைக்குமா?

சுதந்திரமாக இதந்தரும்
சமாதானப் பேச்சு - விரைவில்
வெற்றிபெற்றிட - நல்ல
சந்தர்ப்பம் கிடைக்குமா?

எதுவும் நடக்கலாம்
இன்றுள்ள சூழலில் இங்கே!

–கவிக்குயிலன் சேனையூர் – 06

## விஷமான விலையேற்றம்

எலும்புக் கூடுகளும்
மனித சதைகளும்
மண்டையோடுகளும்
மலிந்து கொண்டே
போகிறது...

உப்புத் தொடக்கம்
ஏனை(ய) எல்லாவற்றுக்குமே
விலைவாசியானது
விஷம் போல
ஏறிக் கொண்டே
செல்கிறது.

கடவுளே! நீ
கண்விழித்துப் பார்
கல்லையும், மணலையும்
களியுருண்டைகளையும்
தின்றேனும்
காலத்தைக் கழிக்கும்
வித்தினை இனியாவது
கற்றுத்தா கட்டாயமாக...

இல்லையென்றால்
காலனை அனுப்பு
உயிரினை
உடனெடுப்பதற்காக!

அதற்காக
சந்தோசப்பட்டுப் போவோம்
நாளை நாம்
நிச்சயமாக!

-கன்னிமுத்து வெல்லபதியான்.

## ஆதாமின் பிள்ளைகளில்...

இறை ஈந்த மண்
இரத்தம் தோய்ந்து
உயர்ந்து நிற்கும் விண்
அதன் மேலும் வாழ்க்கை
விஞ்ஞானம் விரிந்தும்
அஞ்ஞானம் படர்ந்து
இயற்கைக்கு சவால் விடும்
செயற்கை மனிதன்

எல்லா தேசத்திலும்
இருள் கௌவி
மின்சாரமிருந்தும்
அமாவாசைக்குள் ஆயுள்

பூமியெங்கும்
போரின் முகங்கள்
வன்மங்கள் நிறைந்த
வாளிப்பான ஜென்மங்கள்

ஆத்மாவிழந்து
ஆதாமின் பிள்ளைகள்
வேதங்களைப் பார்த்தும்
பேதங்கள் போற்றி
நீதங்கள் கற்றும்
ஈனங்கள் புரிந்து
ஊனங்கள் திணிக்கும்
பயனற்ற கீதங்கள்

ஆகமங்களை கிழித்தெறியும்
மோக ஆத்மாக்கள்
புத்தரை கொலை செய்யும்
'பண' வாதிகள்
இறை மறை மறந்த
விசுவாசிகள்

அவன் தந்த மண்
அவனை மறந்து
தகித்து,
வாடிப்போகிறது வாழ்தல்.

-ஓட்டமாவடி நளீம்.

## போகும் இடம் எங்கே...?

அதோ...!
கடல் கோள் ஏப்பமிட்டுமிழ்ந்த...
எச்ச சொச்ச என்புக் கூடுகள்...
அவை -
இடிபாடுகளுக் கிடையில் இருந்து,
இடுப்பை நிமிர்த்தும் வேளையில்...
மனித சுனாமிகள்
மண்டையில்
அடித்து சங்கரிக்கின்றன!

அங்கொன்றும், இங்கொன்று மாக
ஆமைகள் மூச்சு வாங்குதற்கு
அமைவாக எழுப்பப்பட்ட
அகதி முகாம்களிலே
அரக்கப்
பேய்களின் அட்டகாசங்கள்
அன்றாடம் தொடர்கின்றன.

என்னவோ...
எரிகின்ற வீட்டில்
பிடுங்கினது
இலாபம் என்பார்களே...!
அதை மெய்ப்பிக்க,
ஓநாய்களும், கழுகுகளும்
ஓயாமல் சண்டையிட்டு,
மிச்ச மீதிகளைக் குதறுகின்றன.

அனல் பறக்கும் குடிமனையில்
அங்கத்தை ஒடுக்கிக் கொண்ட
ஆமைகளோ...
அரை முழுத் துணிமணியோடு
பரதேசிக் கோலத்தில்
பருமர வாகை நிழல் தேடி,
பல காத தூரம்
பயணிக்கின்றன...!
போகும் இடம் எங்கே...?
அந்தப் -
பரந்தாமனுக்கே வெளிச்சம்...!

-த.மீரா லெவ்வை, ஏறாவூர் - 03.

## கண்ணீர்

விழிகளின் வியர்வை
சிலருக்கு
தற்காலிகத்தாலாட்டு
பலருக்கு
நிரந்தர ஒப்பாரி

கண்ணீர் சில நேரம்
கரிக்கும்
இன்னும் சிலநேரம்
இனிக்கும்

சோகத்தில் சுரக்கும் கண்ணீர்
சந்தோஷத்துக்கும்
சமர்ப்பணம்.

ராஜா, மன்னார்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

கவிதை உலகின் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் கவிதைகள் வரையும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இணையத்தில் இருந்து சில கவிதைகளை சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம்.

### பருவம் எனும் பாதையினிலே

தோழனே! நமது நட்பு
அறிமுகத்தில் ஆரம்பித்து
ஆற்றலையும் அன்பையும் பெருக்கி,
இன்ப துன்பங்களை பகிர்ந்து
ஈர மனதுடன் பழகி
உதவிக்குப் பழகாமல்
ஊடல்கள் இல்லாமல்
எண்ணங்கள் கலந்து
ஏளனம் செய்யாமல்
ஒற்றுமையாய் இருந்து
ஓருயிராய் மகிழ்ந்ததுவே!

பிறந்து விட்டோம்
காலத்தின் கட்டாயத்தால்
தொடர்கிறோம் நம் பந்தத்தை
மடலின் மூலமாய்

கண்டேன் மடலில்
காதல் எனும் கனியை நீ ருசிப்பதாக
கொண்டேன் மகிழ்ச்சி
இருந்தும் மனதில் ஓரத்தில் ஏனோ
தளர்ச்சி
ஏன்? என்னை நானே கேட்கிறேன்

மனம் அறிந்து மணம் புரிவது அபூர்வம்
குணம் அறிந்து இனி இணைவது நலம்
சிலர் காதலை பொழுது போக்காக்கி
ஏமாற்றலாம் உன்னை

உன்னவளை தெரியவில்லை எனக்கு
எனவே புரிய வைக்கிறேன்
காதலைப் பற்றி உனக்கு!

தோழனே! காதல் என்பது
தழுவுவதால் வருவதுமல்ல
தவிர்த்தால் வராமல் இருப்பதுமல்ல

கனவினில் கலந்து மனதினில் நினைந்து
மரணத்தில் விழுவதுமல்ல

அழகாலும் அறிவாலும்
அமைக்கப்படுவதுமல்ல
அது அழிக்கப்படுவதுமல்ல

பருவம் என்னும் பருவத்தில்
விழி என்னும் விதையால்
பார்வை என்னும் பாசனத்தால்
இதயம் என்னும் இடத்தில்
வளர்வதுதான் காதல்

தோழனே! உனது காதல்
கண்ணில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை
மண்ணில் முடியாமல் இருக்கட்டும்
மனதில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை
கணத்தில் முடியாமல் இருக்கட்டும்
ஏன் எளிமையாக ஆரம்பித்தாலும்
பரவாயில்லை
ஏளனத்தில் முடியாமல் இருக்கட்டும்
மடலில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை
உடலில் முடியாமல் இருக்கட்டும்
அது மறுப்பில் ஆரம்பித்தாலும்
பரவாயில்லை
மரணத்தில் முடியாமல் இருக்கட்டும்.

தோழனே! பெற்றோர் மனம் புண்படாமல்
உற்றார் கண் படாமல்
உறவினர் சொல் படாமல்
கற்பின் நெறி கலையாமல்
வறுமைகள் பறந்து வசந்தங்கள் பிறந்து
வளங்கள் நிறைந்து வாழ்க்கை சிறந்து
உனது காதல்
அன்பு என்னும் குன்றால்
உன்னத உயரம் அடையட்டும்.

-ப.முத்துக்குமார்.

### கனவுகளில் வாழ்ந்து விடுகிறேன்

கண்டவை எல்லாம் கனிவானவையே
நண்பனே!
கனவுகளில் நான் வாழ்ந்து விடுகிறேன்
கலைத்து என்னை தவிக்க விடாதே
துரோகத்தை அங்கே ஏனோ
துளிகூட காணவில்லை
துன்பம் எல்லாம் தொலைதூரத்தில்
துயரம் எல்லாம் நெருங்கவே பயந்தது

கனவுகளில் நான் வாழ்ந்து விடுகிறேன்
காட்சிகளில் நான்
கலந்து விடுகிறேன்

ஏனோ அங்கே சந்தித்தவர் எல்லாம்
என்னை
ஏமாற்றவேயில்லை
ஏகாந்தம், கண்களை மூடியதும்
ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை

கூடியவர் அனைவரும் கொண்டது
குழந்தை மனமே
கூப்பாடு போட்டுக்
கூவியழைத்தும் வஞ்சனை அங்கே
கூடவேயில்லை

கனவுகளில் நான் வாழ்ந்து விடுகிறேன்
கற்பனையில் தவழ்ந்து வருகிறேன்

தோழமை பலவுமென் வாழ்வில்
தோற்றே போயின

உறவுகள் பந்தம் என்னை
உறுத்தவே செய்தது
கண்டவை நிஜவுலகில்
கசப்பான காட்சிகளே

உண்மை நண்பனே
உன்னிடம் ஒரு
உதவி கேட்பேன்

கனவுகளில் நான் வாழ்ந்து விடுகிறேன்
காலத்தின் கோலத்தை
கலைத்து நீயும் என்னை
கண்ணீரில் தள்ளாடும் நினைவுலகில்
நிறுத்தாதே!

-சத்தி சக்திதாசன்.

### நீ எனக்கு வேண்டும்

மலருக்கு வாசம் வேண்டும்
மீனுக்குப் புனல் வேண்டும்
தேனுக்குத் தித்திப்பு வேண்டும் - என்
தேவதையே நீ எனக்கு வேண்டும்.

வானுக்குக் கூர்மை வேண்டும்
யாழுக்கு இசை வேண்டும்
தோளுக்கு வீரம் வேண்டும் -அடி
தோகையே நீ எனக்கு வேண்டும்

கடலுக்கு அலைவேண்டும்
உடலுக்கு உயிர் வேண்டும்.
உதவிக்குக் கரம் வேண்டும் - என்
உயிரே நீ எனக்கு வேண்டும்.

மயிலுக்குத் தோகை வேண்டும்
குயிலுக்கு கவி வேண்டும்.
வெயிலுக்கு நிழல் வேண்டும் - அடி
வெண்ணிலவே நீ எனக்கு வேண்டும்.

நட்புக்குத் தோழன் வேண்டும்,
நாட்டிற்கு வளம் வேண்டும்,
காட்டிற்கு வேங்கை வேண்டும் - என்
கிளியே நீ எனக்கு வேண்டும்.


பெண்ணுக்கு அணி வேண்டும்.
பாலுக்கு சுவை வேண்டும்
பாட்டுக்கு தாளம் வேண்டும் - அடி
பாவையே நீ எனக்கு வேண்டும்

தீபத்திற்கு ஒளி வேண்டும்
சிலம்பிற்கு இளங்கோ வேண்டும்
சபைக்குத் தமிழ் வேண்டும் - என்
சர்க்கரையே நீ எனக்கு வேண்டும்.

-எஸ்.ஆன்றோ.

# பொன்னான கைகள் மென்மையாக ஜொலிக்கட்டும்...!

பெண்களின் வசீகர அழகில் முகத்தைப் போலவே கைகளுக்கும் முக்கியப் பங்கு உண்டு. கைகளால் தினமும் நாம் எத்த



னையோ வேலைகளைச் செய்கிறோம்.

அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பது மட்டுமல்ல, சரும வியாதிகள் வராமல் இருக்கவும் கைகளைப் பராமரிப்பது அவசியம். வெகு சிலருக்கே இயற்கையாக அழகான கைகள் அமைகின்றன.

குளித்து முடித்த பிறகோ அல்லது கை களைக் கழுவிய பிறகோ, பேபி லோஷன், மாஸ்சரைசர் தடவவும். வெளியில் செல்வ தாக இருந்தால் அவசியம் சன்ஸ்கிரின் லோஷன் தடவிய பிறகு ஒரு மணி நேரம் கழித்து வெளியில் செல்ல வேண்டும்.

நீண்ட நேரம் தண்ணீரில் வேலை செய்வதனால் சருமம் பாதிக்கப்படும். அதிக சூடான அல்லது குளிர்ச்சியான நீரில் குளிப் பதன் மூலம் சருமத்தில் உள்ள இயற்கை யான எண்ணெய்ப் பசை அழிந்துவிடும்.

பாத்திரங்கள் கழுவப் பயன்படுத்தப்படும் ஒரு சில சோப்புகளும் நாளடைவில் கை களை அரித்துவிடும். எனவே ரப்பர் குளோவ்ஸ்களைப் பயன்படுத்துவது நல்லது.

## கைகளில் கொப்புளமா?

கைகளில் அடிக்கடி கொப்புளம், பரு தோன்றினால் தக்க சிகிச்சையின் மூலம் சில நாட்களில் குணமாக்கிவிடலாம்.

பொடி ஒயில் அல்லது பொடி லோஷ னைத் தொடர்ந்து கைகளில் தடவினால் கைகள் பட்டுப் போல மென்மையாகும்.

தூங்கப்போவதற்கு முன் தேங்காய் எண்ணெய் மற்றும் மஞ்சள், கடுகு எண் ணெயைக் கைகளில் தேய்த்து மாலிஷ் செய்யவும்.

இது தவிர, வாரம் 2 முறை பாலா டையைக் கைகளில் பூசி, சிறிது நேரம் கழித்து குளிக்கவும்.

பெண்களுக்கு வீட்டு வேலைகள் அதிகம் இருப்பதால் உள்ளங் கைகள் காய்ப்புக் காய்த்து விடும். இதற்கு பீர்க்கங் காய் நார் நல்ல பலனைத் தரும். குளிக்கும் போது அல்லது கைகளைச் சுத்தம் செய் யும் சமயத்தில் இந்த நாரை காய்ப்பு இருக் கும் இடங்களில் லேசாகத் தேய்க்கவும். கைகளைச் சுத்தம் செய்த பிறகு கிரீமை கொஞ்சம் அதிகமாகப் பூசுங்கள். உள்ளங் கைகள் மென்மையாகி விடும்.

# சூழலை மாற்றியமைப்பது உங்கள் கையில் தான்...!

**நீங்கள்** நினைத்தபடியே எல்லாம் நடக்கிறதா? நடப்பதில்லை. நடக்காதபோது நீங்கள் ஏன் இப்படித் தான் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்? எதிர்பார்த்த விஷ யங்கள் நடக்காமல் போனால், கோபப்படுவது ஏன்?

உங்கள் எண்ணப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுவதை விட்டு விட்டு, சூழ்நிலைக்கேற்ப எண்ணங்களை நிறைவேற்றி சுகம் காண்பதில்தான் புத்தி சாலித்தனம் உள்ளது. 'சுற்றி நடக்கும் எது வும் சரியில்லை...'என்று கோபப்படுவதை விட்டுவிட்டு, இந்தத் தளம் நமக்குச் சிறப்பாக உள்ளது. நம் தனித்திறனைக் காட்டி, சுற்றுச் சூழலை மேலும் மெருகூட்ட வேண்டும் என்ற உறுதியுடன் செயற்படுபவர்கள்தான் சாதனை யாளர்கள். இன்னொரு விஷயம்...

நெகடிவ் சமாச்சாரங்களே நடக்க வேண் டும் என்ற மனப்போக்கு பலரிடமும் உள்ளது. இது நம் வாழ்க்கையை அழித்து விடும். சந்தோஷ நேரங்களை அப்படியே விழுங்கி விடும். இதனால் நாம் அடையப்போவது என்ன?


கை நிறையச் சம்பாதிக்கும் திருமண மாகாத பெண்கள் இப்போதெல்லாம், சுதந் திரமான வாழ்க்கை வாழ விரும்புகின்றனர். இவர்களின் சுய தேவைகளை இவர்களே பூர்த்தி செய்து கொண்டு விடுவதால், மற்ற வர்களைப் பார்த்துப் பொறாமைப்படும் குணம் இவர்களிடையே மறைந்துள்ளது. மனதளவில் தைரியமானவர்களாகவே உள்ளனர். வேலைப் பளுவினால் ஏற்படும் மன உளைச்சல்தான் இவர்களைப் பாதிக்கிறதே தவிர, இவ்வளவு நாட்கள் பெண்கள் பட்டு வந்த சிறு சிறு பிரச்சினைகள் இவர்களிடம் இல்லை. எனவே, ஓரளவு இவர்கள் நினைத்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு முந்தைய தலைமுறை யினர்தான் இன்னும் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்ளத் தயங்குகின்றனர். தங்களிடம் உள்ள திறமைகளை வைத்து, ஒவ்வொரு நிமிடத்தையும் திறம்படச் செல வழித்து, சுற்றுச் சூழலை உங்களுக்கு ஏற்ற வாறு மாற்றியமைத்துக் கொண்டால் நீங்க ளும் ஜொலிக்கலாம்...வைரம் போல!


## முழங்கையை அழகுபடுத்த...

ஒரு பெண் என்னதான் சிவப்பானவராக இருந்தாலும் முழங்கை மட்டும் காய்ப்புக் காய்த்தால் அலங்கோலமாகத்தான் இருக்கும். சரியான பராமரிப்பு இல்லாததே இதற்குக் காரணம்.

முழங்கைகளை தினமும் குளிக்கும் போது தவறாமல் சோப்பு மற்றும் பீர்க்கங்காய் நாரால் கழுவவும், அதன்



பிறகு தண்ணீரால் சுத்தம் செய்துவிட்டு மாஸ்சரைசரால் நன்கு மாலீஷ் செய்யவும். எலுமிச்சம் பழத்தை இரண்டாக நறுக்கி மேஜை மீது வைத்து, அதன் மீது முழங்கைகளைச் சிறிது நேரம் ஊன்றிக் கொண்டிருக்கவும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் முழங்கைகளில் உள்ள கருமை நிறம் மெல்ல மெல்ல மறைந்து விடும்.




# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

52

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

26.12.2006

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி -52
தினமுரசு வார மலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.

பரிசுப் போட்டி இல - 50
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி


இரா. தாரணி,
இல. 43/1, லேடி மக்கலம் டிரைவ், நுவரெலியா


அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.






## 'ஹேர் டை' உபயோகிப்பது எப்படி?





'ஹேர் டை' எல்லோருக்குமே சரிப்பட்டு வரும் என்று சொல்ல முடியாது. சிலருக்கு அலர்ஜியை உண்டாக்கும். 'ஹேர் டை' களில் கூட கெமிக்கல் கலக்கிறார்களாமே? 'ஹேர் டை' உபயோகிக்கலாமா, கூடாதா?

கண்ணுக்கு மையிடுவது மட்டுமல்ல,



கூந்தலுக்குச் சாயம் பூசுவதும், காப்பிய காலத்திலேயே இருந்திருக்கிறது. அப்போது, வீட்டில் தயாரித்த இயற்கையான சாயங்க ளையே உபயோகித்திருக்கிறார்கள். ஆனால், இப்போது யாருக்கும் அப்படிச் சாயம் தயா ரிக்கத் தெரிவதில்லை. அதற்கு நேரமும் இல்லை.

இயற்கை, கெமிக்கல், அக்ரிலிக் என்று மூன்று வகையான 'ஹேர் டை'கள் கடை களில் கிடைக்கின்றன. மருதாணி முதல் வகையைச் சேர்ந்தது. அலர்ஜி போன்ற தொல்லைகள் தராதது. ஆனால், இதைப் பயன்படுத்தினால் தலைமுடி சிவப்பாக மாறி விடுவதால் கொஞ்சம் சங்கடமாக இருக்கும். கெமிக்கல் மற்றும் அக்ரிலிக் 'ஹேர் டை' களில் அலர்ஜி ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. சிலருக்கு டை அடித்துக் கொண்டு வெயிலில் போனால், முகம், கண், புருவம் எல்லாம் வீங்கிப் போய்விடும். தலை அரிக்கும். கொப் புளம் வரும்.

இப்படி அலர்ஜி ஏற்பட்டால், ஒன்றும் செய்ய முடியாது. அந்த பிராண்டைத் தவிர்த்து வேறு பிராண்ட் மாற்ற வேண்டியதுதான். அலர்ஜியை மாற்ற வேண்டுமே தவிர, விளம்பரங்களில் மயங்கி அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கக் கூடாது. மேலும் ஹெர்பல் 'ஹேர்'டைகள் கெமிக்கலைவிடக் கொஞ்சம் பரவாயில்லை. ஆனால் இவையும் சிலருக்கு அலர்ஜியை உண்டாக்கும். ஏனெனில், நிறத்துக்காகச் சில கம்பெனிகள் கெமிக்கல் கலக்கின்றன.

அதற்காக 'ஹேர் டை' உபயோகிக்கவே கூடாது என்றில்லை. ஆனால் அளவாக உபயோ



கிக்க வேண்டும். 'ஹேர் டை' போடுவதற்கான கால இடைவெளியை முடிந்த அளவுக்குத் தள்ளிப் போடலாம். எந்த ஒரு 'ஹேர் டை' வாங்கினாலும் அதிலிருந்து ஒரு துளி எடுத்து, காதின் பின்புறம் வைத்து இரண்டு மணி நேரம் விட்டு, ஏதேனும் அரிப்பு, கொப்புளம், தடிப்பு வருகிறதா என்று பார்த்து, ஒரு பிரச்சினையும் இல்லையெனில் உபயோகிக்கலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## அப்பளக் கூட்டு

**தேவையான பொருட்கள்:-**

கடலைப் பருப்பு - அரை கப்
பொரித்த அப்பளங்கள் - 6 முதல் 8
பெரிய வெங்காயம் - 1
தக்காளி - 2
தேங்காய்த் துருவல் - 2 மேசைக்கரண்டி
மிளகாய்த்தூள் - ஒன்றரை மேசைக்கரண்டி
உப்பு - தேவைக்கு
இஞ்சி, பூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி
மஞ்சள்தூள் - கால் மேசைக்கரண்டி.

**தாளிக்க :-**

கடுகு - அரை மேசைக்கரண்டி
உளுத்தம் பருப்பு - அரை தேக்கரண்டி
இஞ்சி, பூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - 1 மேசைக்கரண்டி

**செய்முறை :-**

கடலைப் பருப்பை மஞ்சள் தூள் சேர்த்து நன்கு வேகவிடுங்கள். வெங் காயம், தக்காளியைப் பொடியாக நறுக் குங்கள். குக்கரில் பருப்பு, வெங்காயம், தக்காளி, நொறுக்கிய அப்பளம், தேங் காய்த் துருவல், மிளகாய்த் தூள், இஞ்சி, பூண்டு விழுது, உப்பு சேர்த்து குக்கரை மூடுங்கள். 2 விசில் வந்ததும் இறக் குங்கள். எண்ணெயைக் காயவைத்து கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்கி, கூட்டில் சேருங்கள்.




**ஆக**, படகிலே முதல் சாப்பாடு அபாரமாய் அமைந்துவிட்டது.

அப்போது காலை மணி பத்து இருக்கும் என்று வெயிலிலிருந்து தெரிந்தது. கடலுக்குள் ஐந்து மணி நேரம்தான் பிரயாணம் செய்திருப்போம். இருந்தாலும், கடலில் அந்த இடத்தில் மிக ஆழம் என்பதை உணரமுடிந்தது. அலைகள் அவ்வளவு உயரமாக இல்லை. அவற்றைத் தாண்டும் போது டொம் என்று விழவும் இல்லை. பருவநிலை பிரமாதமாயிருந்தது. பகல் வெளிச்சம் இருக்கும் வரையில் காம்பஸைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கத் தேவையில்லை என்பது அப்போதுதான் உறைத்தது எனக்கு. நடுநடுவே சூரியனுடன் காம்பஸை ஒப்பிட்டுப் பார்த்து அதன்படி படகைச் செலுத்தினேன். வெயிலினால் கண்கள் கூசின. கூலிங் கிளாஸ் வைத்துக் கொள்ளத் தோன்றாமல் போயிற்றே என்று வருந்தினேன்.

திடீரென்று ஜோன்ஸ் கூறினான். "உன்னை நான் ஆஸ்பத்திரியில் சந்தித்தேனே எவ்வளவு அதிர்ஷ்டம் அது!"

"நீ ஒருத்தன்தானா? நானும் அதிர்ஷ்டக்காரன்தான்," என்றேன். தேகாவும், பெர்னாண்டசும் என் நினைவுக்கு வந்தார்கள். அவர்கள் சரியென்று கூறியிருந்தால் இங்கே எங்களுடன் இருந்திருப்பார்கள்....

"அதிர்ஷ்டக்காரன் என்று சொல்ல முடியாது. அந்த அரபுக்காரன் சரியான நேரத்தில் வார்ட்டுக்குள் வந்தானே? அந்த வேலை உன்னைக் காலை வாரி விட்டிருக்கும்" என்றான் ஜோன்ஸ்.

"மெய்தான். மாசுரெட் பிரமாதமாக உதவி செய்தான். நல்ல தைரியசாலி, கெட்டிக்காரன். அவனை நம்மோடு அழைத்து வந்தோமே, அதில் எனக்கு ரொம்பச் சந்தோஷம்." என்றேன்.

"நன்றி" என்றான் மாசுரெட். "நான் வயதில் சின்னவன். ஒரு பலவீனமும் உண்டு. அது உங்களுக்கே தெரியும். அப்படியும் என் மீது நீங்கள் இருவருமே நம்பிக்கை வைத்தீர்களே, அதற்கு நன்றி, உங்கள் நம்பிக்கை வீணாகாதிருக்க என்னால் முடிந்ததையெல்லாம் செய்வேன்."

நான் சொன்னேன்: "சம்மட்டிக்காரன் ஜுலட்டைச் சந்திப்போம் என்று யார்தான் நினைத்தார்கள்? இப்போது அவன் ரொம்பத் தூரம் போயிருப்பான். அல்லது காட்டிலே ஒளிந்து கொண்டிருக்கிறானோ என்னவோ!"

"நான் வர்றப்போ என்ன செய்தேன் தெரியுமா, அட்ரஸ் கொடுக்காமல் போய்விட்டேன் என்று ஒரு சீட்டு எழுதி என் தலையணைக்கடியில் வைத்துவிட்டு வந்தேன்" என்றான் ஜோன்ஸ். நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம் அதைக் கேட்டு


ஐந்து நாட்கள் பிரயாணம் செய்தோம், எதுவும் சேராமல். பகல் வேளையில் கிழக்கு - மேற்காகச் செல்லும் சூரியனைத் திசை காட்டியாக வைத்துக் கொண்டேன். இரவில் திசை காட்டும் காம்பஸையே பயன்படுத்தினேன்.

ஆறாம் நாள் காலை, மிகப் பிரகாசமான சூரியன் எங்களை வரவேற்றான். திடீரென்று கடல் அமைதியடைந்துவிட்டது. எட்டத்தில் மீன்கள் துள்ளிக் கொண்டிருந்தன.

அசதி என்னைக் கொன்றது. முந்தின இரவு மாசுரெட் என் முகத்தை அடிக்கடி ஈரத் துணியால் துடைத்து நான் தூங்கிவிடாதபடி பார்த்துக் கொண்டான். அப்படியும் கூட, நான் தூங்கி விழுந்தேன். ஜோன்ஸ் சிகரெட் நெருப்பினால் என்னைச் சுட்டுச் சுட்டு எழுப்ப வேண்டியிருந்தது.

கடல் இப்போது மரண அமைதியாக இருந்ததால் கொஞ்ச நேரம் தூங்கலாமென்று முடிவு செய்தேன். பெரிய பாய்மரச் சீலையையும் சின்ன முக்கோணச் சீலையையும் இறக்கினோம். ஒரே ஒரு பாய்மரச் சீலை மட்டுமே விரித்திருந்தது. படகின் அடிப்புறத்தில் மரக்கட்டை போல் தூங்கினேன். விரிந்த பாய்மரத்தின் நிழல் என்னை வெயிலிலிருந்து காத்தது.

மாசுரெட் என்னை உலுக்கி எழுப்பினான். "மணி பன்னிரெண்டோ,



ஒன்றோ ஆகிறது. காற்று ரொம்பப் பலமாய் வீசுகிறது. அதனால்தான் உன்னை எழுப்பினேன். அடி வானத்தில் ஒரே கன்னங்கரேலென்றிருக்கிறது" என்றான்.

எழுந்து என் இடத்துக்குச் சென்றேன். விரித்திருந்த ஒற்றைப் பாய்மரம், அமைதியான கடலில் எங்களை அழைத்துச் சென்று கொண்டிருந்தது.

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

மற்ற இரண்டு பாய் மரங்களையும் விரித்தால் போதும். வெகு வேகமாகச் செல்ல முடியும். பெரிய பாய்மரத்தைக் கவனமாக விரித்து, இறுக்கக் கட்டினேன். "எச்சரிக்கையாயிருங்கள். புயல் வரப்போகிறது" என்றேன்.

பெரும் நீர்த்துளிகள் எங்கள் மீது விழத் தொடங்கின. தொடுவானத்தில் தெரிந்த இருட்டு, பிரமிக்கத்தக்க வேகத்தில் எங்களை நோக்கிப் பாய்ந்து வந்தது. கால் மணி நேரத்துக்குள்ளாகத் தொடுவானத்திலிருந்து நாங்கள் இருந்த இடம் வரையில் பரவி விட்டது. இதோ அதுவும் வந்துவிட்டது. நம்பற்கரிய கடுமையான காற்று நேரே எங்களை நோக்கி வீசியது. மாயாஜாலம் போல் கடல் வேகமாகப் பொங்கியது. அலைகளின் உச்சியில் வெளேரென நுரைத்தது. ஒரே வீச்சில் சூரியனைத் துடைத்துவிட்டது கருமேகம். நீர்வீழ்ச்சி போல் பொழிந்தது மழை. எதையும் எங்களால் பார்க்க இயலவில்லை. படகைக் கடல் அலைகள் மோதிய போதெல்லாம் என் முகத்தில் குடம் குடமாய்த் தண்ணீர் அடித்தது. புயல்தான் இது. சந்தேகமில்லை. நான் காணும் முதல் புயல் இது. கட்டவிழ்த்து விடப்பட்ட இயற்கையின் பயங்கரக் கோலம் மொத்தமும் கண்டேன் - இடி, மின்னல், மழை, அலைகள், எங்கள் தலைக்கு மேலும் எங்களைச் சுற்றிலும் ஊளையிடும் காற்று அவ்வளவும் கண்டேன்.

வைக்கோல் துரும்பைப் போலப் படகு தூக்கிச் செல்லப்பட்டது. நம்பவே முடியாத உயரங்களுக்கு ஏறியது. பிறகு மேலே வரவே வராது என்றெண்ணும் அளவுக்கு அதலபாதாளத்துக்கு இறக்கியது. என்றாலும், அவ்வளவு ஆச்சரியமான ஆழங்களில் இறங்கிய பின்னும் அடுத்த அலை வந்ததும் அதன் மீதேறும். மீண்டும் பழையபடி இறங்குவதும் ஏறுவதுமாய் இருந்தது. நான் இரு கைகளாலும் சுக்கான் பிடியைப் பற்றிக் கொண்டிருந்தேன். ஒரு முறை ஒரு பெரிய அலை வருவதைக் கண்டதும் அதைச் சற்றுத் தாண்டிச் சென்றுவிட வேண்டுமென்று எண்ணினேன். மிக வேகமாக நகர்ந்து விட்டேன் என்பதில் சந்தேகமில்லை. எனினும் அந்த அலையின் குறுக்கே செல்கையில் படகுக்குள் தண்ணீர் ஏராளமாய்ப் புகுந்துவிட்டது. மொத்தப் படகும் தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தது. படகுக்குள் சுமார் மூன்றடி தண்ணீர் இருந்திருக்கும். அடுத்த அலை வந்தபோதும் இதேபோல அதைப் பிளந்து கொண்டு சென்றேன். ரொம்ப அபாயமான வேலை இது. நான் செய்யவேண்டுமென்று நினைக்கவில்லை. என்னையறியாது செய்துவிட்டேன். படகு சாமர்த்தியமாகச் சாய்ந்தது - கிட்டத்தட்ட தலை குப்புறக் கவிழும் அளவுக்கு. படகுக்குள்ளிருந்த தண்ணீர் மொத்தமும் வெளியே கொட்டிவிட்டது.

"சபாஷ்!" என்று கூவினான் ஜோன்ஸ். "பட்டாம்பூச்சி! உண்மையிலேயே நீ எக்ஸ்பர்ட்! அத்தனை தண்ணீரையும் ஒரே மூச்சில் காலி பண்ணிவிட்டாயே!"

"எப்படி அதைச் செய்வதென்று பார்த்துக் கொண்டாயல்லவா?" என்றேன் நான்.

என் அனுபவமின்மை காரணமாகப் படகைக் கவிழ்த்து, மொத்தப் பேரும் கடலில் விழும்படி பண்ணவிருந்தேன். அது மட்டும் அவனுக்குத் தெரியுமானால்! இனிமேல் அலைகளுக்கு எதிராகப் படகைச் செலுத்துவதில்லை: எந்தத் திசையில் செலுத்துவது என்று கவலைப்படுவதில்லை; முடிந்த அளவுக்குப் படகைச் சீராக வைத்துக் கொண்டால் போதும் - இவ்வாறு தீர்மானித்தேன். கடலின் விருப்பப்படி படகு ஏறி இறங்கட்டும் என்று விட்டுவிட்டேன். இது ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு என்பதைக் கொஞ்ச நேரத்திலேயே உணர்ந்தேன். நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு அபாயம் இதனால் நீங்கிவிட்டது என்பதை அறிந்தேன்.

மழை நின்றது. காற்று இன்னும் சீற்றத்துடன் வீசிக்கொண்டிருந்தது. ஆனால் இப்போது எனக்கு முன்னும் பின்னும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. பின்புறம், வானம் தெளிந்திருந்தது. முன்புறம் கறுத்திருந்தது. இரண்டுக்கும் நடுவில் இருந்தோம்.

ஐந்து மணிக்கு சுமாருக்கு எல்லாம் ஓய்ந்துவிட்டது. எங்கள் மீது வெயில் அடித்தது. கடற் காற்று வழக்கம் போலாயிற்று. கடல் அடங்கிவிட்டது.

(பட்டாம்பூச்சி பறக்கும்)

# துளிர் விடும் மலையகம்



துளிர்: 13

**கொள்ளையடிக்கப்பட்டு** தீக்கிரையாக்கப்பட்டன. இதில் குடியிருந்த மக்கள் காடுகளில் தங்களை ஒளித்துக்கொண்டு, இக்காடுகளினூடாக பல கிலோமீற்றர் தூரம் நடந்து தமிழர் அதிகமாக வாழும் பிரதேசங்களுக்கு வெறுங்கையோடு வந்து சேர்ந்தனர்.அங்குள்ள மக்களிடம் சில உதவி பெற்றும், அரசாங்க உதவியினாலும் வாழ்கின்றனர். இக்கலவரத்தின் போது சில பிரதேசங்களில் பெரும் பான்மையினரை எதிர்த்துப் போராடிய நிலைமையும் உண்டு. ஆனால் தற்போது நிலையில் அதிகமாக இவ் இனப்பாகுபாடின்றி வாழ்ந்து கொண்டிருப்பது மிக நன்மையானதும் விரும்பப்படக் கூடியதுமாகும். இதே போல எல்லா இடங்களிலும் நடைபெற்றால் , சமத்துவம் இறைமைகள் மென்மேலும் வளர்ந்தோங்க வழிவகுக்கும்.



### மலையகமும் எதிர்காலமும்

எண்ணங்களுக்கேற்ப மனிதன் வளருகின்றான். ஒரு நாட்டில் நிலவும் எண்ணங்களுக்கேற்ப ஒரு சமுதாயம் மலருகிறது. "சிக்கல்கள் வரும்போது ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்கின்றான் என்பது அவன் குணங்களுக்கு எடுத்துக்காட்டு, அவன் வளர்க்கப்பட்ட, வளர்ந்த விதத்தை தெரிவிக்கின்றது என மனோதத்துவ நிபுணர் கிராய்டின் வரலாற்றை எழுதிய எர்னெட்ஸ்ட் ஜோன் கூறுகிறார். மனித வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. அச்சம்பவங்களில் நாம் எப்படி நடந்துகொள்கின்றோம் என்பதிலே நமது குணங்கள் உருவாகின்றன. இது எமக்கு அனுபவப் பூர்வமாகத் தெரிவித்த ஒன்றாகும். இவ்வித எதிர்பார்ப்பில் மலையகத்தின் எதிர்காலம், எவ்விதமாக அமையக்கூடிய வாய்ப்புண்டு என்பதை அறிவது பயனுள்ளதாயிருக்கும். மலையகத்தில் இன்று பல இளைஞரும்,யுவதிகளும் வேலையற்ற நிலையில் குடும்பத்திற்கு சுமையாக வாழ்கின்றனர். சிலர் நகரப்புறங்களிலும், கொழும்பிலும், இன்னும் பல பகுதிகளிலும் வேலை செய்கின்றனர். அடையாள அட்டை இல்லாததினாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் காரணமாகவும் இவர்கள் காவல் அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டு, சில வேளைகளில் அடிக்கப்பட்டு, இறுதியில் சிறையினுள் அடைக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் பலவிதமான தேடுதல் வேட்டைகள் மூலமாகவும் . எவ்விதமான காரணமுமின்றி இம்சிக்கப்பட்டுள்ளனர். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களது சொந்த விடயங்களுக்காக செல்லும் பொழுது, திடீர் பரிசோதனைகள் பொலிசாரால் நடத்தப்படும் வேளைகளிலும் சந்தேகத்தின் பேரிலும் பிடிக்கப்பட்டனர். சிலவேளைகளில் விசாரணையின் பின் வெளிவருவதுண்டு. இதன் காரணமாக இவர்களது உறவினர்கள் பலவித கஷ்டங்களுக்குள் அகப்பட்டு விடுவிக்க முடியாமல் அல்லற்படுவதுமுண்டு.

இலங்கையில் மற்ற மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் பெறமுடியாத நிலையினிலேயே தொழிலாளர்கள் உள்ளனர். ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கை நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அடிப்படை உழைப்பைத் தரும் இத தென்னிந்திய மக்கள் அடிப்படை வசதிகளை இழந்தே வாழ்கின்றனர். கல்வி மட்டத்திலும் பின்தங்கிய நிலைமையில் உள்ளனர். மலையகத்திற்கு 50% என ஒதுக்கப்பட்ட சிறிபாத ஆசிரிய கல்லூரியிலும் பெரும்பான்மையினரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு சிலர் புல்லுருவிகளாக உள்ளனர். இப்படியாக எல்லாத் துறைகளிலும், வாழ்க்கையிலும் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், பல நூறாயிர இளைஞர், யுவதிகள் மனநிலை பாதிக்கப்படுகின்றது.

"செயல், செயல் தூண்டும் மறுசெயல்" (Action and reaction) என்பதுபோல, இச்செயல்கள் இம்மக்களை இழிநிலைக்கு தூண்டுமல்லவா? இலங்கை சரித்திரத்தை ஒரு கணம் நோக்கும்போது , கடந்த இரு தசாப்தங்களில் இரு இயக்கங்களான,
1. மக்கள் விடுதலை முன்னனி
2. தமிழீழ விடுதலைப் புலிகள்
உருவாகின. அரசியல் பொருளாதார, இன பாகுபாடு என்ற ரீதியில் பாதிக்கப்பட்டதன் விளைவாக இவ்வியக்கங்கள் தோன்றின என வரலாறு கூறுகின்றது. எனவே இவ்வித நிலைமைக்கு மலையகம் மாறக்கூடிய வாய்ப்புண்டு என கூறக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டென மேற்கூறப்பட்டுள்ளது. ஆதலால் மனோ ரீதியாகப் பாதிக்கப்படும் நிலையை மலைகத்திலிருந்து அகற்றி, எதிர்கால சுபிட்சத்திற்கு அன்புக்கரம் நீட்டி அழைத்துச் செல்லப்பட வேண்டும்.

### மலையகமும் – தளிர் கொய்யும் மகளிரும்

இலங்கையை விளைநிலமாக்க கொண்டுவரப்பட்ட காலம் முதல் இன்று வரை, மனதை நெகிழ வைப்பதோடு கண்ணீர் சிந்த வைக்கும் மலையக மக்களின் வாழ்க்கையினை - பரவலாக இலை மறை காயாகத் தென்படும் அடிமை நிலையினை, முதலாம் அத்தியாயத்தில் அலசிப் பார்த்தாகி விட்டது. அவர்கள் அனுபவித்த வேம்பெனும் துயர்கள் கொஞ்ச நஞ்சமல்ல, கொடுமையிலும் மிகக் கொடுமை. அத்தனையையும்

ஸ்ரீ முகன்

பொறுமையாய் தாங்கிக் கொண்டு, தேகத்திற்கு சுகம் ஏதும் காணாமல், எவ்வித சலிப்புமின்றி நாட்டை களனியாக்கி, விளை நிலமற்ற மண்ணை பொன் விளையும் பூமியாக்கி நாட்டைச் செல்வம் செழிக்கும் மரகதத் தீவாக மிளிரச் செய்துள்ளனர்.

இவர்களில் அடிதண்டம் பிடிதண்டமாய் அடிமையிலும் அடிமையாக, தேயிலை மலையும் லயமுமாக, முடக்கி கசக்கி பிழியப்பட்ட, கன்னியரின் கண்ணீர்க் காவியங்கள் சுருக்கமாக எழுத்தளவில் இரண்டாவது அத்தியாயமாக தளிர் கொய்யும் மகளிர் மலராக வெளிவருகிறது.

(துளிர்க்கும்)

சிரிப்பு 35


கோல்ட் ரஷ்
படக், கதை

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்



**விரைவிலேயே** அவள் அழகிலும், சரஸ சல்லாபங்களிலும் சொக்கிய சாப்ளின், லீட்டாவைத் தன் அடுத்த படத்திலும் நடிக்க வைக்க ஒப்பந்தம் செய்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்து, அங்கிருந்து வாயிலும் விழுந்தது என்று துள்ளிக் குதித்தாள் தாய். சாப்ளின்தான் லோலிட்டாவின் பெயரை 'லீட்டா கிரே' என்று மாற்றக் காரணமாக இருந்தவர். அவளைத் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் உடன் அழைத்துச் சென்றார். இவர்களைப் பற்றிய கிசுகிசுக்கள் வானைத் தொட்டு முத்தமிடத் தொடங்கின. இருவரும் தம்பதிகளாகும் நேரம் வெகுதூரத்தில் இல்லை என்ற பேச்சும் நாடெங்கும் அடிபட்டது.

ஒருநாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புதுக் காதலியை அழைத்துக் கொண்டு அமெரிக்காவின் அருகிலிருக்கும் நாடான "மெக்ஸிக்கோ" (Mexico)வில் ஒரு கிராமத்திற்குச் சென்றார்கள். அடுத்த படத்திற்குத் தேவையான இடங்களைப் பார்க்கப்



போவதாக நண்பர்களிடம் சொல்லி வைத்தார். ஆனால் காதலியோடு போனதை எப்படியோ தெரிந்து கொண்ட லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பத்திரிகையாளர்கள், திருவிழா கூட்டம் போல அங்கு வந்து சேர்ந்தார்கள். அந்த ஊரில் இருவரும் தம்பதியர் ஆனார்கள். 'லீட்டா கிரே' சாப்ளினின் இரண்டாவது மனைவி ஆனாள். "உலகமே என் உள்ளங்கையில்" என்று கொக்கரித்தாள் லீட்டாவின் தாய்!

புதுமண வாழ்க்கையைப் பொலிவுடன் நடத்த ஹாலிவூட்டின் அருகிலுள்ள பெவர்லிஹில்ஸில் ஒரு பெரிய பங்களாவை ஏற்பாடு செய்தார் சாப்ளின். அதில் லீட்டாவுடன் அவளுடைய தாய், பாட்டி என்று ஒரு கூட்டமே குடியேறியது. இது சாப்ளின் எதிர்பார்க்காதது!


லீட்டாவிற்கு வீட்டு வேலைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. பாலைக் காய்ச்சுவது கூட அவளுக்குத் தெரியாத பல விஷயங்களில் ஒன்று. ஆகவே வேலைக்காரிகள் பட்டாளத்தையே அமைத்துக் கொண்டாள். இதைப் பார்த்துத் திடுக்கிட்டார் சாப்ளின். அவர் பிரம்மச்சாரியாக வசதியோடு வாழும் பொழுதும் பல நாட்கள் அவரே சமையல் செய்து சாப்பிடுவார். அப்படிப்பட்டவருக்குப் புது வீட்டில் நடப்பதைக் கண்டவுடன் அதிர்ச்சி. இது போதாதென்று பொழுதைப் போக்கத் தன்னுடன் வேலை தேடி அலைந்த துணை நடிகைகளை நாள்தோறும் வீட்டில் சேர்த்துக் கொண்டு கொட்டமடித்து வந்தாள்.

வீட்டில் தங்கப் பிடிக்காமல், வேலையில் தன்னை முழுமையாக லயித்துக் கொள்ள அடுத்த படத்தைத் தொடங்கினார். அதில் கதாநாயகி லீட்டா. படப்பிடிப்பும் நடந்தது. அப்பொழுதுதான் தன் புது மனைவிக்கு நடிக்கவே தெரியாது என்ற உண்மை சாப்ளினுக்குப் புரிய வந்தது. எடுத்த காட்சிகளெல்லாம் மிகவும் மட்டமாக இருந்தன. லீட்டாவைத் தூக்கிவிட்டு வேறு ஒரு நடிகையைப் போட்டு எடுத்தால் தான் தப்ப முடியும் என்பது அவருக்கு வெட்டவெளிச்சமாகவே புரிந்தது. ஆனால் அவளைப் படத்திலிருந்து எப்படித் தூக்குவது? மனைவி என்பது ஒரு புறம். மற்றொரு புறம் சாப்ளின் அப்படி ஏதாவது செய்துவிடுவாரோ என்ற எண்ணத்தில் அவரை ராட்சஸப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கும் மாமியார். அவளுக்குப் பக்கபலமாகப் பாட்டி. இந்த நேரத்தில் சாப்ளினுக்கு உதவ விதி விளையாடியது.

லீட்டா கர்ப்பவதியானாள்!

படத்திலிருந்து மனைவியைத் தூக்குவதற்குச் சரியான ஒரு காரணம் கிடைத்து விட்டதே என்று சாப்ளின் தனக்குள்ளே சந்தோஷப்பட்டுக் கொண்டார். லீட்டாவின் தாயும், பாட்டியும் தலையில் இடி விழுந்தது போல் திடுக்கிட்டார்கள். இரகசியமாக லீட்டாவின் கர்ப்பத்தைக் கலைத்து விட முடியுமா என்று கூட எண்ணினார்கள். அப்படி ஒரு தாய் அவள்! அந்நாளில் கர்ப்பச்சிதைவு செய்வதென்பது சட்டவிரோதமானது. இரகசியமாகச் செய்வதும் அவ்வளவு சுலபமல்ல. அதிலும் கர்ப்பவதி சாப்ளினின் மனைவி என்பது வேறு.

இந்த இரகசிய யோசனையைப் பற்றியெல்லாம் சாப்ளினுக்கு ஒன்றுமே தெரியாது. தன் மடியில் விழுந்த வரப்பிரசாதத்தை மையமாக வைத்து லீட்டாவைப் படத்திலிருந்து நீக்கிவிட்டார் சாப்ளின். தாயாகப் போகும் சந்தோஷத்தில் இளம் பெண் லீட்டாவும் சம்மதித்துவிட்டாள்.



புது நடிகையைத் தேடத் தொடங்கினார் சாப்ளின். லீட்டாவின் தாய், பாட்டி இவர்களுடைய மனப்பான்மையைப் பற்றி சாப்ளினுக்கு நன்றாகவே தெரியும். வேறு ஏதாவது தகராறு செய்வார்கள் என்று முன்ஜாக்கிரதையாக லீட்டாவை வைத்துப் படமாக்கிய காட்சிகளை எல்லாம் இரகசியமாகக் கொளுத்திவிட்டார் சாப்ளின். இது பலர் அறியாத உண்மை. மீண்டும் படத்தைத் தயாரிக்க முயற்சிகளைத் தொடங்கினார். இந்தப்படம் 'தி கிட்' படத்தைப் போலவே வசூலிலும், புகழிலும் எல்லா வகைகளிலுமே வரலாறு படைத்தது. அதுதான் 'தி கோல்டு ரஷ்'.

'தி கோல்ட் ரஷ்' படத்தை ஒரு புதுவகையான படமாக உருவாக்கத் தொடங்கினார் சாப்ளின். அமெரிக்காவில் பத்தொன்பதாவது



நூற்றாண்டின் முடிவில், நடந்த ஒரு சரித்திரம் படைத்த நிகழ்ச்சியை மையமாக வைத்து எழுதத் தொடங்கினார். 1898 இல் அலாஸ்கா என்ற பனி நிறைந்த பிரதேசம் (இன்று அது அமெரிக்காவின் ஒரு நாடு). இங்கு க்ளாண்டைக் என்ற இடத்தில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு எல்லாமே பனி மயம். தாங்க முடியாத குளிரும், பனிக்காற்று மழையும், இரு விபரீதமான அளவில் அடித்துக் கொண்டே இருக்கும். அங்கு மனிதர்களால் அவ்வளவு சுலபமாக வாழ முடியாது. ஆகவே யாரும் செல்வதும் இல்லை. மனித சஞ்சாரமே இல்லாத அந்தப் பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டவுடன், சில துணிச்சலான அமெரிக்கர்கள் அந்தப் பொன்னைத் தேடி நடந்தார்கள். பலர் குளிர், காற்று, உணவுப் பஞ்சம் போன்றவைகளினால் பனியிலே புதைந்து மாண்டு போனார்கள். அங்கு உணவுப் பொருள் எதுவுமே உருவாகாது. செல்பவர்கள் தேவையான பொருட்களைக் கையில் எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும்.

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

36

## ஆதிரைதேவி ராணி

**தென்னிந்தியாவில்** 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மகாராணியே ஆதிரைதேவி. தற்போது நாம் சிறுவர் கதைகளிலும் இலக்கியங்களிலும் படித்ததும் கேட்டதுமான பல பெயர்களும் ஊர்களும் இருந்த காலத்திலேயே ஆதிரை தேவியும் வாழ்ந்து வந்தாள். விஜயநகரம், நரசிம்ம மன்னன், கிருஷ்ண தேவராயன் போன்ற ஊரும் பெயர்களும் உண்மையில் தென்னிந்தியாவில் நிஜமாக உலாவிய பாத்திரங்கள். காலவோட்டத்தில் கற்பனைகளும் புனைகதைகளும் கலந்து பாத்திரப்படைப்புக்கள் உருவாகியது வேறு விடயம்.

14ஆம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரத்தை ஆண்ட மன்னன் இம்மடி நரசிம்மன் ஆவான். விஜயநகரம் என்பது பெயரில் நகரத்தினை கொண்டிருந்தாலும் தற்போதைய ஆந்திராவில் வடமேற்கே தனி அரசாட்சி நிலவிய ஓர் தேசமாகும். விவசாய விளைபொருட்களை பிரதானமான உற்பத்தியாக கொண்ட அந்நகரம் பாரத தேசத்தில் இருந்த சமஸ்தானங்களில் ஓர் சராசரி தேசமாகவே காணப்பட்டது.

விஜயநகரத்திற்கு தெற்கே இருந்த சமஸ்தானங்களுடன் ( தற்போதைய தமிழ்நாடு மற்றும் கேரளா ) எவ்வித சச்சரவும் பிரச்சினையும் இல்லாமல் இருந்து வந்தபோதும்கூட கிழக்காக இருந்த மைசூர் சமஸ்தானங்களின் ஆளுகைக்குட்பட்ட சிற்றரசுகளுடன் அடிக்கடி எல்லைச் சண்டையினை மேற்கொள்ள வேண்டிய ஓர் தவிர்க்கமுடியாத நிலையிலேயே விஜயநகரம் அப்போது விளங்கியது.

1503ஆம் ஆண்டு கிழக்கு எல்லைப்புறத்தில் நிகழ்ந்த ஓர் போரில் தனது படைகளை வழிநடத்திச் சென்ற இம்மடி நரசிம்மன் விழுப்புண் அடைந்து மரணமடைந்தார். அவ்வேளை இம்மடி நரசிம்மன் அக்கால சராசரி மன்னர்கள் போலவே இரண்டு மனைவிகளையும் பல ஆசை நாயகிகளையும் அந்தப்புரத்தில் வைத்திருந்தார்.

அவரது இரண்டு மனைவியருக்குமாக நான்கு புதல்வர்கள் அவரது வாரிசாக விளங்கினர். ஆதிரை தேவியின் மூத்த மகனின் பெயர் வீர நரசிம்மன். இம்மடி நரசிம்மனின் மரணத்தினை அடுத்து அரச வாரிசாக பாரம்பரியப்படி வீர நரசிம்மன் மன்னராக முடிசூடினான். அவனுக்கும் ஆதிரைதேவிக்கும் பிறந்த மகனே திருமலையாவான்.

திருமலை இளம் வயதாக இருந்தபோதே சகல விதமான கெட்ட பழக்கவழக்கங்களையும் தாராளமா பழகி இருந்தான். இதற்கு முக்கிய காரணமாக விளங்கியவள் ஆதிரை தேவிதான். தனது கணவருக்கு பின் தனது மகனே அரசனாக வருவான் என்றபடியினால் அளவிற்கு மீறிய செல்லம் கொடுத்ததுடன் கெட்டபழக்கங்களையும் கண்டுகொள்ளாமல் திருமலையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாள்.

சுருக்கமாக சொல்வதானால் தனது கணவருக்கு மனைவியாக இருந்து சுதந்திரம் ஏதுவுமில்லாத மகாராணியாக வாழுவதை விடவும் எதிர்காலத்தில் மன்னராகப்போகும் தனது மகனின் தாயாராக இருந்து ஆட்சியினை ஆட்டிப்படைக்கவே அவள் பெரிதும்



ஆதிரைதேவி

விரும்பினாள். இதற்காக தனது மகனின் தீய நடத்தைகள் எதனையும் கண்டுகொள்ளாதது மட்டுமல்லாமல் அவன் விடலைப்பருவத்தில் இருந்தபோதே அந்தப்புரத்திற்கு சென்று சல்லாபிக்கவும் அவளே ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தாள்.

ஆதிரைதேவி உண்மையில் ஓர் அரச குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இயல்பாகவே சந்தேக குணம் கொண்ட ஒருத்தியாகவும் அதன்காரணமாக மிகவும் பயந்த சுபாவமுடையவளாகவும் காணப்பட்டாள். இதன்காரணமாக தான் என்னவோ பிற்காலத்தில் அவளே கொடூரமானதோர் காரியத்தையும் செய்யத் துணிந்தாள்.

இம்மடி நரசிம்மன் மரணமடைந்தது முதல் ஏறக்குறைய 6 ஆண்டுகள் ஆட்சிசெய்த வீரநரசிம்மன் 1509ஆம் ஆண்டில் இனம்தெரியாத ஓர் கொடூரமான நோயினால் பீடிக்கப்பட்டான். தேசத்தில் இருந்த பெரிய பெரிய வைத்தியர்கள் எல்லோரும் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் நோய் மேலும் மேலும் முற்றியதே தவிர குணமாகக்கூடிய எந்தவொரு அறிகுறியும் ஏற்படவில்லை.

இந்நிலையில்தான் மன்னர் நிச்சயமாக குணமாக மாட்டார் என்ற நிலையில் நாட்டு மக்கள் அனைவரினது எதிர்பார்ப்பும் தம்மை அடுத்ததாக ஆளப்போகும் மன்னரின் மீதே திரும்பியது. ஏனெனில் வீரநரசிம்மனின் மகன் திருமலை பராயவயதை அடையாமல் ஊதாரித்தனமாக திரிந்தபோது மன்னரின் தம்பியாராகிய அதாவது இம்மடி நரசிம்மனின் இரண்டாவது ராணியின் மகனாகிய கிருஷ்ண தேவராயரோ நல்லொழுக்கத்திலும் அறிவு ஆற்றலிலும் சிறந்து விளங்கியதுடன் அரண்மனை நிர்வாக விடயங்களிலும் சிறப்பாக செயலாற்றினான். இதன்காரணமாக தேசத்து மக்களும் குறிப்பாக பிரதான அமைச்சராகிய திம்மரசுவும் கிருஷ்ண தேவராயரே அடுத்த மன்னராக வரவேண்டுமென விரும்பினர். இவ்விடயம் ஆதிரை ராணியின் காதுகளுக்கு எட்டியபோது அவளால் தனது மகனைத்தவிர வேறொருவர் மன்னராக வருவதை ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை. ஆனால் கிருஷ்ணதேவராயரே பதவி ஏற்க வேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்து வந்தது.

இதனை அடுத்து ஆதிரை ராணி கொடூர சதித்திட்டம் ஒன்றை தீட்டினாள். அதன்படி படுத்தபடுக்கையாக இருந்த மன்னரின் ராஜ முத்திரையை பயன்படுத்தி தனது முதல் எதிரியாகிய கருதிய கிருஷ்ணதேவராயரின் கண்களை பறித்துவிடும்படி மன்னரின் பேரால் கட்டளை இட்டாள்.

இந்தக் கட்டளையைக்கண்டு முதலில் திடுக்கிட்ட அமைச்சர் திம்மரசு பின்னர் சுதாகரித்துக்கொண்டு கிருஷ்ணதேவராயரை கைது செய்து கொண்டு போவதாக நாடகமாடி ஓர் ஆட்டுக்குட்டியின் கண்களைப்பிடுங்கிக் காட்டி அவனை குருடாக்கி விட்டதாக போக்குக்காட்டினார். அந்நேரம் வீரநரசிம்மனும் மரணமடைந்தார்.

ஆயினும் இந்நிலை வெகுநாட்கள் நீடிக்கவில்லை. திருமலைக்கு எதிராகவும் கிருஷ்ண தேவராயருக்கு ஆதரவாகவும் மக்கள் வெகுண்டு எழவே அமைச்சர் திம்மரசு தனது வீட்டில் ஒளித்து வைத்திருந்த கிருஷ்ணதேவராயரை வெளியே கொண்டு வந்து உண்மையினைக்கூறி அவனை முடிசூடவைத்தார்.

இவ்வளவு விடயங்கள் நடந்தபோதும் பதவியேற்ற கிருஷ்ணதேவராயர் தனது சித்தியாகிய ஆதிரைதேவியை எவ்விதத்திலும் பழிவாங்காமல் அரண்மனை அந்தப்புரத்திலேயே அவளை கௌரவமாக கவனித்து அவளது இறுதிக்காலம் வரை பராமரித்தான்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## அமிர்தலிங்கத்தின் கொலை ஒரு சதியா?

**அமிர்தலிங்கத்தை** ஏன் புலிகள் கொன்றார்களென்பது குறித்து, அக்காலத்தில் பல்வேறு விளக்கங்களும் வியாக்கியானங்களும் கூறப்பட்டன. 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முறியடிப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இணைந்து புலிகள் செயற்பட்டு வந்த காலம் அது. புலிகளுக்கு ஆயுதங்களும் கோடிக்கணக்கில் பணமும் கொடுத்து இந்தியப் படைக்கு எதிராக யுத்தம் புரிய உதவியவர் ஜனாதிபதி பிரேமதாசா. இருந்தபோதும், இந்தியப் படை இலங்கையின் வடக்கு, கிழக்கிலிருந்து புலிகளை ஓரங்கட்டிய நேரம் அது. இத்தனைக்கும் மத்தியில் இந்திய இராஜதந்திரிகள் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசினர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்துடனும் பேசினர். ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. அமிர்தலிங்கம் கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் கூட, இலங்கை வந்திருந்த இந்திய விசேட இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அமிர்தலிங்கத்தை முதன்மைப்படுத்தி, வடக்கு - கிழக்கில் அதிகாரத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒப்படைக்க இந்தியா முயற்சிகள் எடுத்து வருவதாக அப்போது பரவலாகப் பேச்சடிப்பட்டது.






இந்தியா சென்றிருந்த போது ஜனபதி ஆர்.வெங்கட்ராமனுடன் அமிர்தலிங்கம்

1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி காலை கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் இந்திய இராஜதந்திரிகளைச் சந்திக்கச் சென்ற அமிர்தலிங்கம், சந்திப்பு முடிந்த பின்னர் காரில் வந்து ஏறியபோது, என்ன நடந்தது? என்று அவரது மகன் டாக்டர் பகீரதன் கேட்டாராம். அதற்கு அமிர்தலிங்கம் பின்வருமாறு பதில் கொடுத்தாரென்று கூறப்பட்டது." எங்கடை சனங்களின் பிரச்சினை தீரப் போகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியை முதன் நிலைப்படுத்தி, இந்திய அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தீர்வை ஏற்படுத்தப் போகிறது. நடக்கப்போறதைப் பார் மோனை என்று அமிர்தலிங்கம் கூறியதாக சி.புஸ்பராஜா எழுதிய ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யும் முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, தனது நாட்குறிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தாரென்று

**(அரசியல் தொடர்)**

கூறப்படுகிறது. "1987 ஜூலை 12இல் இந்தியாவின் சிறப்புத் தூதுவர், கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசினார். அமிர் அண்ணனுடனும் பேசினார். அன்று மாலை அமிர் அண்ணரும் நானும் பௌத்தாலோக மாவத்தை வீட்டிலிருக்கிறோம். மீண்டும் அவர் முகத்தில் ஓர் நம்பிக்கை ஒளி தெரிந்தது. இந்திய இராஜதந்திரி - பிரேமதாசா பேச்சுவார்த்தை முறிந்து போய்விட்டது. இனி என்ன நடக்கப் போகிறதென்று சொல்ல முடியாது. ஆனால் தமிழ் மக்கள் வாழ்வில் ஒரு விடிவு ஏற்படுமென்ற அறிகுறி தென்படுகிறது." இவ்வாறு மாவை சேனாதிராஜாவின் குறிப்பில் காணப்பட்டதாகவும் சி.புஷ்பராஜா ஈழப் போராட்டத்தில் 'எனது சாட்சியம்' என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார்.

அக் காலகட்டத்தில் ஒருதலைபட்சமான தமிழீழம் பிரகடனப்படுத்தப்படலாமென்றும் இதற்கு இந்தியா உதவி வழங்கலாமென்றும் பேச்சடிப்பட்டது. ஒருவேளை, இந்தச் சங்கதி கூட பிரேமதாசாவுக்கும் புலிகளுக்கும் பிரச்சினையாக அமைந்திருக்கலாமென்றும் பேச்சடிப்பட்டது. இந்த இரு தரப்பினரின் கூட்டுச் சதியே அமிர்தலிங்கம் படுகொலையென்றும் அக் காலத்தில் கதைகள் உலாவின. இவற்றில் எந்தளவுக்கு உண்மைகள் இருக்கின்றனவோ இல்லையோ, ஒன்று மட்டும் நிச்சயம். அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு வருடம் முன்னதாகவே அவருக்கு அப்போதைய புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா மரண அச்சுறுத்தல் விடுத்திருந்தார். அமிர்தலிங்கம் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டுமென்றும் இல்லையேல் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் மாத்தையா எச்சரித்திருந்தார்.பிரபாகரனின் அனுமதியின்றி இந்த எச்சரிக்கையை மாத்தையாவால் விடுத்திருக்க முடியாது.

புலிகள் தமது பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை யோகேஸ்வரன் மூலமாகவே மேற்கொண்டனர். அப்போதே புலிகள் பற்றி சிவசிதம்பரம் எச்சரிக்கை செய்திருக்கிறார். "இந்த யோகேஸ்வரனிடம் எத்தனை தடவை சொல்கிறது. இவர்களை நம்பாதேயென்று. எல்லாம் போய்விட்டது'' என்று பின்னர் சிவசிதம்பரம் கூறினாரென்றும் கூறப்படுகிறது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி விளக்கையில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் சொன்னார் : "அவர் (அமிர்தலிங்கம்) மேல் மாடிக்குப் போய்ச் சிறிது நேரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டன. வீட்டுக்கு வெளியே யாரோ சுடுகின்றனர் என நினைத்து வாசற் பக்கம் ஓடினேன். அப்போது வாசலில் நிற்க வேண்டிய இவர்களது மெய்ப் பாதுகாவலர்கள், மேலே நின்று யன்னல் வழியாகச் சுடுவதைப் பார்த்தேன். ஏதோ ஆபத்து நடந்து விட்டது என்பதை உணர்ந்தேன். ஆனால் என்ன நடக்கிறது என்று தெரியாமல் மேலே ஓடினேன். உள்ளே சென்று பார்த்தபொழுது, யோகே ஸ்வரன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவரது நெஞ்சு

> **புலிகள் தமது பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை யோகேஸ்வரன் மூலமாகவே மேற்கொண்டனர். அப்போதே புலிகள் பற்றி சிவசிதம்பரம் எச்சரிக்கை செய்திருக்கிறார். "இந்த யோகே ஸ்வரனிடம் எத்தனை தடவை சொல்கிறது. இவர்களை நம்பாதேயென்று. எல்லாம் போய்விட்டது'' என்று பின்னர் சிவசிதம்பரம் கூறினாரென்றும் கூறப்படுகிறது.**

துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடை போடப்பட்டிருந்தது. பதற்றத்தில் என்ன செய்வது எனத் தெரியாது கீழே ஓடிப்போய்த் தலையணையை எடுத்து வந்து யோகேஸ்வரனின் தலையை அதில் வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தேன். அவர் (அமிர்தலிங்கம்) இருந்த இடத்தில் இருந்து தலையைத் தொங்க விட்டபடியே ஆடாமல் அசையாமல் இருந்தார். பாய்ந்து போய் அவரது தலையைத் தூக்கினேன். வாய்க்குள்ளிலிருந்து இரத்தம் கொட்டியது. சுவர் மூலையில் சிவா அண்ணா (சிவசிதம்பரம்) சூட்டுக் காயங்களுடன் கிடந்தார் என்று திருமதி அமிர்தலிங்கம் கூறினார்.

சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே தந்தை செல்வாவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டவர் அமிர்தலிங்கம். 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். 1956ஆம் ஆண்டு மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவரை எதிர்ப்புத் போட்டியிட்ட ஆ.தியாகராசாவிடவும் தோல்வி கண்டார். 1970ஆம் ஆண்டுவரை அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பி. யாகவிருந்தார். சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம் ஆகியவற்றில் அமிர்தலிங்கத்தின் பங்களிப்பு மகத்தானது.

(தொடர்ந்து வடியும்....)




குமாரைக் கொன்று விட்டு நாக மாணிக்கத்தை எடுத்து வரும்படி கோவிந்தனை ஏவி விடுகிறான் ஜயந்தன். அதற்கிணங்க கோவிந்தன் குமாரை நெருங்கித் தாக்க முற்படும் போது ஜெயலட்சுமியின் உடலில் பிரவேசித்திருந்த ஸ்ரீதேவி அங்கு திடீரென்று தோன்றி கோவிந்தனை பந்தாடுகிறாள்.

இனி............

**"அது** ஒண்ணுமில்லை ஒரு பெருச்சாளி வந்து இங்க இருக்கற சாமானையெல்லாம் உருட்டிக்கிட்டிருந்தது. அதைத் துரத்தி, ஒரே போடாப் போட்டு வெளியில வீசிட்டேன். அதான்..." என்றார் குமார்.

காவல்காரர், திருப்தியோடு திரும்பிப் போனார். அவர் போனதும் குமார் மெதுவாக, "ஜெயலட்சுமி, ஜெயலட்சுமி!" என்று குரல் கொடுத்தார். கொஞ்ச நேரம் பொறுத்து மறுபடியும் அழைத்தார். சட்டென்று அங்கே ஜெயலட்சுமியின் வடிவம் வெளிப்பட்டது. "நான் கூப்பிட்டேனே, கவனிக்கலையா?" என்றார் குமார்.

"கவனிச்சேன். ஆனா என் பேரு ஜெயலட்சுமி இல்ல; ஸ்ரீதேவி" என்றாள் அவள்.

இந்த முறை அவளுடைய பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்தார் குமார். "வா போகலாம்" என்றார்.

"எங்கே?" என்றாள் ஸ்ரீதேவி.

"கிராமத்துக்குத்தான்... ரொம்ப நாளைக்கு இப்படி அலைஞ்சுக்கிட்டிருக்க முடியாது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். உன்னோட இலட்சியத்த நிறைவேற்றத்தான் ராப்பகலா போராடறேன். சந்துநாயருக்கு சமாதி வைக்காம உன் ஆத்மாவுக்கும் நிம்மதி இல்ல. அவங்க மந்திரவாதம் பண்றாங்களேன்னு, நானும் அதே முறையில் எதிர்க்க நினைக்கறதனாலே கதைதான் வளர்ந்துகிட்டுப் போகுது. இதுக்கு ஒரு முடிவு கட்டிடலாம். வா போகலாம்!. உடனே வா, அந்த சந்துநாயரையும், ஜயந்தனையும் வெட்டிச் சாய்ச்சுட்டு ஜெயிலுக்குப் போறதா இருந்தாலும் பரவாயில்லை. உனக்காக எந்தத் தியாகத்துக்கும் தயாரா இருக்கேன். வா!" என்று ஆவேசமாகப் பேசினார் குமார்.

அங்கே தென்னந்தோப்பில் கோபத்தின் உச்சியில் இருந்தான் ஜயந்தான். ஆத்திரத்தில் அவனுக்கு வார்த்தைகள் சரிவர

**எழுதுவது**
**சிவன்**

வெளியாகவில்லை. கோவிந்தனை உக்கிரமாக முறைத்தான். "போடா போ! ஒவ்வொரு தடவையும் தோத்துட்டு வர்றதுக்கா, உனக்கு ஒரு உடம்பு கிடைக்க ஏற்பாடு பண்ணினேன்? நீ என்ன செய்வியோ தெரியாது. உனக்குக் கடைசியா ஒரு சந்தர்ப்பம் தரேன். அந்தக் குமாரை அழிச்சு நாகமாணிக்கத்த எடுத்துக்கிட்டு வா. இல்லைன்னா உன்னோட உடம்பையே எரிச்சுப் பொசுக்கிடுவேன். ஏற்கனவே அலைஞ்சிட்டிருக்கிற பிரபாகரனோட ஆத்மா உன்னை ஒரு வழி பண்ணிடும். அங்கயும் நிம்மதியில்லாம் நீ திரிய வேண்டியதுதான். இங்கிருந்து ஓடுடா!" என்று கத்தினார்.

கோவிந்தன் அமைதியாகத் தோப்பை விட்டு வெளியேறினான். அவன் கண்களில், 'வாழ்வா சாவா' என்ற பிரச்சனை பயங்கரமாகத் துருத்திக் கொண்டு நின்றது.

கிட்டத்தட்ட, இரண்டு தரப்பிலுமே, 'வாழ்வா? சாவா? என்று பார்த்துவிடலாம்' என முடிவு கட்டிய ராத்திரியின் மறுநாள்.

கிராமத்துக்கு ஜெயலட்சுமியோடு வந்து சேர்ந்திருந்தார் குமார். ஜெயாவின் உடலைவிட்டு ஸ்ரீதேவிக்குட்டி இன்னும் அகலவில்லை. எதிரிகளைப் பற்றிய தீவிர சிந்தனையில் இருந்தார் குமார்.

"என்ன யோசனை



திருமேனி?" என்றாள் ஸ்ரீதேவி.

"ஒண்ணுமில்லை. அவங்க கதையை எப்படி முடிக்கிறது? பிரபாகரனை எப்படி மீட்கறது?ன்னு தான் யோசனை பண்ணிக்கிட்டிருக்கேன்" என்றார் அவர்.

"இன்னிக்கு ராத்திரி கதை முடிஞ்சுடும்" என்று எங்கேயோ பார்த்தபடி கூறினாள் ஸ்ரீதேவி. அவள் கண்களில் இனம் புரியாத சோகம்.

அந்த ராத்திரி வந்தது. மாலை மங்கியதுமே பிரபாகரனின் உடம்பிலிருந்த கோவிந்தன் துடிப்போடு எழுந்தான். 'இன்னிக்குத்தான் கடைசி. நாளைக்குக் காலைல ஒண்ணு அவங்க இருக்கணும்: இல்ல நான் இருக்கணும்;' என்று வெறியோடு சொல்லிக் கொண்டான். இருள் கவிந்தது.

வேகமாக குமாரின் வீட்டை நோக்கி நடந்தான் அவன். அங்கே ஒரு நிமிடம் கூட சும்மா நிற்காமல் குறுக்கும், நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள் ஜெயலட்சுமியின் உடலிலிருந்த ஸ்ரீதேவி. இந்த இரவில் என்னென்னவோ விபரீதங்கள் நடக்கப் போவதாக குமாரின் உள்மனம் சொல்லியது.

'தேவதத்தன் நம்பூதிரியை அழைத்திருக்கலாமோ?' என்று ஒரு கணம் யோசித்தார்.

அதே நேரம் வெளி முற்றத்தில் ஏதோ சத்தம் கேட்டது. துணுக்குற்ற குமார், "யாரது?" என்று உரக்கக் குரலில் கத்தினார். பதிலில்லை. மறுபடியும் குரல் கொடுக்க நினைத்தவர், எதற்கும் இருக்கட்டுமென்று தற்காப்புக்காக ஆயுதத்தைத் தேடினார். அவரைத் தடுத்த ஸ்ரீதேவி, தரதரவென்று அவர் கையைப் பிடித்து வெளியே இழுத்து வந்தாள். பிறகு இருட்டிக் கிடந்த முற்றத்தைப் பார்த்துக் கத்தினாள், "ஏ கோவிந்தா! வெளில வா, ஜயந்தனோட வித்தைக் குரங்கே வெளில வா! சுயபுத்தி இல்லாத பிசாசே வா!" என்று கோபமாகக் குரல் கொடுத்தாள்.

இருட்டில் துளசி மாடத்தின் மறைவில் நின்றிருந்த கோவிந்தன் வெளியே வந்தான். அவன் மூச்சுவிடும் ஓசை, வெறிகொண்ட நாய் உறுமுவது போலிருந்தது. அவனைப் பார்த்த குமாருக்கு, ஒரு நிமிடம் பயத்தால் மயிர் கூச்செறிந்தது. ஆனால் அவருடைய கையை உடும்பு போலப் பிடித்திருந்த ஸ்ரீதேவி, கம்பீரமாக மலை போல் நின்றிருந்தாள். அவள் வெளியே வந்த கோவிந்தனைப் பார்த்து, "மறுபடி, மறுபடி உதை வாங்கி ஓடினாக்கூட உனக்குப் புத்தி வராதா? உன் ஜயந்தனும், அவனோட மந்திர சக்தியும் என்னை ஒண்ணும் பண்ணாது. பண்றதா இருந்தா இத்தனை நாள் உங்க நினைப்பு பலிச்சிருக்கணுமே! நேத்து ராத்திரியே உன்னைக் கொன்னு போட்டிருப்பேன். நீ சுமக்கற உடம்பு, இவர் நண்பர் பிரபாகரனோடதுங்கறதனால பொறுத்துப் போறேன். ஆனா என் பொறுமைக்கும் அளவு இருக்கு. நீ இருக்கற இடத்தவிட்டு ஒரு அங்குலம் நகர்ந்தாகூட, உன்னைப் பொசுக்கிடுவேன். என்னோட அனுமதியில்லாம இவர் நிழலைக்கூட உன்னால தொட முடியாது. இன்னிக்கு இந்த இடத்தவிட்டு நீ உடம்போட திரும்பிப் போறியான்னு பார்த்துடறேன். உன்னை சாம்பலாக்கி காத்துல பறக்க விட்டாத்தான் எனக்கு நிம்மதி."


(வாசனை வீசும்....)

# மனதுக்கு நிம்மதி

# மரம் தந்த அபூர்வ சக்தி!

**"ஐயோ...** என்னைக் காப்பாத்துங்க" என்று நோயாளி ஒருவன் ஆபரேஷன் தியேட்டரில் இருந்து அரக்கப்பரக்க வெளியே ஓடிவருகிறான். அவனைத் தடுத்து நிறுத்திய தலைமை டாக்டர், "என்ன சமாச்சாரம்" என்று விசாரிக்க, ஆபரேஷன் தியேட்டரில் நடந்ததைச் சொல்கிறான்:

"இது சின்ன ஆபரேஷன்தான்...



பயப்படாதீங்க" என்று நர்ஸ் சொன்னால் எப்படி பயப்படாமல் இருப்பது?"

தலைமை டாக்டருக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு, "இது சின்ன ஆபரேஷன்தான்... பயப்படாதீங்க" என்று நர்ஸ் உன்னைப் பார்த்துச் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது?" என்று தலைமை டாக்டர் இவனைப் பார்த்துக் கேட்க, அந்த நோயாளி சொன்னானாம் :

"இது சின்ன ஆபரேஷன்தான்... பயப்படாதீங்க" என்று நர்ஸ் சொன்னது என்னைப் பார்த்து அல்ல. அடுத்த அறையில் எனக்கு ஆபரேஷன் செய்யவிருந்த டாக்டரிடம்!"

சரி, கதை ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது விஷயத்துக்கு வருவோம். "என்னைவிடக் குறைவான கல்வித் தகுதி உடைய என் நண்பர்கள் எல்லாம் என்னைவிட அதிகம் சம்பாதிக்கிறார்கள். கார், சொந்த வீடு என்று சௌகரியமாக வாழ்கிறார்கள். ஆனால், நான் மட்டும் ஏன் மாதம் எப்போது பிறக்கும் என்று ஒவ்வொரு நாளும் கலண்டரைப் பார்த்துக் காலம் தள்ளி வருகிறேன், ஆண்டவனுக்கு ஏன் இந்தப் பாரபட்சம்?" - சமீபத்தில் என்னைச் சந்தித்த அரசாங்க ஊழியர் ஒருவர் இப்படி வருத்தப்பட்டார்.

அவருக்கு நான் சொன்ன ஒரு குட்டிக்கதையை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

அவன் ஓர் ஊழியன். அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்படும் குணம் அவனுக்கு. யாரைப் பார்த்தாலும், "சே... அவர்களைப் போல நாம் இல்லையே!" என்கிற தாழ்வு மனப்பான்மை அவனுக்குள் தலையெடுக்கும்.

"நாய்களுக்கு மனிதர்களை விடக் கேட்கும் சக்தி அதிகம்" என்று பேச்சு வாக்கில் யாரோ ஒருவர் அவனிடம் சொல்ல... "அட நாய்களைவிட நான் கேவலமாகிவிட்டேனா..." என்று அவனுக்குள் புதிதாக ஒரு கவலை முளைத்தது. சமயம் கிடைக்கும் போதெல்லாம் தனக்குள் புலம்பித் தீர்ப்பான்.

ஒரு நாள் அவன் மந்திரசக்தி கொண்ட ஒரு மரத்தின் கீழ் நின்று கொண்டு "தனக்கு மட்டும் நாய்கள் மாதிரி கேட்கும் சக்தி இருந்தால்" என்று நினைக்க... "இந்தக் கணத்தில் இருந்தே நாய்களுக்கு இருப்பது மாதிரி உனக்குக் கேட்கும் சக்தி உண்டாவதாக" என்று மரம் அவனுக்கு வரம் கொடுத்தது.

மரம் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போன அவன் அதோடு நிற்காமல், "நாய்களைவிட அதிகமான கேட்கும் சக்தி எனக்கு வேண்டும்" என்று அந்த மரத்திடம் கேட்க, "அப்படியே ஆகட்டும்!" என்று அந்த விருட்சம் சொன்னது.

அடுத்த நாள் அவன் சந்தோஷமாக ஆபீஸுக்குள் போனான். தன் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த டைப்பிஸ்ட் தன் காதலனுடன் டெலிபோனில் மெல்லிய குரலில் கொஞ்சிக் குலாவிப் பேசுவது இவனுக்குத் தெளிவாகக் கேட்டது. இந்தப் பேச்சைக் கேட்டு சட்டென, "சீ" என்று முகம் சுளித்து வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அந்தப் பக்கமும் அவனை விடவில்லை.

இவன் இருக்கையில் இருந்து பல அடி தூரம் தள்ளி இருக்கும் கம்பனி டைரக்டர் தன் அறைக்குள் இவனைப் பற்றி இன்னொருவரிடம் பேசுவது இவனுக்குத் தெளிவாகக் கேட்டது. கவனிக்க ஆரம்பித்தான்.


"அவன் ஒண்ணுத்துக்கும் பிரயோஜனம் இல்லை. எப்பப் பார்த்தாலும் மோட்டுவளையைப் பார்த்துட்டு உட்கார்ந்திருக்கான். "இங்கிலீஷ்ல ஒரு லெட்டர் எழுதுன்னா அதுல எக்கச்சக்கத் தப்பு!"

இந்த உரையாடலை மேற்கொண்டு அவனால் கேட்க முடியவில்லை. லீவு எழுதி வைத்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

அன்று இரவு அவன் தூங்க முயற்சி செய்கிறான். அப்போது ஏழெட்டு வீதிகளுக்கு அப்பால் குல்பி ஐஸ் விற்பவன் ஒலிக்கும் மணி ஓசை இவனுக்குத் தெளிவாகக் கேட்கிறது. பத்து வீடுகள் தள்ளியிருக்கும் ஒரு வீட்டில் யாரோ அலமாரிக் கதவைத் திறக்க... அதுவும் கேட்கிறது. பல அடிகள் தள்ளியிருக்கும் மெயின் ரோட்டில் பொலிஸ் ஜீப் ரோந்து போகும் சத்தம் கேட்கிறது. பக்கத்து ரூமில் இருக்கும் தன் தங்கை இவனைப் பற்றி தன் கணவனிடம், "என் அண்ணன் எல்லாம் சுத்த வேஸ்ட்" என்று சொல்வது கேட்கிறது. "அடச்சே" என்று வாழ்க்கையை வெறுத்தவன், "இந்த மாதிரி கேட்கும் சக்தி எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று முடிவெடுத்து, அந்த நள்ளிரவு நேரத்திலேயே வரம் கொடுத்த மரத்தைத் தேடி ஓட ஆரம்பித்தானாம்.

கேட்கும் சக்தியை அதிகரித்துக் கொள்ள நினைத்த அந்த முட்டாளைப் போல நம்மில் சிலர், ஒரு நம்பர் லாட்டரி டிக்கட் மூலம் உடனடியாகப் பணக்காரனாகிவிட நினைக்கின்றார்கள்.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? லாட்டரி டிக்கெட் வாங்குவதையே பிழைப்பாகக் கொண்ட பிச்சாண்டிகள் பலர் இதுவரை லட்சாதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள். ஆனால், அதில் யாருமே லட்சாதிபதிகளாக



நிலைத்ததில்லை.

ஒரு வருட காலமோ, அல்லது இரண்டு வருட காலமோ... அதற்குள் அவர்கள் மீண்டும் ரிக்ஷா ஓட்டுவது அல்லது மூட்டை தூக்குவது என்று தங்களின் பழைய தொழிலுக்கே திரும்பியிருப்பார்கள்.

செல்வத்தை அடைவது சுலபமான காரியமல்ல. அதே மாதிரி சேர்த்த செல்வத்தை முறையாகச் செலவழிப்பதும் எளிதல்ல! திறமையாக அதைக் கையாளத் தெரிந்திருந்தால்தான் செல்வம் நம்மிடம் தங்கும்!

(தொடர்ந்து வரும்.....)

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

# உனது மழை என்னில் பெய்கிறது

**உன்னில்** விழுந்த என்
கண்கள் இன்னும்
எழுந்திருக்கவே இல்லை.
காற்றில் முத்தங்கள்
கொட்டுவேன், நீ சுவாசிப்பாய்
என்று.
உன் முகத்தை முதன்
முதலாகப் படம்
பிடித்ததிலிருந்து இன்னும் என்
மனதில் பிரதிகளாக நீ
நிரம்புகின்றாய்.
நீ வகுப்பில் மலர்வாய்ஞூ
என்னில் நறுமணம்
உண்டாகும்.
நீ தோழிகளோடு சேர்ந்து
புன்னகை உதிர்ப்பாய்ஞூ நான்
நிரம்புவேன்.
ஒரு சூரிய நேரத்தில் நீ
இனிப்புப் பகிர்ந்தாய் என்னை
விட்டு, வகுப்பில் உள்ள
அத்தனை பேர்களுக்கும். நான்
அதிர்ச்சி அடையவில்லைஞூ
நீயே என்னில் இனிப்பாக
இருந்ததனால்.
உன்னைப் பருகலாம் என்ற
தாகத்தோடுதான் கல்லூரி
நாட்கள் ஒவ்வொன்றும்
விடிந்தன; முடிந்தன.
'உன் பெயரென்ன?'
ஆரம்பத்தில் நான் இரண்டு
சொல் வினாச்செய்த போது,
நீ மௌனம் வளர்த்தாய்.
ஆனால், உன் பார்வையில்
நான் மூன்று சொல்
வாசித்தேன்.
சில சொட்டுத் தேனும்
புசித்தேன்.
'நீ ஹை ஜாம்'
பாய்வியாமே? மைதான
விழாவின் போது நீ சில
வார்த்தைகள் செய்தாய்,
உன்னில் ஒரு வருடமாக நான்
விழுந்து கிடப்பது தெரியாமல்!
நீ சோலைக்குச் சென்றபோது
உன் விழிகள் பார்த்து இப்படி
இரு பூக்களை இதுவரை
சந்திக்கவில்லையென்று பூக்கள்
சொன்னதாமே!
நாம் 'பிக்னிக்'
சென்றிருந்தபோது எந்தக்
காட்சிகளுமே என் கண்களுக்குத்
தெரியவில்லை - உன்னைத்
தவிர.
இப்படி என் உயிரால்
உன்னைச் சுற்றிச் சுற்றி
வந்தேன்.
கல்லூரி என்னைச் செய்து
வெளியே வைத்தபோது ஒரு
கலை ஆசனம் கிடைத்தது
எனக்கு.
பௌர்ணமி அந்தஸ்துப் பெற்று
பிரபலம் நான் பெற்ற போது என்
முகவரியில் கடிதங்கள்
முளைத்தன.
உனக்கான என் காதல்
செதுக்கப்பட்ட வைரமாக
வசித்தபோது...
உனது மழை என்னில் பெய்து
கொண்டிருக்கும் போது...
ஒரு கடிதம் உன்னைச்
சுமந்து வந்தது.
'நீ இந்த நிலை
அடைவதற்காகத்தான்
உனக்கான என் காதலை
மௌனத்தால் மூடிப்
பாதுகாத்தேன்' என்று இதயம்
திறந்திருந்தாய் நீ!
'நான் இந்த நிலை
அடைந்ததே உனக்காகத்தான்'
என்று என் மனம் வார்த்தைகள்
செய்தது.
இதுவரை சேமித்திருந்த உன்
ஞாபகங்கள் சுமந்து நான் வந்து
கொண்டிருக்கிறேன் என்
வாழ்க்கை நோக்கி.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. **197**க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஆர். எம். பாயிஸ், பனூஸா ஸ்டோர், பிரதான வீதி, மூதூர் - 01.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. T. வினோபிரியா, 57/A, திருவள்ளுவர் வீதி, தோணிக்கல், வவுனியா.
2. S. ஜீவா, 11 - 5/1, சென் லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை.
3. எஸ் விக்னேஸ்வரி, 22, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.
4. கே. நிரஞ்சன், 22, களுபோவிலை, தெஹிவளை.
5. M. J. பெர்னாண்டோ, 30/3, சென் லூசியாஸ் வீதி, கொழும்பு - 13.
6. தி. கவிதா, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.
7. சி. மிதுஷான், பாண்டிருப்பு - 2, கல்முனை.
8. எம். ரைசின் ரியாத், அல் - அக்ஷா கல்லூரி, கிண்ணியா.
9. கி. பத்மரூபன், பவளராஜா ஸ்ரோஸ், ஆஸ்பத்திரி சந்தி, மன்னார்.
10. பைசல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்தகமுவ, முல்லேரியாவ.

## குறுக்கெழுத்துப் போட்டி 199

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| ■ | ■ | 15 | 16 | 17 | ■ |
| 19 | 20 | ■ | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | ■ | ■ | 30 |
| 31 | ■ | 33 | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. உலகையே அதிரச் செய்த இயற்கை அனர்த்தம்.
2. அரசர்களின் பிரதான ஆயுதம்.
3. மங்கள நிகழ்வுகளில் இதுவும் தோரணத்துடன் கட்டப்படும்.
11. பாடல் என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)
15. நடராஜருடன் தொடர்புடையது. (குழம்பியுள்ளது)
19. பாம்பினங்களில் ஒன்று.
22. திருக்குறளிலுள்ள அதிகாரங்களில் ஒன்று.
25. ஒருவித தோல் நோய். (குழம்பியுள்ளது)
33. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுவது. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. குற்றம் என்றும் பொருள்படும். (தலைகீழ்)
2. கேள்வி என்றும் கூறலாம். (தலைகீழ்)
3. ஜனக மன்னன் ஆண்ட நகரம். (குழம்பியுள்ளது)
5. அர்ஜுன் நடித்த திரைப்படம். (குழம்பியுள்ளது)
6. போதை தருவது. (தலைகீழ்)
16. இறைவனுக்கு அணியும் பொருளொன்று. (தலைகீழ்)
19. அரசர் காலத்தில் குற்றவாளிகளுக்கு இதனால் அடித்து தண்டனை வழங்குவார்கள்.
20. ஆடு, மாடு போன்றவற்றின் குதி அல்லது காலின் கீழ்ப்பகுதி. (தலைகீழ்)
24. உலோகங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
27. இடையூறு என்றும் கூறலாம். (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 197 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ந | 2 த் | 3 தா | 4 ர் | ■ | 6 டு |
| 7 வ | 8 மா | 9 ம் | ■ | 11 சு | 12 மா |
| 13 ம | 14 தி | 15 ய | 16 ம் | ■ | 18 தி |
| 19 ணி | ■ | ■ | 22 சு | 23 றை | ■ |
| ■ | 26 சி | ■ | 28 ற | 29 ப் | 30 ண் |
| 31 ம் | 32 நா | 33 க | ■ | 35 சு | 36 சா |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 26.12.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-199
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# நல்ல நட்பு

**நல்ல** நட்பு என்று தனது சீனியர் ரூத் கொடுத்த கவிதையினை இரண்டு மூன்று தடவை திரும்பத் திரும்ப வாசித்தான் லக்ஷி. இவள் எதனைச் சொல்ல விளைகின்றாள் என்பதைத் தெரியாமல் தவித்தான். நண்பர்கள் அக் கவிதையினைப் பார்த்து விமர்சனம் செய்ய சூடாகியது அவனது உள்ளம். விருட்டென்று எழுந்து விடுதியின் பல்கனிக்குச் சென்று அமைதியாக தனது உள்மனக் கிடக்கை கிளறிக்கொண்டிருந்தான் லக்ஷி.

ரூத் கிழக்கிலங்கை பல்கலைக்கழக 3ஆம் வருட கலைப்பீட மாணவி. லக்ஷி இரண்டாம் வருட மாணவன். இலட்சுமன் தான் அவனது பெயர். ஆனால் அவள் அதனைச் சுருக்கி செல்லமாக இலட்சுமனை லக்ஷி என்றே அழைப்பாள். ரூத் கிறிஸ்தவள். இலட்சுமன் இந்து. வயது அடிப்படையிலும் ரூத் மூத்தவள். இருந்தாலும் இருவரும் நட்பாக மணிக்கணக்கில் நேரடியாகவும், கைத்தொலைபேசியிலும் அரட்டை அடிப்பது வழமை. அவ்வாறு இனிய நட்புடன் ஆரம்பமான அவர்களது வரவு இப்போது நட்பா? காதலா? என்ற கேள்விகளுக்குள் அவர்களது நண்பர்களால் தள்ளப்பட்டுள்ளதை அறிந்து இருவரும் மனவேதனை அடைந்தனர். காலப்போக்கில் தமக்கிடையேயான உறவுகளை வெளிக்காட்டாமல், உள ரீதியாகவே தமது நட்பை பேணி வந்தனர்.

ரூத்தின் வீட்டில் அவளே தலைப்பிள்ளை. இரண்டு தங்கைகள், உலகமே அறியாத அம்மா, வெட்டிப் பேச்சுக்களுடன் தந்தை. எனவே குடும்ப நிர்வாகம் இவளையே நம்பியிருந்தது. பணம் வீட்டில் கொட்டிக்கிடந்தாலும் அதனை சரிவர நிர்வகிக்கக் கூடியவள் ரூத்தான். எனவே அதற்கான கர்வமும் இறுமாப்பும் அவளிடம் நிறையவே இருந்தது. சகோதரிகளும் தமது அக்காவுக்கு பூரண ஆதரவினை வழங்கி வந்தனர்.

லக்ஷி வீட்டின் கடைக்குட்டி, செல்லப் பிள்ளை. யாவராலும் நேசிக்கப்படக்கூடியவன். திறமையானவன். நான்கு சகோதரர்களுடன் பிறந்தவன். வறுமையான குடும்பமாக விருந்தாலும் தமது வாழ்வினைத் தாமே தீர்மானித்து கொள்ளும் சுதந்திரத்தினை பிள்ளைகளுக்குப் பெற்றோர் வழங்கியிருந்தனர்.

இருவரும் தத்தமது குடும்பப் பின்னணியில் யாவற்றையும் அறிந்து நட்பு ரீதியாக தமது அன்பினைப் பகிர்ந்து வந்தனர். கலாசாலையில் இருவருடைய நட்பை பற்றி பல்வேறு வதந்திகள் உலாவி வந்தாலும் இருவரும் தமது சகஜவாழ்வை மேற்



கொண்டனர். நாளடைவில் இருவரும் தமது நட்புறவு வாழ்வில் தடுமாறத் தொடங்கினர். லக்ஷி தனது முடிவினை அவளிடம் நேரடியாகவே கேட்டுவிட்டான். என்னை நீ விரும்புகின்றாயா? அவளும் உடனடியாக பதிலைக் கொடுக்க முடியாமல் திண்டாடினாள். சரியாக ஒரு கிழமை கழித்து தனது சம்மதத்தினைத் தெரிவித்தாள். இருவரது மனதிலும் ஒரே குஷி. ஒன்றாக வீதிகளிலும், பூங்காவிலும் உலா வர ஆரம்பித்தனர். நண்பர்களின் கேலியும் அடங்கிப்போனது. ஒரு வார விடுமுறையின் போது ரூத்தின் வீட்டுக்குச் சென்று அவளது பெற்றோருடன் தமது விருப்பங்களை இருவரும் தெரிவிக்க அவர்களது சம்மதங்களுடன் இருவரும் தமது எதிர்கால வாழ்வினைத் திட்டமிட ஆரம்பித்தனர்.

அமைதியாக ஓடிக்கொண்டிருந்த காதல் ஸ்பரிசத்தில் திடீரென எதிர்பாராமல் ஓர் சம்பவம் நடைபெற்றது. ரூத்தின் வாழ்வில் கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் சில லக்ஷி காதில் விழுந்தது. இதனை லக்ஷி சரியா, தவறா என்று சோதித்தறியும் வேலையில் ஈடுபடத் தொடங்கினான். இதனைச் சற்றும் எதிர்பார்க் காத ரூத், லக்ஷியை சந்தேகக் கண்கொண்டு நோக்க ஆரம்பித்தாள். விடயம் பூதாகரமாக, லக்ஷி ரூத்தைவிட்டு விலகிப்போக ஆரம்பித்தான். காரணம் எதுவென்று தெரியாமல் ரூத் தவிக்க, அமைதியாக அடங்கிப்போனான் லக்ஷி.

ரூத்தின் தூரத்து உறவினனான நளன் ஒருமுறை ரூத்தின் வீட்டில் லக்ஷியைப் பார்த் திருக்கின்றான். சில மாதங்கள் கழித்து ஏதேச்சையாக அவன் லக்ஷியைச் சந்தித்த போது, ரூத்தின் கடந்த கால வாழ்வினை விமர்சித்துள்ளான். அவனது பள்ளிப்பருவ வயதில் நடந்த சம்பவங்களை லக்ஷியின் காதில் போட்டுவைத்தான். லக்ஷி அதிர்ந்துபோனான். ரூத்தின் அன்பிற்கு பாத்திரமான வெள்ளையுள்ளம் கொண்ட அவளது காதலனைத் தேடிப்பிடித்து அவருடன் கலந்துரையாடினான். அவர் கூறிய பல விடயங்கள் லக்ஷியின் மனதை ஆழமாகத் தொட்டது. இவரது அன்புக்கு ரூத்தே பாத்திரமானவள் என்பதைப் புரிந்து கொண்டான் லக்ஷி. அவளை விட்டு விலக ஆரம்பித்தான். இருவரையும் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட தயாரானான்.

ஆனால் ரூத் ஆக்ரோஷப்பட்டவளாக லக்ஷியைப் பழிவாங்க ஆரம்பித்தாள். அவனைப்பற்றி அவதூறு பேசுவதை ஆரம்பித்தாள். லக்ஷியின் விரிவுரையாளர்களிடம் முறையிட்டாள். லக்ஷி செல்லுமிடமெல்லாம் சென்று அவனை தாறுமாறாகத் தூற்றித்திரிய ஆரம்பித்தாள். அவன் யாவற்றையும் பொறுத்துக் கொண்டான். யாவும் லக்ஷியின் காதுகளுக்கு எட்டியது.

காலங்கள் உருண்டோடியது. லக்ஷி நிரந்தர நியமனம் பெற்று வட மாகாண பாடசாலை ஒன்றிற்குச் சென்றான். ரூத்தும் அவனைப் பின்தொடர்ந்து தான் செய்யும் வேலைகளிலிருந்து மாற்றலாகி வடமாகாணம் நோக்கிப் புறப்பட்டாள். லக்ஷி எங்கிருந்தாலும் ரூத்தின் கடந்த கால காதலருடன் நட்பைப் பேணி வந்தான். ஒரு முறை ரூத்தைச் சந்திப்பதற்காக அவளது கடந்த கால காதலரான நாதனை அழைத்துச்சென்றான். அவர்கள் இருவரைக் கண்டதும் ரூத் அப்படியே ஆடிப்போனாள்.

"ரூத் உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும்" என்று நாதன் அழைக்க, வெட்கித் தலைகுனிந்தவளாக லக்ஷியை நோக்கினாள். அவனோ ஒன்றுமே தெரியாதது போல அமைதியாக நின்றான்.

'ம்' என்று மாத்திரம் அவளது குரல் ஒலித்தது.

ரூத், நீயும் நானும் பள்ளிப்பருவத்தில் எமக்குள்ளான சிநேகிதத்தினை வளர்த்துக் கொண்டவர்கள். திடீரென்று நீங்கள் பல்கலைக்கழகம் வந்ததும் என்னை தூக்கியெறிந்து விட்டீர்கள். நான் படிக்காதவன், ஆனால் உம் மீது இன்றுவரை, ஏன் இனிமேலும் அன்பைத் தர ஆவலாயிருக்கின்றேன். ஆனால் நீர் லக்ஷியுடன் நட்பாகப் பழகி பின்னர் காதலில் முறிவுற்றதாக அறிந்தேன். நான் நேசிப்பது உம்மையே. உமது குணங்களையே. உமது திறமைகள் மட்டுமல்ல உமது ஆன்மாவையும் தான். ஆனால் நீர் எனது ஆன்மாவை நேசிக்கவில்லை என்றே தோன்றுகின்றது. நாம் உடலால் இணைந்துள்ளோம்.

அப்படியான ஒரு நிலையில் நீர் லக்ஷியின் வாழ்வை களங்கப்படுத்தியது தவறு. பரவாயில்லை.

உம்மிடம் குறை காணவேண்டுமென்பது எனது நோக்கமல்ல. உமது தவறை நீர் உணர்ந்து கொண்டாள் சரி. நான் உம்மை ஏற்பதற்குத் தயாராக உள்ளேன். உமது கரங்களில் அந்த விடயத்தை விடுகின்றேன் என்று விம்மலாகக் கூறி முடித்தான்.

அமைதியாக உட்கார்ந்திருந்த ரூத்திடம் தன் பங்கிற்கு தன் நியாயத்தை எடுத்துரைக்க முற்பட்டான் லக்ஷி. என்னை மன்னிக்க வேண்டும். நான் உங்களை விரும்பியது உண்மை. நீங்களும் விரும்பியது உண்மை. ஆனால் என்னை விட ஒரு உன்னதமான உங்களை இன்னும் நேசிக்கின்றார் என்று கேள்விப்பட்டவுடன் எனது அன்பு எம்மாத்திரம் என்றே தோன்றியது. நீங்கள் என்னைப் பற்றி அவதூறு பேசிய போதெல்லாம் எனக்குப் பக்கபலகமாக இருந்தது நாதனே. அப்போதும் அவர் உங்களை குறைகூறவில்லை. நீங்கள் என்மீது கொண்ட அன்பின் நிமித்தமே இவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். அப்போதுதான் அவரது குணநலன்களை நான் வியந்தேன். உங்களுக்கு நிகரானவர் நாதனே என்பதைத் தீர்மானித்தேன். நாங்கள் இருவரும் இணைந்து வாழ்வதே நீங்கள் அவர் மீது கொண்ட அன்புக்கும், அவர் உங்கள் மீது வைத்துள்ள மரியாதைக்கும் கொடுக்கும் காணிக்கை என்றே நினைக்கின்றேன். அதுவே எம்மிடையே காணப்படும் நல்ல நட்பின் அடையாளமாகவும் இருக்கும். நான் வருகின்றேன். அவன் நட்புக்காக செய்த தியாகத்தை நினைப்பார் யாருமில்லை. ஆனால் ஒரு உண்மையான காதலை வாழ வைத்தப் பெருமை அவனையே சாரும்.

(யாவும் கற்பனை)

# சொல்ல மறந்த கதை

**ஷக்திக்கு** எல்லாமே எரிச்சலாக இருந்தது. வீட்டில் எல்லோருமே இயந்திர கதியில் செயல்பட்டனர். அதற்கான காரணம் தான் அவளை மேலும் மேலும் எரிச்சல்படுத்தியது. அவளை அன்று மாலை பெண் பார்க்க வருகிறார்கள். அவளொன்றும் எனக்கு கல்யாணம் வேண்டுமென்று கேட்கவில்லை. வீட்டில் எல்லோருமாகச் செய்திருந்தார்கள் இந்த




அமர்க்கள ஏற்பாட்டை. அவள் தந்தை ஜெகதீஸ்வரத்திற்கு கையில் பிடிபடவில்லை. அவரது செல்ல மகன் அவளது ஒரே அண்ணன் பிடித்த வரனாம். அவன் வாழ்விலேயே உருப்படியாகச் செய்த ஒரே காரியமெனப் பெருமிதப்பட்டாள் அவளது மூத்த சகோதரி. விமலா அக்கா திருமணமாகி மூன்று வயது அவினாஷிற்கு தாய். ஆனாலும் தங்கை அணியும் அனைத்திலும் அவள் கவனமிருக்கும். ஷக்தியின் அம்மா என்னவென்றால், "பெரிய இடம், பெரிய இடம்" என விழிகளை அகல விரித்தபடியே இருந்தாள். யாருமே ஷக்தியைக் கவனிக்கவில்லை. அம்மா பட்ஷணம் செய்வதிலேயே குறியாக இருந்தாள். விமலாவோ மாப்பிள்ளை வீட்டார் வரும்போது எப்படி உடை அணிய வேண்டுமென்பதை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார். ஜெகதீஸ்வரமும், அண்ணன் கணேஷும் ஒரு பக்கம் ஏதோ செய்து கொண்டிருந்தார்கள்.

யாருமே அவளைப் பற்றி கவனியாததுதான் அவளது கவலை. அவர்களே பார்த்து பேசினார்கள். ஷக்தியை எதுவுமே கேட்கவில்லை. அவள் முதல் நாள் இரவிலிருந்து சாப்பிடவில்லை. அதைக் கூட அவர்கள் லட்சியம் செய்யவில்லை. அப்படியே சென்று கட்டிலில் விழுந்தாள். ஆண்கள் என்றாலே அவளுக்கு கோபம் வரும். அவளுக்கு கல்யாணம், அதுவும் அவள் விருப்பமில்லாமல் "அடி நிருத்தி, பாத்தியா உன்ர ப்ரெண்டுட நிலமையை" என்ற அவளது கண்கள் குளமாகின.

நிருத்தியாவும், ஷக்தியும் சிறுவயது முதல் தோழிகள். அதுவும் உயிர்த்தோழிகள். அவர்கள் இருவருமே படித்து உயர்தரம் பாஸாகியும் பல்கலைக்கழக அனுமதி மட்டும் கிடைக்கவில்லை. அதனால் இருவரும் கணனித்துறையில் இறங்கி கற்று வந்த காலம்.

அந்த கணனி கல்வித்துறை நிறுவனத்தில் கற்றவன் தான் ரவி. வசீகரிக்கும் தோற்றமுடையவன். எப்போதும் சிரித்த முகம். அவனைப் பார்த்து ஷக்தி கூட ஜொள்ளு விட்டிருக்கிறாள். ஆனால் நிருத்தியா மட்டும் அவளது படிப்பை விட வேறு எதையுமே திரும்பிப் பார்ப்பதில்லை. விதி யாரை விட்டது. ரவி கூட ஜொள்ளு விட்டான் நிருத்தியாவைப் பார்த்து.

அவன் அடிக்கடி நிருத்தியாவைப் பார்ப்பான். அவள் கடைக்கண் பார்வைக்காகத் தவமிருப்பான்.

"டீ நிருத்தி ரவி உன்னப் பார்க்கிறான்டி!"

"ச்சி உனக்கு வேற எதுவுமே தெரியாதா. போடீ லூசு" என வெறுப்பு காட்டினாள் நிருத்தியா.

ஆனால் எறும்பூரக் கற்குழியும். கனிந்தது ரவி - நிருத்தியா காதல். ஆனால், ஒரு நாள் ரவி சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டே போய்விட்டான். அதனால் நிருத்தியா விபரீதமாகச் செயற்பட்டாள். மாடியிலிருந்து கீழே குதித்துவிட்டாள். அவள் பிழைத்துக் கொண்டாள். ஆனால் ஒரு காலை இழந்துவிட்டாள். அதாவது ஒருகால் தடியில்லாமல் அவளால் நடக்க இயலாது. அவளது குடும்பம் அவமானத்தால் ஊரைவிட்டேப் போய்விட்டது.

பேச்சுக்குரல் கேட்டு மீண்டாள் ஷக்தி.

வாசலில் எட்டிப்பார்த்தபடி அப்பாவும், கணேஷும்.

ஷக்தி ரெடியாடீ! எனக் குரல் கொடுத்ததாள் விமலா.

வேண்டா வெறுப்பாக முகம் கழுவி, அம்மா எடுத்து வைத்த புடவையைப் பெயருக்குச் சுற்றிக் கொண்டாள் ஷக்தி.

ஷக்தி என அறையை எட்டிப் பார்த்தாள் விமலா. பட்டுப்புடவையைத் தளையைத் தளையக் கட்டி மணப்பெண் போல் தன்னை பிரதிநிதித்துவப்படுத்தினாள் விமலா.

நீ ரெடியாகலையா. என்னடி இது உம்மென இருக்கிறே. உன்ர அத்தான் என்னப் பார்க்க வரயில நான் இப்பிடியா இருந்தன் என ஒரு இடி இடித்தாள் விமலா. ஒருவாறு ஷக்தியும் அலங்காரம் முடித்துக் காத்திருந்தாள்.

வாசலில் அரவம் கேட்டது. மாப்பிள்ளை வீட்டார் வந்ததை ஷக்தி உணர்ந்தாள்.

வெளியில் சிறிது நேரம் பேச்சுக்குரல் கேட்டது. சிறிது நேரத்தில் விமலா உள்ளே வந்தாள்.

ஏய் ஷக்தி மாப்பிள்ள சூப்பர். நீ லக்கிடி எனச் சிரித்தாள். ஷக்திக்கோ எரிச்சலாக இருந்தது. விமலா ஷக்தியைக் கூடத்திற்கு அழைத்து வந்தாள். ஆனால் அவள் மாப்பிள்ளையை நிமிர்ந்து பார்க்கவில்லை.

தம்பி, பொண்ணோடை தனியாக் கதைக்கனுமாம். யாரோ ஒரு பெரிசின் குரல் வந்து காதில் விழவேச் சற்று நிமிர்ந்தாள். கண் முன்னே ரவி அப்படியே அதிர்ச்சியடைந்தாள் ஷக்தி.

இருவரும் வெளியே வந்தனர். ஷக்தி மட்டும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

ஷக்தி ரவி மெல்ல அழைக்க, ஷக்தி நிமிர்ந்தாள். அவள் பார்வையில் கோபக்கனல் வீசியது.

ஷக்தி, கோபப்படாமக் கேளுங்க. இது என்ர விருப்பத்தில் எடுத்த முடிவில்லை. ஆனால் இதுவும் நல்லதிற்குத்தான்.

எது? என மீண்டும் கோபமானாள் ஷக்தி.

கோப்படாதீங்க. உங்கள சந்திச்சதால எனக்கு நிருத்தியா இருக்கிற இடம் தெரிய வருமில்லையா...ஷக்தி எதிர்பாராத விதமாய் நான் ஊரவிட்டுப் போக வேண்டி வந்தது. நான் கூட நிருத்தியாவைச் சந்திக்க முயற்சி செய்தன் முடியேல்ல. நிருத்தியா இப்ப...என அவன் இழுக்க, ஷக்தி அழுதே விட்டாள். அழுகையோடேயே எல்லாவற்றையும் கூறி முடித்தாள். ரவி பேரதிர்ச்சியடைந்தான். பின் சுதாகரித்து ஷக்தி, நிருத்தியா என்னால தானே இப்பிடியானா. அதோட நான் இன்னமும் நிருத்தியாவ நினைச்சுகிட்டு இருக்கேன். அவளையே நான் கல்யாணம் முடிக்கிறது தான் எனக்குச் சந்தோஷம். ஆனால் எங்கட வீட்டு ஆள்களை எப்பிடி சமாளிக்கிறது...என அவன் விழிக்க, கவலைய விடுங்க. நான் சமாளிக்கிறன். நிருத்தியாட அட்ரஸைத் தாறன். நானும் அவளோடை போனில கதைக்கிறன். கவலைப்படாதீங்க. 'பெஸ்ட் ஒப் லக்' என ஷக்தி ரவியின் கையைக் குலுக்க அவனும் சிரிக்க சொல்ல மறந்த கதையொன்றைத் தெரியாமல், பெரியவர்கள் கூட்டம் வீட்டில் திருமணச் சீர் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தது.

# காதலித்தால் மட்டும் போதுமா?

**மாலை** ஆறுமணியிருக்கும். இலேசாக இருட்டத் தொடங்கியது. அந்த மலையடிவாரத்தில் அன்பரசும் மேரியும் மட்டுமே இருந்தார்கள். அங்கே ஒரேயொரு சிறிய ஹோட்டல் இருந்தது. அவர்கள் ஹோட்டலின் உள்ளே சென்று எதிரெதிரே நாற்காலியில் அமர்ந் தார்கள்.

சொல்லு மேரி என்ன சாப்பிடுறே...?

நாம் சாப்பிடுற மனநிலையிலா இருக்கோம்...எந்த நேரத்துல என்ன நடக்குமோன்னு பயமா இருக்குது. இந்நேரம் ரெண்டு வீட்டுலயும் விஷயம் தெரிஞ்சி ருக்கும். எங்க வீட்டில அப்பா அம்மாவை விட அண்ணன் ரஞ்சித்தான் ரொம்ப மோசமானவன். கொலை செய்யவும் அஞ்சமாட்டான். அவன்கிட்டே மாட்டுறதுக்கு முன்னால நாம நினைச்சதை செஞ்சிடனும்...

அன்பரசு முகவாட்டத்துடன் அவளைப் பார்த்தான்.

சிட்டுக்குருவி மாதிரி எந்த கவலையுமில்லாம சந்தோஷமா பறந்து திரிஞ்சிக்கிட்டிருந்த உன்னை, காதல் வலையில விழ வச்சி இப்போ உன்மேல உயிரையே வச்சிருந்த உன் அப்பா, அம்மாக் கிட்டயிருந்து உன்னைப் பிரிச்சுட்டேன் இல்லையா?


இதுக்கு நீங்க மட்டும் காரணம் இல்லையே. நானும் தானே உங்களை நேசிச்சேன். நம்மோட மனம் ஒண்ணாயிடுச்சி. ஆனா மதம் நம்மைப் பிரிக்க பாக்குது. நம்மோட காதல் ரெண்டு வீட்லயும் கலவரத்தை உண்டாக்கிடுச்சி...இப்போ நாம ரெண்டு பேரையும் சமாதியாக்குறதுக்காக எல்லா இடத்துலேயும் தேடிக்கிட்டிருக்காங்க. அவங்க கையில அகப்படுறதுக்கு முன்னால நாம் ரெண்டு பேரும் ஒண்ணா உயிரை விட்டுறதுத்தான் நல்லது...

அதுக்காகத்தானே இப்போ வந்திருக்கோம். இந்த இடம் யாருக்குமே தெரியாது. இன்னைக்கி முழுவதும் நாம சந்தோஷமா, நிம்மதியா இருந்துட்டு யாருக்கும் பிரச்சினையில்லாம பாரமில்லாம போய்ச் சேர்ந்துடு வோம்.

அதற்குப்பின் அங்கே மௌனம் நிலவியது. அன்பரசு மேரியின் கண்களையே உற்றுப் பார்த்தான். அவள் கலங்கிய கண்களுடன் தலை குனிந்தாள். மேரியின் பெற்றோர் ஒரே பெண்ணான அவள் மேல் அதிக அன்பு வைத்திருந்தார்கள். ரஞ்சித் மற்றவர்களுக்கு முரடனாக தெரிந்தாலும் அவளைப் பொறுத்தவரை அவன் மேல் உயிரையே வைத்தி ருந்தான். அவள் மேல் தூசுப் பட்டாலும் துடித்து விடுவான். அப்படிப்பட்டவனிடம் கூட அவள் தன் காதலை சொல்லவில்லை. அவள் எதிர்வீட்டு அன்பர சுவை நேசிப்பது அவள் வீட்டுக்குத் தெரியாது.

ஆனால் கடந்த இரண்டு நாட்களாகத்தான் அவர்களுக்கு அவளின் காதல் தெரிய வந்தது. அப்போதும் அன்பரசுதான் அவளின் காதலன் என்று தெரியாது. அன்பரசுவும் ரஞ்சித்தும் நெருங்கிய நண்பர்கள். மேரி யாரை காதலிக்கிறாளென்று தெரியாமலேயே அவர்கள் வீட்டில் பூகம்பம் வெடித்தது. ரஞ்சித் யாரென்று அவளை கேட்டான். அவன் கண்களில் கொலைவெறி தாண்டவமாடியது. அவள் கடைசிவரை சொல்லவில்லை. அன்பரசுவும் மேரியும் கலந்து பேசினார்கள். உடனடியாக இருவரும் வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

அன்பரசு நாற்காலியை விட்டு எழுந்தான். வெளியே இருட்டிவிட்டிருந்தது. இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்தார்கள். அப்போது ஹோட்டல் வாசலில் ஒரு ஓட்டோ வந்து நிற்க, அதிலிருந்து இரண்டு மூன்று பேருடன் ரஞ்சித் இறங்கினான். மேரி பயத்துடன் அன்பரசுவின் கைகளைப் பற்றிக் கொண்டாள். ரஞ்சித் வேகமாக அவர்களிடம் வந்தான். "அன்பு நீ இங்கே யிருக்கிறதை கேள்விப்பட்டுதான் ஓடிவந்தேன்". வீட்டைவிட்டு சொல்லாம ஓடிவந்துட்ட என் தங்கச்சிக்கு நல்ல புத்தி சொல்லி தடுத்து நிறுத்தி வச்சதுக்கு ரொம்ப நன்றிடா அன்பு. அவமேலே நான் எவ்வளவு தூரம் அன்பு வச்சிருக் கேன்னு உனக்கே புரியும். ஆனா என்கிட்டக் கூட சொல்லாம ஓடி வந்துட் டாளேடா... காதலுக்கு



பாலா சங்குப்பிள்ளை, ஹட்டன்.

நான் எதிரியில்ல. ஆனால் கண்ட வன் கையில சிக்கி களங்கப்பட்டு டக்கூடாதேன்னு தான் நான் கவலைப்பட்டேன். அவ வயசுல பெரியவளா இருக் கலாம். ஆனா இன்னமும் அவ எனக்கு குழந்தை தான்டா. பலவருஷ உறவுக ளைக் கூட இந்த காதல் சிதைச்சி சின்னாப்பின்ன மாக்கிடுதில்லையா. உன்னை மாதிரி ஒரு நல்ல வனை நேசிச்சா நிச்சயமா நான் அதுக்கு தடையாவா இருக்கப் போறேன். ஏண்டா இவ என்னை புறிஞ்சிக்க மாட்டேன்னுறா...என்னைப் பத்தி உனக்கு நல்லா தெரியும்தானே. நாம ரெண்டு பேரும் வேற மதமா இருந்தாலும் நம்மளோட நட்புக்கு அது தடையா இல்லத்தானே...இன்னைக்கி எனக்காக நீ செஞ்ச உதவிக்கு ரொம்ப நன்றிடா. மேரி நான் ஏதாவது தப்பா பேசியிருந்தா என்னை மன்னிச்சி என்னோட வாம்மா...

ரஞ்சித் சொல்லி முடிக்கவும் 'மேரி' ஓவென அழுதவாறு ரஞ்சித்தின் தோளில் சாய்ந்து குலுங்கி குலுங்கி அழ, அன்பழகன் மெல்லவோ விழுங்கவோ முடியாமல் பேச்சற்று நின்றான். ரஞ்சித் அவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை அவனை பிரமிப்படைய செய்திருந்தது. நட்பின் கனல் அவன் காதலை சிறிது சிறிதாக சாம்பலாக்கிக் கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**இன்றைய** உலகைப் பார்த்தால், உடலுழைப்புக் குன்றிவருவது தெளிவாகிவிட்டதொன்று. இதனால் உடலுக்கு ஏற்படுகின்ற கெடுதலை விட உள்ளத்திற்கு ஏற்படுகின்ற கெடுதியே அதிகம் என்று சொல்லலாம். இது தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் எழுந்தபோதிலும், உண்மை ஒன்று உண்டு என்பதை எடுத்துரைக்க வேண்டியுள்ளது. வாழ்வியலே கணனி மயமாக்கப்பட்ட இன்றைய சூழ்நிலையில், அறிவியல் சார்ந்த முன்னேற்றங்கள் எத்தனை வீதத்தவர் மத்தியில் உள்ளது என்பதை ஆராய்வோமேயானால், பத்தோ அல்லது அதற்கு மேற்பட்ட ஓரிரண்டு வீதந்தான் உள்ளது. எஞ்சி இருப்பவை பழைமையுமற்ற புதுமைக்குள்ளும் புகமுடியாத இரண்டும் கெட்டான் நிலையில்தான் உள்ளது என்பதைச் சமூகத்தை உற்று நோக்கும் போது புலப்படும்.

இந்த இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளவர்களின் நோக்கமானது, உடலுழைப்பை விரும்புவதாக இருக்காது. இவர்களுக்கு அறிவியல் ரீதியான திறமையும் இல்லாததாக இருப்பதால், குறுக்கு வழியில் வாழ்வு தேடும் கும்பல் நாட்டில் மிகுந்து காணக்கூடியதாகவுள்ளது. விளைவு - கொள்ளை, களவு, படுகொலைகள் மலிவதற்கு வழிவகுத்துள்ளது. இதனை ஏற்கனவே அறிந்த வள்ளுவப் பெருந்தகை இப்படிக் கூறிவைத்தார் போலும்,

**"அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**
**மற்றைய தேற்றா தவர்"** *குறள் - 289.*

களவினாற் பொருள் கொள்வதைத் தவிர வேறு வழிகள் தெரியாதவர்கள் களவின் கண் ஈடுபட்டு அளவற்ற குற்றங்களைச் செய்து அழிவைத் தேடிக் கொள்வார்கள்.

---

**✍ கிழக்கில் போர் மேகமும், மழை மேகமும் ஒன்று சேர்ந்து மக்களை வருத்துகிறதே?**

**- வீ. ரவீந்திரன், மட்டக்களப்பு.**

'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பார்கள். அப்படிப்போல் நடக்கிறது. கஷ்ட காலம் தான்.

**✍ பாலாவின் இழப்பு எந்த வகையில் புலிகளுக்கு வெற்றிடம்?**

**- கு. வேலானந்தன், வவுனியா.**

ஆங்கிலேயர்களைச் சமாளிப்பதில் பாலசிங்கத்தின் இழப்பு புலிகளுக்கு பேரிழப்புத்தான்.

**✍ நிபுணர் குழுவின் பரிந்துரை விடயத்தில் ஜே. வி. பி. யின் நிலைப்பாடு சரியா?**

**- K. வானதி, பன்னிப்பிட்டி.**

பரிந்துரையை இறுதி முடிவாக வரித்துக் கொண்டுவிட்டுள்ளது சரியாகாது, எதிர்க் கட்சி அந்தஸ்தைப் பெறுவதற்கு இதுவும் ஒரு வழி என்று கருதுவதுபோல்

## சிந்தியா பதில்கள்

இருக்கிறது. பரிந்துரை என்பது சிறிய அணைதான். நாடு தாண்ட வேண்டிய தடைகள் இன்னும் ஏராளம் உண்டு என்பதை ஜே. வி. பி. தெரிந்து கொள்ள வேண்டும்.

**✍ தோட்டக் கம்பனிகளுக்கு தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்தில் 200 கோடி ரூபா நஷ்டமாம். அதை சம்பள உயர்வாகக் கொடுத்திருக்கலாமே....?**

**- எம். ராமையா, மஸ்கெலியா.**

கொடுத்திருந்தால் மதிப்பும் உயர்ந்திருக்கும். ஒரு தவறைச் சரி செய்ய, மேலும் மேலும் தவறு செய்வதற்கு ஒப்பானதாகவே கம்பனிகளின் நிலைமை இருக்கின்றது.

**✍ நிபுணர்களின் பரிந்துரை திருப்தியளிக்காவிட்டால், தீர்வுக்கான அடுத்த வழி என்ன?**

**- ஜெ. குகனேஸ்வரன், மருதானை.**

பரிந்துரை, தீர்வுத் திட்டத்துக்கு அடிப்படை அல்ல; ஆலோசனை மட்டும்தான் என்ற விளக்கம் பலருக்கு இல்லை. அரசும் இதில் குழம்பிப்போய் இருப்பதாகவே தெரிகிறது.

**✍ சிந்தியா! தன்னம்பிக்கை எந்தளவுக்கு வாழ்க்கைக்கு உந்து சக்தியாக இருக்கும்?**

**- P. கவிதா, களுபோவிலை.**

உங்களால் முடியும். உங்களால் முடியாவிட்டால் யாராலும் முடியாது. யாராலும் முடியாவிட்டால் உலகத்தாராலும் முடியாது என்று நீங்கள் உங்களில் நம்பிக்கை கொண்டு முயற்சிக்கும் வரை வாழ்க்கைக்கு உந்து சக்திதான்.

**✍ சிந்தியா! இலங்கை - இந்திய கிரிக்கெட் அணிகள் புதிய உத்வேகம் பெற்றிருப்பதாகத் தெரிகிறதே?**

**- ப. ஜோன்ஸன், கண்டி.**

இலங்கை அணி மாற்றத்தை வெளிப்படுத்தும் என்று போன வாரம் கூறியிருந்தேன். இந்திய அணியின் எழுச்சி மகிழ்ச்சியளிக்கிறது. இரு அணிகளையும், பெற்ற வெற்றிகளுக்காகப் பாராட்டலாம்.

**✍ சிந்தியா! கொழும்பில் கடத்தல்கள் தொடர்கிறதே?**

**- ஏ. எச். வாஹீட், மருதானை.**

கொள்கையில்லாத கடத்தல்காரர்கள் என்பதால் சம்பவங்கள் தொடர்கின்றன. இந்தக் கடத்தல்கள் மூலமாக என்ன செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பாதுகாப்புத் தரப்பு விசாரணைகள் ஆமை வேகத்திலிருந்து நத்தை வேகத்தில் நடைபெறுவதாலேயே குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று மக்கள் மத்தியில் அவநம்பிக்கை ஏற்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

**✍ பிரமாண்டமான சினிமா இயக்குநரான சங்கர், மிகச் சின்னக் கதை கொண்ட சினிமாவை தயாரிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**- கா. காண்டீபன், மாத்தளை.**

"வெயில்" படம் பார்த்து விட்டீர்கள் என்பது புரிகிறது. "காதல்", "புலிகேசி", இப்போது "வெயில்". எல்லாமே சங்கரின் தயாரிப்புதான். அதன் இயக்குநர்கள் சங்கரின் உதவியாளர்கள். அவர்களின் எதிர்காலத்தையும், அவர்களின் திறமையையுமே சங்கர் நம்புகிறார். "வெயில்" இயக்குநர் வசந்தபாலன் மீண்டும் சங்கரின் நம்பிக்கையைக் காப்பாற்றி இருக்கிறார். "ஸ்ரேயா ரெட்டி", "பசுபதி" ஆகியோரின் நடிப்பும், சின்னச் சின்ன வசன அமைப்பும் நம்மை நமது கிராமங்களுக்கு உருட்டி விடுகின்றன. "வெயில்" - இதமான சூடு!

**✍ திருமாவளவனின் நாடகம் கொஞ்சம் அதிகப்படியாகத் தோன்றவில்லையா?**

**- A. H. அன்வர், புத்தளம்.**

எமது கூட்டமைப்புக்காரரை விட, அந்தக் கோமாளியின் நாடகம் பரவாயில்லை போல் தெரிகிறது.

**✍ சிம்பு - நயன்தாராவிற்கிடையில் என்ன நடந்தது?**

**- இரா. சாந்தினி, நுவரெலியா.**

இவர் லூஸுப் பையன், அவர் லூஸுப் பெண். நடந்தது விபத்துதான். எதுக்கும் சிம்பு அமெரிக்காவிலிருந்து வந்த பிறகுதான் அவரின் அடுத்த வம்பு ஆரம்பமாகும்.



பரத் – பாவனா 'வெயில்'

**✍ விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியினால் இயற்கையின் சம நிலை பாதிக்கப்படுவதைத் தடுக்க என்ன வழி?**

**- ம. ரஞ்சன், குருநாகலை.**

மனிதன் நிதானத்தோடும், சுய கட்டுப்பாட்டோடும் விஞ்ஞானத்தைப் பிரயோகித்தால் ஓசோன் அழிவு உட்பட தாவரங்களின் மரபியல் மாற்றம் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ள முடியும். போட்டி நிறைந்த உலகில் விளைவுகளைப் பற்றி மனிதன் யோசிப்பதாகத் தெரியவில்லையே..!

**✍ இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப்பு - நோர்வே அனுசரணை எந்த நிலையில் இருக்கிறது?**

**- எம். கந்தசாமி, முருங்கன்.**

மந்த நிலையில் என்று சொல்வதைவிட, வேறு எந்த வகையில் சொல்ல முடியும்?

**✍ சிந்தியா, குடும்ப வன்முறைச் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்தினால் என்ன?**

**- P. கோமதி, உவர்மலை.**

நல்லதுதான். ஆண்கள் வேலைப்பளு காரணமாக சில சமயங்களில் பிரச்சினைகளைச் சகித்துக் கொண்டு விடுவார்கள். பெண்கள், மற்றொரு பெண்ணின் தூண்டுதலால் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு நாடகம் பார்க்கும் நேர இடைவெளியில் நீதிமன்றம் வரை போய் விடுவார்கள். பாடசாலைக்குப் போன பிள்ளை காவல் நிலையத்தில் நின்று கொண்டு வீட்டுக்குத் தகவல் சொல்லும். நீங்கள் கேட்காமலே ஒரு சிரிப்பு. முயற்சி செய்யுங்களேன்!

**ஆசிரியர்** : நீர் ஏன் நேற்று பாடசாலைக்கு வரவில்லை? நாளைக்கு வரும் போது அப்பாவை கூட்டிக் கொண்டு வாரும்.

**மாணவன்** : சரி...சேர். அப்படியென்றால் என்னுடன் படம் பார்த்துவிட்டுத் தூங்கிப் போனதால் வேலைக்குப் போகாததற்கு அப்பாவின் முதலாளி என்னைக் கூட்டிக் கொண்டு வரும்படி சொல்லவில்லையே?!


(கேட்டுச் சிரித்தது.)

---

## இலக்கிய நயம்

# காத்திருந்த நாளும் இதுதானோ!

**அங்கயற்கண்ணி** ரதத்திலேறி அமர்ந்ததும் ரதம் நகரத் தொடங்கியது. அந்த ரதத்தின் வேகம் அவள் மனதில் அடிக்கின்ற புயல் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. "வேகமாகப் போ!" என்று சாரதிக்குக் கட்டளையிட்டாள். தேர் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது. அருகில் அவளுக்குக் காவலாக வந்து கொண்டிருந்த காவலர்களும் ரதத்தின் வேகத்துக்கு



ஈடுகொடுக்குமாப் போல் தங்கள் புரவிகளைத் தட்டிவிட்டுக் கொண்டிருந்தனர்.

விக்கிரமனின் மாளிகைக்குள் அங்கயற்கண்ணியின் ரதம் நுழைந்ததும், உப்பரிகையின் மேல் அவள் வருகைக்காக எதிர்பார்த்து நின்றிருந்த விக்கிரமன், ரதத்தின் அருகில் வந்தான். அங்கயற்கண்ணியின் முகத்தில் காணப்பட்ட சோகம் அவன் மனத்தை ஏதோ செய்தது. என்றுமில்லாதவாறு

## தருவது கற்பகன்

அவள் முகம் இருண்டிருப்பதை அவன் பார்த்ததும், "தங்கையே! கீர்த்திவர்மனுக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே?" என்று கேட்டதுதான் தாமதம், அவள் கண்கள் நீரைச் சொரிந்தன. இதைக் கண்ட விக்கிரமன் துடிதுடித்துப் போனான். "இப்படிப் பதில் ஏதும் சொல்லாமல் நின்றால், நான் என்ன செய்ய முடியும்?" என்று விக்கிரமன் வினவியதும், "நான் எதை அண்ணா சொல்ல முடியும்? நீயே சென்று பார். அப்போது தெரியும் அவருக்கு நேர்ந்த கதியை - கோழைகளின் செயலின் கொடூரத்தை நீ சென்று பாரண்ணா!" என்று அவள் குமுறியபோது, விக்கிரமனும் சற்று உணர்ச்சிவசப்பட்டுத்தான் சொன்னான். "கோழைகளின் அட்டகாசம் இனியும் நெடுநாளைக்கு நிலைக்காது தங்கையே. கொடுமைகள் ஒழிக்கப்படும் வரை உறங்கமாட்டான் கீர்த்திவர்மன். அவனுக்கு உன் அண்ணனும் உறுதுணையாக இருப்பான். போதுமா?" என்ற விக்கிரமனை, "அண்ணா! அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அவரைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும்" என்று அவசரப்படுத்தினாள் அங்கயற்கண்ணி. இதைக் கேட்டதும் விக்கிரமன் "நாளைக் காலையிலேயே புறப்படலாம்" என்று கூறிவிட்டு, அங்கயற்கண்ணியையும் அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் சென்றான்.

விக்கிரமனும், அங்கயற்கண்ணியும் கீர்த்திவர்மனின் மாளிகையைச் சென்றடைந்த போது, அவர்களை அடையாளங் கண்டு கொண்டு, மாளிகையின் முன்புறக் காவலர்கள் அவர்களை வணங்கி வரவேற்றனர். ஆயுதம் தாங்கிய தலைமைக் காவலன் அவர்களை அழைத்துக் கொண்டு கீர்த்திவர்மன் படுத்திருந்த அறையை நோக்கிச் சென்றான். அங்கயற்கண்ணிக்கு அந்த இடம் ஏற்கனவே பழக்கப்பட்டிருந்ததால் எந்தவிதத் தடையுமின்றி அவள் கண்கள் அறைக் கதவையே குறிவைத்திருந்தன. அறைக் கதவின் அருகிற் சென்றதும் காவலன் அழைப்பு மணியை அசைத்தான். உள்ளிருந்த பணிப்பெண்கள் கதவைத் திறந்து வரவேற்றபோதும் அதைப் பொருட்படுத்தாது அங்கயற்கண்ணி விக்கிரமனுக்கு முன் கட்டிலை நோக்கி ஓடிச் சென்றதைக் கண்ட விக்கிரமனுக்கு, அவளுக்குக் கீர்த்திவர்மனிடமுள்ள அக்கறை எவ்வளவு என்பதை உணரக்கூடியதாக இருந்தது. இத்தனை காலமும் ஒரு சிறு துன்பத்தையும் அவள் அனுபவிக்கும் சந்தர்ப்பமே கிடைக்காத அளவுக்கு அவளைப் பாதுகாத்தான். இன்று இவ்வளவு பெரிய தாக்கத்துக்குள்ளாக வேண்டியதோர் நிலை தங்கைக்கு ஏற்பட்டுவிட்டதே! என்று நினைத்த விக்கிரமன், அவள் செயற்பாட்டில் எதையுமே கண்டுகொள்ளவில்லை.

கீர்த்திவர்மனின் உடலிலுள்ள காயங்களைக் கண்டபோதுதான் தங்கையின் மனத் துடிப்புக்கான காரணம் விக்கிரமனுக்குப் புரிந்தது. கீர்த்திவர்மனின் அருகிற் சென்று நின்றிருந்த அங்கயற்கண்ணி, விக்கிரமனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஏற்பட்ட கலவரம் விக்கிரமனுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஆனாலும் அதை இப்போது காட்டிக் கொண்டால் மேலும் அவள் கதிகலங்கிப் போய்விடுவாள் என்பதைப் புரிந்து கொண்ட விக்கிரமன், ஒருவழியாகச் சமாளித்துக் கொண்டு, கீர்த்திவர்மனின் மார்பில் கையை வைத்ததும், கீர்த்திவர்மன் மெதுவாகக் கண்களைத் திறந்தான். "கீர்த்திவர்மா!" என்று விக்கிரமன் அன்பொழுக அழைத்த போது, பதில் பேச முடியாவிட்டாலும், இலேசாகப் புன்னகைத்தான் கீர்த்திவர்மன். இதைக் கண்டதும், விக்கிரமனுக்கு மேலும் வேதனையும், வியப்பும் மேலோங்கியது. இந்த நிலையிலுமா இவனுக்குச் சிரிக்கத் தோன்றுகின்றது? 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற ஆன்றோர் வாக்கு இருப்பதை அறிந்தவன்தான். ஆயினும், இந்த நிலையிலுமா? என்ற கேள்வியோடு, அவன் வீரத்தின் திண்மை எத்தகையது என்று வியந்தான். அந்த வியப்பு கலைவதற்குள், தன் அருகில் நின்ற தங்கையின் மேல் அவன் பார்வையை ஒருமுறை படரவிட்டுத் திரும்பினான். அந்தப் பார்வையில் அங்கயற்கண்ணி, ஈடிணையற்றதோர் வீரனைத்தான் விரும்புகின்றாள் என்ற பெருமை படர்ந்தது. கண்கொட்டாமல் இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்திவர்மன், ஏதோ கேட்பதற்கு முயல்கின்றான் என்பதை உணர்ந்த விக்கிரமன், "வேண்டாம் கீர்த்திவர்மா! நீ இப்போது எதுவும் பேசக்கூடாது. அது உன் உயிருக்கே ஆபத்தாகலாம். உன் உடல் நிலை தேறியதும், பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறியபோது, அதை ஆமோதிப்பது போல் அங்கயற்கண்ணி விரலைத் தன் வாயில் வைத்து கீர்த்திவர்மனுக்குக் கட்டளையிடுவது போல் பாவனை செய்தாள். அந்தக் கட்டளையில், அன்பு தோய்ந்ததோர் கொஞ்சலும் இருப்பதை அவள் கண்கள் காட்டி நின்றன. இவைகளனைத்தும் விக்கிரமனின் மனதில் பெரியதோர் மகிழ்ச்சியைத் தந்த போதிலும், இவனுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிக் கலங்கினான்.

நேரங் கடந்து செல்வதே தெரியாமலிருந்து விட்டதை கோட்டை வாயில் மணி ஒலி அறிவித்தபோது, விக்கிரமன் அங்கயற்கண்ணியின் முகத்தைப் பார்த்தான். அவளும் 'புறப்பட வேண்டுமே' என்று நினைத்தாளோ என்னவோ அதனால் அவள் முகத்தில் கவலைக்குறிகள் தோன்றின. இதைக் கண்ட விக்கிரமனும் கலங்கினான். "தங்கையே! ஏன் கவலைப்படுகிறாயா? நான் உன்னைக் கீர்த்திவர்மனுக்குத் துணையாக இங்கேயே விட்டுச் செல்லலாம் என்று நினைக்கின்றேன்" என்று விக்கிரமன் கூறியதும், அங்கயற்கண்ணி ஒருகணம் மெய்மறந்து நின்றுவிட்டாள். அந்த நிலை ஒரு கணம் தான் நிலைத்தது. மறுகணம் அவள், "உண்மையாகவா அண்ணா?" என்று கேட்டதும், "நான் என்ன கேலியா செய்கிறேன்? நீ இங்கு இருப்பதுதான் உனக்கும் எனக்கும் ஆறுதல் தரும். என்ன நான் கூறுவது?" என்று கேட்ட கேள்வியில் பரிகாசம் கலந்திருப்பதை உணர்ந்த அங்கயற்கண்ணி, "போ அண்ணா! இதிலுமா உனக்குப் பரிகாசம்?" என்றவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

*"எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ*
*காதலர் செய்யும் சிறப்பு"*

**குறள் : 1208**

## நிபுணர் குழு...
*04 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

விட்டுச்செல்ல மாட்டேன் என ஜனாதிபதி கூறியவைகள் நிருபணமாவதற்கான சூழல் தற்போது உருவாகியுள்ளதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இலங்கை இனப்பிணக்குக்கு தீர்வு காணப்படும் போது அது சமஷ்டிமுறையிலான அதிகாரப் பகிர்வாக இருப்பது அவசியமாகும். இதில்லாமல் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இதை தென் இலங்கை அரசியல் சக்திகள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

** புத்திஜீவிகள் குழு தயாரித்துள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான யோசனை முழுமையாக சமஷ்டி முறையைக் கொண்டதாகும். இதனை ஒரு போதும் நாம் அனுமதிக்க முடியாது. இவ்வாறான தீர்வுத்திட்டங்களைத் தகர்த்தெறிய உயிர்த் தியாகங்களைச் செய்தாவது போராடுவோம்.*

-இது ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண.எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்த கருத்து.

** தமிழ் பிரிவினை வாதிகளுக்குச் சாதகமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் யோசனைகளை அரசாங்கம் நீக்கி விடவேண்டும்.*

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

** புத்தி ஜீவிகள் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு சிங்கள கடும்போக்காளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எனினும், தமிழ் மக்களின் இத்தனை வருட கால போராட்டம் மற்றும் இழப்புக்கள் குறித்து சிறிதும் கவனம் செலுத்தாத, அவர்கள் தமிழ் மக்களின் சுயாட்சி குறித்து எவ்விதமான கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.*

இவ்வாறு சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

புலிகளைக் கலந்து பேசாமல் கருத்துச் சொல்ல அதிகாரமில்லாதவரின் கருத்தை புலிகளின் நிலைப்பாடாகக் கருதினாலும், புலிகள் இன்னும் இந்தப் பரிந்துரை பற்றி உத்தியோகபூர்வ கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

** இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நிபுணர்கள் குழுவினால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரபகிர்வு தொடர்பான யோசனையை அமெரிக்கா வரவேற்கிறது.*

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ரொபட் ஓ பிளக் தெரிவித்துள்ளார்.

** இந்திய அரசியல் அமைப்பை ஒத்ததான அரசியல் முறையை இந்தியா நிச்சயம் வரவேற்கும் இந்தப் பரிந்துரைகளில் இந்தியாவின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டதான வெளிப்பாடு காணப்படுவதாக இருக்கிறது.*

*-இந்திய ஊடகவியலாளர்.*

## அன்ரன் பாலசிங்கம்.....
*07 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களையும் இலங்கை அரசையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர இந்தியா முயன்று, இறுதியில் திம்பு மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.

இதற்குப் போவதா? விடுவதா? என்பதில் ஆயுதமேந்திய தலைவர்களுக்குள் இழுபறி நடந்தது. இச் சம்பவம் நடந்த அன்று திம்பு மாநாட்டுக்குப் போவது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு நான்கு இயக்கத் தலைவர்களும் அங்கு கூட சம்மதித்து இருந்தனர். சிறீ சபாரத்தினம், பாலகுமார், பத்மநாபா ஆகிய மூவரும் தத்தமது இயக்கங்களின் முடிவுகளுடன் வந்திருந்தனர். அவர்கள் மூவரும் திம்பு பேச்சுக்குப் போவது 'சரி' என்ற முடிவுடன் வந்திருந்தனர். அங்கிள் பாலாவும் தம்பி பிரபாகரனும் சற்று நேரம் தாமதித்தே அங்கு வந்தனர். எல்லோரும் அவரின் முடிவை சொல்லும்படி கேட்டனர். தம்பி பிரபாகரன் கூறியது இதுதான் ***நான் இப்பொழுதுதான்: எனது பிள்ளையின் தலையில் (சார்ல்ஸ் அன்ரனி) பிஸ்டலை வைத்து சத்தியம் பண்ணிவிட்டு வருகிறேன். எனக்கு பேச்சு வார்த்தையில் நம்பிக்கை இல்லை. நான் இந்த மாநாட்டுக்கு வரப்போவது இல்லை*** என்ற முடிவை சொன்னார். உடனே சிறீ சபாரத்தினமும், ***தம்பி போகா விட்டால் நானும் போகப்போவது இல்லை*** என்றார். இதைச் சொன்னதும் சகலருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அடுத்ததாக பத்மநாபாவும், ***தம்பியும் சிறியும் போகாவிட்டால் நானும் போகவில்லை*** என்றவுடன் பாலகுமார் சற்று கொதித்துப் போனார். அவர் சிறீ சபாரத்தினத்தையும் பத்மநாபாவையும் நோக்கி ***பொறுப்பு இல்லாமல் பேசாதீர்கள். நீங்கள் இருவரும் இவ்வளவு நேரமும் போவதாகவே தீர்மானித்தீர்கள், இப்போது உங்கள் நிலையை மாற்றிக் கொள்கிறீர்கள். போகாவிட்டால் வரும் விளைவு உங்களுக்குத் தெரியுமா?*** என்று இரைய ஆரம்பித்தார். தொடர்ந்து சகலரும் தம்பி பிரபாகரனுக்கு நிலைமையை விளக்கி, அவரை சம்மதிக்க வைக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள். இப்போது பாலா அண்ணர் பேசத் தொடங்கினார். ***தம்பி, இவையள் எல்லாரும் சொல்லுறதைப் பார்த்தால் நாங்கள் போகாமல் விடுவது சரியில்லை. நாங்கள் எல்லாருமாக திம்புவுக்கு போய் சில கடுமையான நிபந்தனைகளை முன்வைத்துவிட்டு வருவோம்*** என மதியுரை வழங்க முயற்சித்தார். உடனே வெகுண்டெழுந்த தம்பி, ***பாலா அண்ணை தயவு செய்து வாயை மூடிக்கொண்டு இருங்கோ. என்ர தீர்மானத்தை சொல்லத்தான் உங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். இங்கே வந்து நீங்கள் நினைத்ததைப் பேச முடியாது. உங்களைப்போல எத்தனை பேரையும் நான் விலைக்கு வாங்குவேன்*** என்று கண்களில் கோபம் கொப்பளிக்க கர்ச்சித்தார். தம்பியின் கை அவரை அறியாமலே இடுப்பை நோக்கிப் போய் வந்ததை அவதானித்த பாலசிங்கம் ஒருமுறை வெலவெலத்துப் போனாராம். அசடு வழிய பத்மநாபாவையும் சிறீ சபாரத்தினத்தையும் பாலகுமாரையும் பார்த்த பாலா அண்ணர், நாய்க்குட்டிபோல் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டார்.

மறுநாள் பாலா அண்ணரைக் கதைத்து சமாதானப் படுத்தி மீண்டும் சகலரும் ஒற்றுமையாக திம்பு பேச்சு வார்த்தைக்குப் போகும் விடயத்தை மேற்கொள்வதற்காக பத்மநாபா பாலசிங்கத்தைத் சந்திக்கச் சென்றார். கொட்டும் மழையையும் பொருட் படுத்தாமல் சென்னையில் ஒரு தொங்கலிலிருந்த கோடம்பாக்கத்திலிருந்து மறு தொங்கலிலிருந்த அடையாறை நோக்கி தன் சக தோழர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் போய்ச் சேர்ந்தார் பத்மநாபா. பாலா அண்ணரும் ஆன்டி அடேலும் பத்மநாபாவை இன்முகத்தோடு வரவேற்றனர். அங்கிள் பாலா வழமைபோல் கையில் சிகரெட் புகைத்து கொண்டிருக்க, தனக்கு பிடித்தமான கறுப்பு வெள்ளை நாய்க்குட்டி போட்ட விஸ்கியை சுவைத்த வண்ணம் ***வாரும் நாபா உம்மட்ட கதைக்க வேண்டும்.***

( மிகுதி அடுத்த வாரம் )

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 8, கூட்டெண் - 3

8, 17, 26 போன்ற திகதியில் பிறந்து திகதி மாதம் வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால், இவர்கள் குரு, சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும், சிலர் குள்ளமாகவும் முன் பற்கள் இரண்டும் சற்று பெரியதாகவும், கலை உணர்வு கொண்ட முகத்தோற்றமும் கொண்டு காட்சியளிப்பர். ஆரம்ப வாழ்க்கையில் பல்வேறு பிரச்சனைகளால் அடிபட்டு வாழ்ந்ததால் இவர்களைப் பெரும் அனுபவசாலிகள் என்று அழைக்கலாம். நேர்மை, நீதி போன்றவற்றில் நம்பிக்கை உள்ளவர்கள். இளமையிலேயே பல்வேறு சோதனைகளை அனுபவித்து எதிர்நீச்சல் போட்டு ஏற்றம் பெற்றவர்கள் என்றால் மிகையாகாது.

இப்படிப்பட்ட இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக இருக்கின்றதே என்று கவலைப்படுவர். தன்னைச் சார்ந்த சமூகத்திற்கும் தனது நாட்டிற்கும் நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணுவர். நல்ல உள்ளம் கொண்ட இவர்கள் கடுமையாகப் பேசுவார்களே தவிர, கெட்டவர்கள் அல்ல. ஒளிவு மறைவு இன்றி, தன் மனதில் பட்ட கருத்துக்களைக் கூறிவிடுவர். இதனால் பலரது பகையும் உருவாகலாம்.

ஆண்டவனது அனுக்கிரகம் பெற்ற இவர்களுக்கு எந்த வழியிலும் செல்வம் சேரும். ஆனால் மன அமைதி குறைந்து விடும். ஒரு பிரச்சினையில் இறங்கிவிட்டால் அது முடியும் வரை கடுமையாக உழைப்பர். வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாது, சளைக்காது போராடுவர். சவால்விட்டு சில காரியங்களைச் சாதிக்க முயல்வர். இதனால் எதிரிகள் கூட இவர்களை மதிப்பர்.

தனக்குப் பொறுக்க முடியாத அளவுக்குப் பிரச்சினைகள் உருவாகுமேயானால் ஆண்டவனிடத்தில் அழ ஆரம்பித்துவிடுவர். இளமையில் பட்ட கஷ்டங்களையும், அனுபவங்களையும் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பர். தாம் இந்த உலகத்தில் கஷ்டப்படவே பிறந்துள்ளோம் என்று எண்ணுவர். பெண்களால் ஆண்களுக்கும், ஆண்களால் பெண்களுக்கும் இடையூறு உருவாகிறது. இதனால் குடும்ப வாழ்க்கை என்பது மனிதனைக் குழப்பிவிடும் தொல்லைகளில் ஒன்று என்று எண்ணுவர்.

இவர்கள் மனம் கலை, கலாச்சாரம், பண்பாடு, சமயம், சட்டம், மருத்துவம், சோதிடம், பொறியியல் போன்றவற்றை ஆராயும். பெயர் நன்றாக அமைந்தவர்களுக்கு இளமையில் கஷ்டப்பட்டாலும் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைந்து நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம், நல்ல ஆரோக்கியம் பெற்று வாழ்கின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் குடும்ப வாழ்க்கையை நரக வாழ்க்கையாக எண்ணுகின்றனர்.

இன்னும் சிலருக்கு ஆரோக்கியம் கெட்டோ, பொருளாதார வசதி நலிந்தோ, பிள்ளைகளால் பிரச்சினையோ உருவாகி விடுகிறது. இவர்கள் மனம் அழகான ஓவியங்களையும், பச்சை நிறம் கொண்ட விவசாயப் பண்ணைகளையும், மலைப்பாங்கான இடங்களையும் தெய்வீகமான கலைக்கூடங்களையும், மிகப் பழைமையான கோவில்களையும் கண்டு அமைதி கொள்ளும்.

நாணயத்தின் நாயகர்களாகிய இவர்கள், எவ்வழியிலும் தான் வாங்கியதைக் குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்க முயல்வர். நிர்வாகத் திறமையும், தெய்வ நம்பிக்கையும் கொண்ட இவர்களுக்கு முன்கோபமும் மூர்க்கத்தனமும் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாகும். எல்லா உலக விஷயங்களும் தெரிந்திருக்கும். இவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிப்பர்.

பொதுவாக தொழிற் கல்வியால் உயர்வும், இன்னும் சிலர் கற்பனா சக்தியால் எழுத்தின் மூலம் உயர்வும், பேச்சின் மூலம் முன்னேற்றமும் பெறுகின்றனர். ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால், சிக்கனமாகச் செலவு செய்யும் இவர்களுக்கு விரயச் செலவுகள் காத்துக் கொண்டிருக்கும். கோர்ட் வழக்குகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். மனநிலை கெட்டுவிடும். தான் ஒரு சீர்திருத்தவாதியாக வாழவேண்டும் என்று எண்ணும் இவர்களுக்குப் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் சிறப்புடன் வாழலாம்.

**தொழில் :** இரும்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே. வாகனம், கான்ட்ராக்ட், கமிஷன் ஏஜென்சீஸ், கைநுணுக்கத் தொழில், கலை சம்பந்தமான தொழில், பலபொருள் வியாபாரம், ஓரிடத்திலிருந்து பொருள்களை மற்றொரு இடத்திற்கு அனுப்புதல், அச்சுத் தொழில், பப்ளிகேஷன் போன்றவைகள் சிறப்பாகும்.

**நோய் :** ஆஸ்துமா, வயிற்றுக்கோளாறு, கோளாறு, மூட்டுவலி, முதுகுவலி, பல்வலி, தோல்வியாதி, நரம்புக்கோளாறு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை :** இவர்களுக்குப் புதன், குரு, சூரியன் ஆதிக்கத்தில் பெயரை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், புதன் ஆதிக்கத்தில் பெயரை அமைத்துக் கொள்வது சாலச் சிறந்தது என்பதால் 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை :**

யோகமான எண் : 5, 3, 1.

யோகமான திகதிகள் : 5, 14, 23: 3, 12, 21, 30: 1, 10, 19, 28.

யோகமான மோதிரக்கல் : நீலக்கல், எமிதிஸ்ட்.

யோகமான நிறம் : நீலம், மஞ்சள், கத்தரிப்பூ நிறம்.

ஆகாத திகதிகள் : 8, 17, 26: 6, 15, 24.

ஆகாத நிறம் : கறுப்பு, சிவப்பு, பச்சை


குறிப்பு: 8, 17, 26 போன்ற திகதிகளில் தாங்களாக ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது.

ஆனால் எதிர்பாராத நன்மை அளிக்கவல்லது.


*அடுத்த வாரம் பிறப்பெண் 8, கூட்டெண் 4 பற்றிப் பார்ப்போம்.*

# சுனாமியின் நினைவுகளில்...

# 26.12.2006



அஞ்சலிகள்



**2004. 12. 26 ஆம் திகதி ஆசிய நாடுகளைத் தாக்கிய சுனாமிப் பேரலையில் இந்தோனேஷியா, இந்தியா, இலங்கை, மாலைதீவு, தாய்லாந்து ஆகிய நாடுகளில் பெரும் மனித அழிவு ஏற்பட்டது. சுமார் இரண்டு இலட்சம் மக்கள் பலியாகிப் போனார்கள்.**

**இலங்கையின் கரையோரப் பகுதிகளான அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, காலி, களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் சுனாமியின் தாக்கத்தால் மூவாயிரத்துக்கும் மேலானவர்கள் பலியாகிப் போனார்கள். வீடுகள், சொத்துக்கள் முதலியன அழிந்து போயின.**

**இரண்டு வருடமாகியும் சுனாமியின் தாக்கத்தில் இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு நஷ்டஈடுகளும், இழப்பீட்டு மீள் கட்டுமானங்களும் பூரணமாகக் கிடைக்கவில்லை. சில மாவட்டங்களில் இன்னும் மீள் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.**

**இடிந்த கட்டிடங்களையும், வீதிகளையும் மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகள் வெற்றி யளிக்கக்கூடும். அதேபோல் உறவுகளைப் பறி கொடுத்தவர்கள் துயரத்தையும், உறவுகளைப் பிரிந்து அநாதரவாகப் பராமரிப்பு நிலையங்களில் விடப்பட்டிருக்கும் சிறுவர்கள், முதியவர்களின் வாழ்க்கையையும் மீட்டுக் கொடுப்பது எவராலும் இயலாத காரியமாகவே இருக்கும். அவர்கள் சுனாமியின் அடையாளங்களாக இந்தப் பூமியில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.**

**இத்தகையவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் இன்னும் சிறப்பான முறையில் திட்டமிட்டு முயற்சிக்கப்பட்டால், நல்ல மாற்றங்கள் ஏற்படலாம். உளவியல் ரீதியான சிகிச்சைகளும் இதற்கு ஒத்தாசையாக இருக்கும்.**

**இரண்டாவது ஆண்டு நிறைவுறும் சுனாமியின் நினைவுகளில் பலியாகிப் போனவர்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக 26. 12. 2006 அன்று மாலை 6.00 மணிக்கு ஒவ்வொருவருடைய இல்லத்தில் தீபமேற்றி, நமது துயரங்களைப் பகிர்ந்து கொள்வோமாக. இந்தத் துக்க அனுஷ்டிப்பு இந்த மண்ணில் பலியாகிப் போன அனைவருக்கும் சமர்ப்பணமாக இருக்கட்டும்.**


# ஹோமர்
# (கி.மு. 8ஆம் நூற்றாண்டு)

**ஹோமர்** கவிதை எழுதியவர் என்பது பற்றிப் பல றாண்டுகளாகக் கருத்து றுபாடு நிலவி வந்தது. லியட்', 'ஒடிசி' எப்போது, கே, எவ்வாறு இயற்றப்பட்டன? னவே இருந்த இலக்கியத்தை வெ எந்த அளவுக்குத் தழுவி தப் பெற்றன? இலியட், ஒடிசி ிய இரண்டையும் ஒருவரே தினாரா? அவை வொன்றையும் தனித்தனியே வொருவர் எழுதினரா? வேளை ஹோமர் என்றொருவர் லாதிருக்கலாம். இரு டப்புகளும் இயல்பாக ர்ந்திருக்கலாம். அல்லது அவர் முந்திய சிறு கவிதைகளை ஒன்று திரட்டித் தொகுத்தாரெனக் கூறுவது தவறாகும். அவர் சில கருத்துக்களைத் தெரிந்தெடுத்து ஒருங்கிணைத்து, வேறு சொற்களில் புனைந்து, புதியன இணைத்து தமது தனிக் கலைத்திறனுக்கேற்ப இறுதி வடிவம் கொடுத்தார். இந்த அரிய படைப்பை உருவாக்கிய ஹோமர் கி.மு. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடும். அதற்கு முந்திய காலத்தில் அவர் வாழ்ந்ததாகவும் சிலர் கருதுகின்றனர். அவரே ஒடிசியை எழுதிய முக்கிய கவிஞரெனவும் நான் நினைக்கிறேன். இரு கவிதைப்படைப்புக்களும் (நடைவேறுபாட்டின் காரணமாக)

## உலகை வியக்க வைத்தவர்கள்

வேறு கவிஞர்கள் இயற்றிய விதைகளைப் பதிப்பாசிரியர்கள் தொகுத்திருக்கலாம். வற்றையெல்லாம் பல ண்டுகளாக ஆராய்ந்த றிஞர்களிடையே பல்வேறு த்து வேறுபாடு நிலவுகின்றன. ப்படி இருக்கும் போது, பண்டைய லக்கிய அறிவு இல்லாத ஒருவர் படி இவற்றிற்கு உண்மையான டைகளைக் கண்டுபிடித்திருக்க டியும்? ஆயினும் உலகை யக்க வைத்தவர்கள் பட்டியலில் ஹாமர் எந்த இடத்தைப் பெறுவார் பதைத் தீர்மானிக்க கீழ்க்கண்ட ருத்துக்களைக் காண்போம்.

முதலாவது, இலியட் படைப்பை முக்கிய கவிஞர் படைத்திருக்க ண்டும் எனலாம். (ஒரு ழுவினரால் படைக்கப் பற்றிருக்க முடியாத அளவிற்கு து அத்துணை அரியதாக ருக்கின்றது) போமர் காலத்திற்கு ன் பல நூற்றாண்டுகள் அதே பொருள் பற்றிப் பல கிரேக்க விஞர்கள் சிறு கவிதைகள் ழுதியிருந்தனர். அவற்றிலுள்ள ருத்துக்கள் பலவற்றை போமர் டுத்துக் கொண்டார். ஆனால்,



இருவேறு கவிஞர்கள்இயற்றினர் என்று கூறுவதில் ஓரளவு உண்மை இருப்பதுபோல் தோன்றினாலும், அவ்விரு படைப்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளைவிட ஒற்றுமைகளே மிகுதியாகும்.

மேலே கூறியவற்றிலிருந்து ஹோமரைப் பற்றி நமக்கு மிகவும் குறைவாகவே தெரிந்திருக்கின்றது என்பது புலனாகும். அவரது வாழ்க்கை பற்றி திட்டவட்டமான விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஹோமர் பார்வையிழந்தவராக இருந்தாரெனப் பண்டைய கிரேக்க காலம் முதல் மக்கள் நம்பி வந்தனர். ஆயினும், அவருடைய கற்பனைக் காட்சியைப்பார்க்கும் போது, பிறப்பிலிருந்தே அவர் குருடாக இல்லை என்பது தெளிவாகின்றது. அவரது கவிதை நடையிலிருந்து அவர் ஈஜியக் கடலில் கிழக்குப் பகுதியான அயோனியாவைச் சேர்ந்தவர் எனத் தெரிகின்றது.

நன்கு புனையப் பெற்ற இவ்விரு நீண்ட கவிதைப்படைப்புகளும் எழுதப் பெறாமல் இயற்றப்பட்டன என்பதை நம்மால் நம்ப முடியவில்லையெனினும், அவை பெரும்பாலும், சிலவேளை முழுவதுமே வாய்மொழியாக இயற்றப்பட்டவை எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். அவை எப்போது எழுத்து வடிவம் பெற்றன என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவற்றின் நீளத்தைப் பார்க்கும்போது (இரண்டும் சேர்ந்து 28,000 செய்யுள்களைக் கொண்டது) அவை இயற்றப்பட்ட கொஞ்ச காலத்திற்குள் எழுதப் பெற்றிருந்தாலன்றி, அவற்றை நுட்பதிட்பமாக வாய்மொழி மூலம் வழங்கியிருக்க முடியாது என்பது தெரிகின்றது. அது எப்படி இருப்பினும், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் அவ்விரு கவிதைப் படைப்புகளும் இருபெரும் இலக்கியப் படைப்புகளாகக் கருதப் பெற்றன. ஹோமரின் வாழ்க்கை பற்றிய செய்திகளும் மறந்து விட்டன. அதன்பிறகு, கிரேக்கர்கள் ஒடிசியையும், இலியட்டையும் தம் நாட்டின் மேலான இலக்கியப் படைப்புகளாகக் கருதி வந்தனர். பிந்திய நூற்றாண்டுகளிலெல்லாம் இலக்கிய மரபுகள் மாறி வந்துள்ள போதிலும், ஹோமரின் புகழ் குறைந்து விடவில்லை.

ஹோமரின் பெருமையையும், புகழையும் பார்க்கும் போது, சற்றுத் தயக்கத்துடனேயே அவருக்குத் தாழ்ந்த இடத்தைக் கொடுக்க வேண்டியுள்ளது. ஹோமரைப் பொறுத்தவரையில், அவருடைய புகழுக்கும், அவரால் வரலாற்றில் ஏற்பட்ட விளைவுகளின் அளவுக்கும் வேறுபாடு இருக்கின்றன. அவருடைய படைப்புகளைப் பள்ளிகளில் மாணவர்கள் அடிக்கடி படிக்கின்ற போதிலும், இன்றைய உலகில் பள்ளியையோ, கல்லூரியையோ விட்டு வெளியேறியபின் ஒருசிலரே அவற்றை வாசிக்கின்றனர்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

பாலா அண்ணையின்ர செத்தவீட்டுச் செய்தி கேள்விப்பட்டிருப்பியள். எந்தவொரு மனிதனின் இழப்பும் கவலைக்குரியதுதான். பாலாண்ணையின்ர இழப்பு தமிழ் மக்களுக்கு இழப்பெண்டதை விடவும் புலிகளுக்குத்தான் பெரும் இழப்பாக இருக்கும். இனி அவரின்ர இடத்தை யாரை வச்சு நிரப்பப்போகினமோ தெரியாது. பதவிகளைத் தகுதி பார்த்து வழங்கினமே இல்லை தான் எண்டாலும், இனியாரும் பாலா அளவுக்கு பிரபாகரனுக்கு ஒத்தாசையாக இருப்பினம் எண்டு நம்பமுடியாது. இந்த வருடம் பெப்ரவரி மாசம் ஜெனிவாவில் நடந்தப் பேச்சுகளுக்குப் பிறகு பாலாவை தமிழ் செல்வன் தொடக்கம் அடிமட்டப் புலிகளும் விமர்சிக்கத்தான் செய்திச்சினம். அந்த இடைவெளியோடை அவருக்கு வருத்தமும் வந்து படுக்கையில் போட்டிட்டுது. பாலாண்ணை திம்பு முதல் - ஜெனிவா வரை நடந்த சமாதானப் பேச்சுக்களில பங்கு கொண்டவர் எண்டது உண்மைதான். ஆனால் உந்தப் பேச்சுக்களில ஒண்டிலையும் அவர் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் விதமாகப் பேச்சுக்களை நடத்தி முடிக்கவில்லை எண்டதும், ஒவ்வொரு பேச்சுக்களின் முடிவிலையும், தாங்கள் ஏமாற்றப்பட்டதாக புலிகள் சொல்லிக் கொண்டே வந்திச்சினம் எண்டால், பாலாவில பிழையோ, இல்லாட்டில் பாலாவை பிழைக்குள்ள தள்ளி விட்டவையின்ர பிழையோ எண்ட விவாதங்களை ஒரு தடவை லண்டனில இருக்கிற ஜெயதேவன் ஒரு வானொலிக்கு வழங்கின பேட்டியில சொன்னவர். அவர் சொன்னதிலையும் உண்மை இல்லை எண்டினம். சரி எது எப்படி எண்டாலும் மனிசன் சில முக்கியமான காலகட்டத்தில சரியோ பிழையோ தன்ர தலையையும் போட்டு உருட்டி இருக்கிறார்.

எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. ஜெனிவாவில பேச்சுக்களில பங்கு கொண்ட பிறகு இலங்கையில இருக்கிற ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுத்த பாலா, கடந்த போராட்ட காலத்தில் சில பேரை தாங்கள் தான் போட்டுத்தள்ளின நாங்கள், அந்த விபரங்களைத் தன்ர புத்தகத்தில விரிவாக எழுதியிருப்பதாகவும் சொன்னவர். அவரைப் போட்டுத் தள்ளினம் - இவரைப் போட்டுத்தள்ளினம் எண்டு சொன்ன பாலாவை இண்டைக்கு காலம் போட்டுத் தள்ளிட்டுது. இது வேதனையானதுதான். என்ன செய்வம் மரணம் எல்லாரையும் மிகப் பக்கத்தில இருந்து பார்த்துக் கொண்டுதானிருக்கு. நாங்கள் வாழிற காலத்தில யாரைவேணுமெண்டாலும் போட்டுத்தள்ளலாம். ஆனால் மரணம் சமயம் பார்த்து நம்மைப் போட்டுத்தள்ளும். பாலா போயிட்டார் எண்டு சந்தோசப்படுறவைக்கும் சரி பாலா போயிட்டாரே எண்டு கவலைப்படுறவைக்கும் சரி இந்த உண்மை புரிஞ்சால் சரிதான். லக்ஸ்மன் கதிர்காமர் செத்திட்டான் எண்டு வெப்சைட்டில புலிகள் செய்திபோட்டிச்சினம். துரதிர்ஷ்டம் உந்த செய்தி வெளியாகேக்க லக்ஸ்மன் கதிர்காமர் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில உயிரோடதான் இருந்தவர். ஆனால் பாலாண்ணை இறந்த செய்தியைக் கேட்டு யாரும் அப்புடிச் செய்தி போடயில்லை எண்டதை உப்பிடி மரணத்தைக் கொண்டாடுறவை புரிஞ்சு கொள்ள வேணும். மனிசனாப் பிறந்தவன் சாகமாட்டான் எண்டு நினைக்க முடியுமோ. ஏலாது. ஆக மனிதனை நேசிக்கிறவைக்கு எந்தவொரு மரணமும் கவலைதானுங்கோ. அவை யாருடைய மரணத்துக்காகவும் மகிழ்ச்சி கொள்ள மாட்டினம். உதைச் சொல்லேக்க அமரர் ரவிராஜின்ர ஒரு செய்தியும் தெரியவந்தது. அவரின்ர குடும்பத்துக்கு 50 லட்சம் அனுதாப அடிப்படையில அரசு பணம் கொடுக்கப்போகுதாம். அவரின்ர இழப்பும் இழப்புதான். உதே மாதிரித்தானே நாளுக்கு நாள் படுகொலைகளுக்கு உட்பட்டுப்போகிறவையின்ர இறப்பும், ஏன் அவைக்காக அவையின்ர குடும்பங்களுக்கு இவ்வளவு பெரிய நஷ்டக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. ஏன் அவை யாரும் ஸ்கொட்யாட் பொலிஸ் விசாரணையைக் கேட்கவில்லை எண்டதற்காகவா அல்லது அவையள் எம்.பி.யாக இருக்கவில்லை எண்டதற்காகவா அல்லது அவைக்குப் பின்னால புலிகள் இயக்கமோ, கூட்டமைப்பான எம்.பி.க்களாக யாரும் இருக்கவில்லை எண்டதற்காகவோ, ஏன் அவைக்கு உந்த நஷ்ட்ட ஈடு கொடுக்கப்படவில்லை. எந்த அடிப்படையில உந்தப் பணத்தைக் கொடுக்கினமோ தெரியல்லையுங்கோ. நான் உப்பிடிக்கேக்கிறதாலை ரவிராஜின்ர குடும்பத்துக்கு பணம் கொடுக்க வேண்டாம் எண்டு சொல்லயில்லையுங்கோ, தாராளமாகக் கொடுங்கோ. கொடுக்கிறதோடை உப்பிடி பலியாகிப் போனவையின்ர குடும்பங்களுக்கும் கொடுங்கோ அவையின்ர மனைவிமாரும், பிள்ளைகளும் கூட ரவிராஜின்ர குடும்பத்தைப் போல் அல்லது அதைவிட கஷ்ட்டமான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கினம், அடுத்தவேளை உணவுக்காக ஏங்கிக் கொண்டு இருக்கினம், குடும்பத்தலைவனை இழந்து கையேந்தி நிக்கினம். அவையையும் கவனத்தில எடுங்கோ. அவையின்ர வயிறும் பசியால வாடுது. அவையின்ர பிள்ளைகளும் கல்விக்காகவும், வாழ்க்கைக்காகவும் ஏங்கினம். அந்தக் குடும்பத்தலைவியும். தங்கட கணவினை இழந்து விதவையாகிப் போய் இனிச் சாகும் வரையான காலப்பகுதியை எப்புடி கடந்து வாழப்போறம் எண்டு எந்த வழியும் தெரியாமல் விழி கலங்கிப் போயிருக்கினம். அவைக்கும் உப்பிடி பெரிய தொகையைக் குடுங்கோ. அதைக் கொண்டு அவையும் அதை வச்சுக் கொண்டு உயிர் பிழைத்துப் போகட்டும். உதவ ஆளும் வளமும் இருக்கிறவைக்கு உதவுவதை விடவும் உப்பிடி திரும்பிப்பார்க்கவே யாருமில்லாது அநாதையாகிப் போனவர்களுக்காக உதவுறதுக்கு யோசிங்கோ எண்டு தான் கேக்கிறன். என்னங்கோ நான் உப்பிடி கேக்கிறது நியாயமோ இல்லையோ கந்தசாமி எதையாவது அர்த்தமில்லாமல் உளறுவான் எண்டு வழக்கம்போல நினைச்சுப் போடாதேங்கோ. கந்தசாமி உளறிரது நாளைக்கு உங்கட குடும்பத்துக்காகவும் தான் எண்டதை ஒரு நிமிஷம் யோசிச்சுப் பாருங்கோ. இண்டைக்கு யாரும் வாய் திறக்கமாட்டியள். அப்புடி வாய் திறக்காதவையின்ர குடும்பத்துக்காக நாளைக்கு யாரும் வாய்திறக்க மாட்டினம். என்னடா இது இண்டைக்கு கந்தசாமி ஒரே செத்தவீட்டுச் செய்தியாப் போட்டுத் தாக்கிறான் என்னாச்சு எண்டு யோசிப்பியள். யோசிக்காதேங்கோ. நாடும் மக்களும் கொலைகளுக்கு ரொம்பப் பழகிப்போய் விட்டிட்டினம். அங்க ஒருவரைச் சுட்டுக்கிடக்காம். இங்க ஒருவரை வெட்டிப்போட்டுக்கிடக்காம் எண்டால் ஓ...அப்படியோ, அவன் இவனா இருப்பான், இவன் அவனா இருப்பான் எண்டு சொல்லிப்போட்டு அவையள் தன்ர வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கினம். உந்த கொடுமையான நிலையை யோசிச்சதில கொஞ்சம் எமோசனாகிப் போயிட்டேனுங்கோ, மற்றபடிக்கு எனக்கு வேறொண்டுமில்லையுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(21.12.2006 தொடங்கி 27.12.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

தனு - சூரியன், வெள்ளி. கும்பம் - இராகு. சிங்கம் - சனி, கேது. விருச்சிகம் - வியாழன், கேது, புதன். சந்திரன், தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் பேறு, உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி, பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்ப நன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி குழப்பம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழிற் பகை, வீண் மனஸ்தாபம், கடன்பயம், உறவினர் உபத்திரம், மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி, குடும்பப் பாரம், பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், தூர இடப்பயணம், மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உயர்ந்தோர் நட்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக அலைச்சல், மனப்பயம், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்த எண்ணம், வெளியிடப் பயணம், குடும்பக் கலகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மாற்றம், கடன் சுமை, மனக்குழப்பம், மறைமுக எதிர்ப்பு, பெரியோர் உதவி, புதிய முயற்சி, குடும்பத் தொல்லை, பிள்ளைகளால் கவலை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் கஷ்டம், செலவு மிகுதி, கடன் தொல்லை, மனக்குழப்பம், பெரியோர் சகாயம், குடும்பப் பாரம், பிள்ளைகள் தொல்லை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனமகிழ்ச்சி, இனசன நன்மை, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மேன்மை, காரியத்தடை, செலவு மிகுதி, மனக்குறைநீங்கும், பெரியோர் உதவி, கௌரவம், குடும்பச் சுகம், எதிர்பாரா செலவு, உத்தியோக மாற்றம், மாணவர்க் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பலிதம், செலவு, புதிய முயற்சி, பெரியோர் பகை, வீண் குழப்பம், மனக்குறை நீங்கும், உறவினர் உபத்திரம், குடும்பக் கவலை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் பகை, மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பலிதம், மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், வெளியிட வாசம், அந்நியர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, பதவி மாற்றம், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, பொறுப்பற்ற தன்மை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பலிதம், பணவரவு, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், பிரயாணக் கஷ்டம், அந்நியர் சகவாசம், குடும்பத் தொல்லை, பிள்ளைகளால் கவலை, மாணவர்க் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)






2005 மே மாதம் 29ஆம் திகதி ஜேர்மனியின் நெஸ்டா டெற் எனும் இடத்திலுள்ள னுதுமு நெஸ்டாடெற் காற்பந்து மைதா னத்தில் பவேரியின் செஞ்சிலு வைச் சங்கக் குழுவினரால் நடத்தப்பட்ட மிகப் பெரிய முதலு தவிக் கற்கைப் பயிற்சி நடை பெற்றது. இந்தப் பயிற்சியில் 408 பேர் பங்கேற்றனர்.

1491 பேர் ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து பலூன்களை தொப்பி வடிவில் அணிந்து கொண்டு சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளனர். சிங்கப்பூரிலுள்ள சென்டோஸா என்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தும் குழுவினரால் இந்த நிகழ்ச்சியும் ஒழுங்கமைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி சாதனையாகப் பதியப்பட்டது 2005 ஆண்டு ஜுன் மாதம் 4ஆம் திகதியாகும்.



டுவோ டிசைன் கலை என்ற இந்த கலை வடிவம் விசித்திரமானது. அதாவது ஒருவரின் பாரம் இன்னொருவருக்கு ஒத்தாசையான செய்கையாக பார்க்கப்படுகின்றது. இப்படி ஒருவரின் பாரத்தை தனக்குத் தேவையான அளவுக்குப் பாவித்து கைகளின் துணையோடு சாகசங்களைச் செய்து காட்டுவதுதான் டுவோ டிசைன் கலை என்று கூறப்படுகின்றது. இலினாய்ஸில் நடைபெற்ற டுவோ டிசைன் குழுவினரின் கலை நிகழ்ச்சியே இதுவாகும்.

## டுவோ டிசைன்

**பிரமாண்டமான** மேடைகள் அமைத்து ஒளி பாய்ச்சி நடன நிகழ்ச்சிகளைச் செய்தாலும் கண்கொள்ளாக்காட்சியாக இரசிகர்களை கவரும் நடனம் என்றால் அது ஐஸ் கேட்டிங் தான். ஆண் பெண் தனித் தனியாகவோ, ஜோடி சேர்ந்தோ ஆடுகின்றபோது அவர்களின் உடல் அசைவும், முக பாவனையும், ஆகாயத்தில் பறப்பது போன்ற சறுக்கலும் கண்ணைக்கவரும் விதமாக அமைவதுண்டு. இங்கே தன் ஆண் துணையின் சாகசத்தோடு ஜோடியாகச் சறுக்கி நடனமாடும் இவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள், பல்கேரிய தலைநகர் சோபியாவில் நடந்த ஐஸ் கேட்டிங் போட்டி ஒன்றில் பார்வையாளர்களை பரவசப்படுத்திய காட்சி இது.

பார்க்கும் போது மலர் வளையம் போல் காட்சி தந்தாலும் மிக ஆபத்தான காடு வாழ் பூ இது. பெ ாக்ஸோனியூஸ் பெ ஸ் பிலியோலஸ் என்னும் தாவரவியற் பெயர் கொண்ட இதை காடு மூலிகை என்று அழைக்கின்றனர்.

இந்தப் பூவின் மொட்டுக்களில் இருந்தும், இடுக்குகளில் இருந்தும் வெளிப்படும் ஒரு வகை விஷமானது மனித உடலில் பட்டால், கடுமையான வலியையும், சுவாசக் கோளாறுகளையும், பாரிசவாதம் போன்ற கடும் நோய்களையும் ஏற்படுத்துகின்றது. உலகில் உள்ள பூக்களில் காட்டில் மலரும் இந்தப் பூ அதிக விஷமுள்ளதாக கருதப்படுகின்றது.




தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

**கொவிசெத லொத்தரின் அடுத்த**
**கோடீஸ்வரரா நீங்களா ?**

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



**கொவிசெத**

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம் www.nlb.lk